# போர்வாள்

பொங்கல் மலர்

★

விலை அணா எட்டு

ஆசிரியர்கள் :

காஞ்சி. மணிமொழியார் :: மா. இளஞ்செழியன்

| வாள் 4 | சென்னை 13—1—51 | வீச்சு 20 |
| --- | --- | --- |


# இல்லாத பொங்கல்!

★

பொங்கல் வந்துவிட்டது வழக்கம் போல! ஆனால் பொங்கல்தான் இல்லை தமிழ்நாட்டு இல்லங்களில்!

பொங்கற்புதுநாள் போந்துவிட்டதென்றால், இதற்குமுன்னரெல்லாம், தமிழ்நாட்டு இல்லங்களில் இன்பம் பொங்கும்; இசை பொங்கும்; எழில் பொங்கும்; மட்டற்ற உற்சாகமும் கூடவே பொங்கும். இன்பமும் இசையும் எழிலும் நல்உணர்வும் மட்டும்தானா—இல்லை இல்லை—இனிய உணவும் நாவூற ஊறப் பொங்கும்!

ஆனால், இந்த ஆண்டோ?

பொங்கல் வந்திருக்கிறது! என்றாலும் பூரிப்பு வரவில்லை தமிழர் உள்ளத்தில்! புன்னகை பிறக்கவில்லை தமிழர் திருமுகத்தில்! புதுமகிழ்வை நமக்களிக்கும் புத்துணவும் பொங்கவில்லை நம்முடைய இல்லத்தில்!

பொங்கல் இருக்கிறது—ஆனால்—பொங்கல் இல்லை! விழா உள்ளது—ஆனால் உணவு இல்லை.

பசி! பசி! பசி! — இந்த இரண்டெழுத்துச் சொல்தான் நாட்டிலே எந்த மூலையிலும் ஒலியும் எதிரொலியுமாகத் தோன்றி நம் இதயத்தை இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்கிறது!

உணவுப் பற்றாக்குறை! — இந்தப் பிரச்சினைதான், மக்கள் மன்றத்திலே, கண்ணீர்த் துளிகள் என்ற தூதுவர்கள்மூலமாக நித்த நித்தம் பேசப் பட்டுவருகிறது!

பரிதாபத்திற்குரிய பட்டினிப் பட்டாளங்கள்! — இவைகளைத்தான், தமிழகத்திலே, பட்டிதொட்டிகளில் எல்லாங்கூட நாம் கண்டு கசிந்து உருக வேண்டிய வேதனை நிலை உருவாகியிருக்கிறது.

இன்றையதினம் செந்தமிழகத்தை வாட்டி வதைத்துத் திக்கெட்டும் துயரகீதத்தைப் பரப்பிவரும் இந்தப் பயங்கரமான உணவுப் பஞ்சத்தைப் போன்றதோர் பெருங்கொடுமை இதற்குமுன், இந்நாட்டின் வரலாற்றிலே எப்போதுமே இருந்ததில்லை!

எங்கும் வேதனை! எங்கும் இருள்! எங்கும் விம்மல்ஒலி! எங்கெங்கும் கண்ணீர்த்துளி! எந்தத் திக்கை ஏறெடுத்துப் பார்த்தாலும், அங்கே, பசி, பஞ்சம், பட்டினி, உணவில்லாக் கொடுமை!

(தொடர்ச்சி 51-ம் பக்கம் பார்க்க)

# பொன்னாடு

# பொங்கலோ

[புரட்சிக் கவிஞர்

உண்டாயா பொங்கல்? வீட் டிற்பால்பொங் கிற்றா?
உட்காரப்பா உட்கார்! உற்றுக்கேள்! இங்கோர்
பண்தழைந்துவரு வதுகேள்! நன்றாய்க்கேள்! உன்றன்
பழநாட்டார் உள்ளத்தின் ஒலிஅதுதான் தம்பி!
பண்டுதொட்டுத் திராவிடத்தின் வடவெல்லை என்று
பகர்ந்துயர்ந்த விந்தியத்தின் இப்புறத்தி லுள்ள
எண்தவிர்ந்தார் எல்லாரும், "எங்கள்திரா விடந்தான்
என்றுவிடு தலையடையும்" என்கின்றார் அன்றோ!

பனியில்லை; குளிரில்லை; இருள்கிழித்துக் கொண்டு
பகலவன்தான் தலைகாட்டப் பல்காட்டி வாழ்த்தி
இனியில்லை மடமைஎன ஆர்த்தாயே தம்பி
இரு!பார்இ தோஅறிவுக் கண்ணாடி பூண்பாய்!
முனைக்குமரி விந்தியத்தின் இடைப்பாங்கு வாழும்
முத்தமிழர் எல்லாரும், இத்திராவி டந்தான்
இனியடிமைத் தளையறுத்து விடுதலையே கொள்ள
ஏற்றசெயல் செய்கின்றார் தெரிகின்ற தன்றோ!

தைத்திங்கள் முதல்நாளின் திருவிழா, உன்றன்
தனிமையினை நீக்கித், தி ராவிடரெல் லாரும்
எத்தாலும் ஒன்றென்று காட்டிற்றுக் கண்டாய்!
இனத்துநினை வெல்லாம்உன் மனத்தளவே அன்றோ?
முத்துநிறை கீழ்க்கடல்,மேற் கடல்,தெற்கே குமரி,
முன்வடக்கில் விந்தியமாம் மேவுதிரா விடர்கள்
ஒத்திந்த நாட்டினது விடுதலைக்கே என்றும்
உழைக்கின்றார் நிலங்குலுங்க உற்றறிநீ தம்பி

# வெல்கவே

# பொங்கல்!


பாரதிதாசன்]

என்நாடு பிரிகஎனப் பணிசெய்கின் றாய்நீ!
எதிர்ப்போனும் அதைத்தானே செய்கின்றான் தம்பி?
பொன்னாடு திராவிடமாம் என்கின்றாய் அஃது
புன்னாடென் றுரைப்பானும் பொன்னாடென் போனே
தென்னாட்டிற் கிளர்ச்சியினைச் செய்கின்றாய் நீதான்
சிரித்தபடி நிற்பானும் அதைத்தான்செய் கின்றான்
இன்னதனை நீயுணர மாட்டாயா தம்பி?
இனிவெற்றிக் கொடியேற்றல் ஒன்றுதான் பாக்கி!

மடமைஎன ஒன்றுண்டு! வாய்பெரிது! கையில்
வாள்ஒன்று வைத்திருக்கும்! சிறைவீட்டு வாயிற்
படிமீது நிற்கும்! பல் லாற்பல்லை மெல்லும்!
பார்என்று கூச்சலிடும்! போர்நிறுத்தக் கெஞ்சும்!
விடேன்என்று மேற்செல்வாய்! விடுதலையைச் செய்வாய்!
வீறிட்டுப் பாயும்உன் உடற்குருதி யால்உன்
கடமைசெய்வாய்! அம்மடமை தலைகவிழ்ந்து போகும்.

உன்நாட்டை மீட்கநீ உயிர்நீக்கப் பெற்றாய்;
உயிர்நீங்கச் செய்தானும் உன்நாட்டை மீட்டோன்!
தென்னாட்டிற் பிறந்தாயா? இல்லையா? நீஇத்
திருநாட்டின் மறவனா? இல்லையா? வீரர்
கல்நாட்டிக் கல்நாட்டிக் காலமெலாம் குருதிக்
கடலேழுக் கடலாகப் புகழ்நாட்டி னார்இப்
பொன்னாடு வெல்கவே பொங்கலோ பொங்கல்!
புதியதிரா விடம்வாழ்க பொங்கலோ பொங்கல்!

# மூன்றாண்டு காங்கிரஸ் ஆட்சி



# இரண்டு விருந்துகள்—ஒரு பாடம்!

[அறிஞர் அண்ணாதுரை]

"நண்பர்களே! என் அழைப்பிற் கிணங்கி நீங்கள் இந்த விருந்துக்கு வந்து என்னைக் கௌரவப்படுத்தியதற்காக என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாருங்கள் விருந்து மண்டபம் செல்வோம்" என்று அந்த அம்மையார் விருந்தினரை அன்புடன் அழைத்தார். சுவையுள்ள விருந்துக்கு முன்பு மதுரமொழியும் பெற்றோம் என்று மகிழ்ந்தனர் விருந்தினர். மண்டபம் புகுந்தனர். பெரிய மேஜை! அதிலே வரிசையாக நாற்காலிகள்! விருந்துக்கலத்திற்கேற்ற தட்டுகள், கோப்பைகள், யாவும் ஒழுங்காக இருந்தன. அமர்ந்தனர், மகிழ்வுடன்! உண்ணத் தொடங்கினர், மிரண்டனர்! ஏன்? தட்டுகள் யாவும் காலியாகக் கிடந்தன!! பண்டம் இல்லை! பானம் இல்லை! தட்டும் கோப்பையும் இருந்தன, கல்லாதவன் மனம் போல!!

விருந்துக்கழைத்த அம்மையார், "நண்பரீர்! இவ்விருந்தின் நோக்கம் யாதெனில், பெரும்பாலான இல்லங்களிலே, இப்படித்தான் சாப்பாட்டு நேரத்திலே வெறும் தட்டுகளைக் கண்டு கலங்கும் நிலை இருக்கிறது. அந்தப் பட்டினியை உணர்த்தவே இந்த 'விருந்து' நடத்தினேன்! நாம் விருந்துக்கு வந்தோம். உண்ணவில்லை, ஒன்றுமில்லாததால். இது போல் இலட்சக்கணக்கான மக்கள் உணவின்றித் தவிக்கின்றனர். இந்த கஷ்டத்தைப் போக்க நம்மாலான உதவி செய்யவேண்டும் என்று உங்களைத் தூண்டவே இந்த விருந்தை ஏற்பாடு செய்தேன்" என்றார்.

* * *

விசித்திரமான விருந்தாக இருக்கிறதே என்று கேட்பீர்கள்! விந்தையானதுதான் என்ற போதிலும், அதன் மூலம் விளக்கப்பட்ட உண்மை முக்கியமானது. விருந்தாக உண்ணப் பொருள் தரவில்லையே தவிர அந்த அம்மையார், சோறின்றிச் சோர்ந்த மக்களுக்கு உணவுதரும் உத்தம காரியத்தை அந்த விருந்தின் மூலம் நடத்தினாள். சூடான காப்பியோ, குளிர்ந்த பானமோ, தரவில்லை என்றாலும், ஏழைகள் பால் இரக்கம், அகதிகளிடம் அன்பு எனும் உணர்ச்சியை அழகாக ஊட்டினார்கள். அன்று விருந்து நடந்திருப்பின், நாவுக்கு ருசி, உடலுக்கு உரம், மனதுக்குக் கொஞ்சம் மகிழ்ச்சி மட்டுமே கிடைத்திருக்கும். ஆனால் நடைபெறாத விருந்து அந்த விருந்தினரின் கண்களுக்கும் கருத்துக்கும் வேலை கொடுத்துவிட்டது. கசிந்தனர், பின்னர் கஷ்டம் துடைக்க முனைந்தனர். அம்மையார், இளஞ்சூட்டோடு எடுத்து இனிமையான தேன் பெய்து மானின் கறியைத் தந்திருப்பினும், பதமாகக் காய்ச்சப்பட்ட பாலிலே, பாதுமை சத்துக் கலந்து பருகச் செய்திருப்பினும், பழவகைகள் பற்பல கொடுத்திருப்பினும் அந்த விருந்து, வரலாற்றுச் சுவடியிலே சேர்ந்திராது. ஏனெனில் மாளிகையிலே, இதைவிட மனோரம்மியமான விருந்துகள், அரண்மனைகளிலே அதனையும் விட ஆர்ப்பாட்டமான விருந்துகள், தங்கக் கோப்பைகளிலே வார்க்கப்பட்ட திராக்ஷை ரசத்தை, வைரமாலை அணிந்த வனிதாமணிகள் எடுத்துத்தர, வயோதிகத்தை மறைத்துக்கொண்டு, வாசனையாலும் பேச்சாலும், வளைவு நிமிர்த்தப்பட்டும் குழைவு சேர்க்கப்பட்டும் வாலிபராகக் காட்சி தரும் சீமான்கள் பருகி, கோப்பையின் ரசத்தைப் பருகியதால் கிடைத்த களிப்பைவிட அக் கோமளவல்லிகளின் புன்சிரிப்பு ஊட்டிய மகிழ்வே மேலானது என்று எண்ணிடக்கூடிய எவ்வளவோ விருந்துகள் நடைபெற்றுள்ளன. எனவே இந்த அம்மையார், விருந்தை, விருந்துமுறையிலேயே நடத்தியிருந்தால், நாம், இதனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கமாட்டோம். ஆயிரத்திலே அது ஒன்று ஆகியிருக்கும். ஆனால் அம்மையார் அளித்தது, யாரும் உண்ணாத விருந்து! உணர்வுக்கு விருந்து! கஷ்டமனுபவிக்கும் உலகுக்கு ஆறுதல்! விருந்து நடந்த இடம், இலண்டன். நடத்தியவர், ஓர் ஆங்கில மாது.

* * *

விருந்து என்று அழைத்ததும், வித விதமான பண்டங்கள் கிடைக்கும் என்று எண்ணிச் சென்றவர்கள், விருந்து நடந்த விதங்கண்டு வியந்திருப்பர் அந்த இலண்டன் விருந்திலே! வியப்பு இருந்திருக்குமே யொழிய அவர்களுக்கு மருட்சியோ, திகைப்போ ஏற்பட்டி

சாது. ஆனால் பலப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, தமிழரிடையே, வீரம் வற்றிப் போகாதிருந்த நாளிலே, சேரன் செங்குட்டுவன் ஆட்சியிலே, ஒரு விருந்து நடந்தது. அது இந்த இலண்டன் விருந்தைவிட விந்தையானது. அந்த விருந்தை உண்டவர், உண்மையிலேயே மிரண்டுதான் போயிருப்பர்! ஏனெனில், அவர்கள் விருந்து பெறக்கூடிய யோக்யதையுடையவர்களுமல்ல அதை அவர்கள் எதிர்பார்க்கவுமில்லை.

“கற்கோட்டையிலே, காவலுடன், கைகாலிலே தளைகளுடன் இருக்க நேரிடும்! கஞ்சியே கிடைக்கும்! கடினமான வேலை இருக்கும்! எதிர்க்கவோ, ஏனென்று கேட்கவோ முடியாது!! இருண்டது நம் வாழ்வு! அணைந்தது ஆணவம்! இனி அவர்களின் ஏவலரானோம்! அந்தோ! அவர்களையேன் நாம் அவதூறு செய்தோம்! அவர் தம் வீரத்தைப் பழித்தோம்! புன்மொழி புகன்றோம்! போர் மூண்டது, தோல்வி பெற்றோம்! சிறைப்பட்ட நம் சிரத்தின்மீது கருங்கற்களைச் சுமக்கச் செய்தனர்! தமிழகம், நமது நிலைகண்டு எள்ளி நகையாடிற்று! இந் நிலையிலே, நாம் நொந்த வாழ்வுதானே காணமுடியும்! அடிமை வாழ்வுதானே கிடைக்கும்!” — என்று கவலைகொண்டு, கண்ணீர் சொரிந்து, கூப்பிய கரமும் குழைந்த சொல்லும் கொண்டவராய், இரு அரசர்கள்!! அவர்கள் எதிர்பார்த்தது, எடுபிடி வேலை! காத்துக்கொண்டிருந்தது கஞ்சிக் கலயத்துக்கு! அவர்களுக்கு வந்தது விருந்துக்கு அழைப்பு! விருந்தென்றால் சாமான்யமான இடத்திலிருந்தல்ல, வேந்தன் விருந்துக்கு அழைத்தான்! வேந்தன் என்றால் வேறு யாருமில்லை, எந்த வேந்தன் வெற்றி பெற்றுத் தலைமீது கல் ஏற்றித் தங்களைக் கால்நடையாகக் கங்கைக்கரையிலிருந்து தமிழகத்துக்குக் கொண்டுவந்தானோ, அதே சேரன் செங்குட்டுவன், தோற்ற இருவரை, மண்டியிட்ட மன்னரை, கல்சுமந்த காவலரை, சிறைப்பட்டவர்களை, அடிமைகளை, யுத்தக் கைதிகளை, விருந்துக்கு அழைத்தான்!! அந்த அழைப்பு கேட்டபோது அவ்விரு மன்னரும், எவ்வளவு மருண்டிருப்பர்! அந்தக் காட்சி எப்படி இருந்திருக்கும்!!

இலண்டன் விருந்துக்குச்சென்று வெறும் தட்டுகளைக் கண்டவர்கள், விசித்திரம் என்று மட்டுமே கூறியிருப்பர். சேரன் செங்குட்டுவன் விருந்துக்கு அழைக்கிறான் என்ற செய்தி கேட்டதும், அந்த இரு மன்னர்களும், மிரள மிரள விழித்திருக்கமாட்டார்களா? “கைதிக்கு விருந்தா! வெற்றிவீரன் நம்மை விருந்து மண்டபத்துக்கு அழைக்கிறானாமே, நம்ப முடியுமா? கொலைக்களத்துக்கு இழுத்துச் செல்லப்போகிறார்கள் என்று செய்தி வந்திருப்பின், நம்பமுடியும், நமக்கு நேரிடக்கூடியது அதுதானே என்று எண்ணுவோம். ஆனால் அவர் நமக்கு விருந்தல்லவோ ஏற்பாடு செய்கிறாராம்!! ஐயோ! இதென்னவோ தெரியவில்லையே! என்ன நடக்க இருக்கிறதோ!”—என்று அவர்கள் கூறியிருப்பர், குளறி இருப்பர், கலங்கிப்போயிருப்பா!

* * *

“ஐயா! ஆரியமன்னரே! உங்களுக்கு விருந்து!”

“காவலாளிகளே! ஏதோ நாங்கள் எங்கள் கர்மபலனை அனுபவிக்கிறோம். கைதிகளான எங்களைக் கேலிவேறு செய்யவேண்டுமா?”

“கேலியல்ல! உண்மைதானய்யா! உங்களுக்குத்தான் விருந்தளிக்கப்போகிறார் எமது வேந்தர், செருமுனைச்சிங்கம், சேரன் செங்குட்டுவன்”

“அப்பா! வீணாக எம்மை வதைக்காதீர். நீங்கள் காலால் இடும் வேலையைத் தலையால் செய்யக் காத்திருக்கிறோம். எங்கள் வாழ்வுதான் ஒழிந்துபோயிற்றே! சேர பூபதியின் அடிமைகளான எம்மை, நீங்கள் விரும்பினால், கழுகுக்கும் நரிக்கும் விருந்தாக்கிவிடலாம்! எமக்கு விருந்து என்று கூறுகிறீரே!! வேண்டாமய்யா, வெந்த புண்ணிலே வேலால் குத்தாதீர்”

“வெந்தபுண்ணிலே வேலால்தான் குத்துகிறார் வேந்தர். ஆனால் அது உங்களையல்ல. எங்களை! உங்களுக்குக் கிடைக்கத்தான் போகிறது வயிறு வெடிக்குமளவு விருந்து”

சேரன செங்குட்டுவனிடம் தோற்றுச் சிறைப்பட்டு, சேரநாடு இழுத்துவரப்பட்ட ஆரியமன்னர்களான கனகன், விசயன், எனும் இருவருக்கும், சேரன் விருந்தளிக்க உத்திரவிட்டான். அதைக் காவலாளிகள், கனகவிசயரிடம் கூறினபோது, உரையாடல் மேலே தீட்டியபடி தானே இருந்திருக்க முடியும்! அம்மட்டோ!

* * *

“உண்மையாகத்தான் உத்திரவிடுகிறீர்களா, மன்னவா”

“உண்மைதான்! ஏன்? இதிலென்னப்பா விளையாட்டு, விருந்து நடத்தத்தான் வேண்டும்”

“விருந்தா! வீண் கர்வம்கொண்டு, தமிழரின் வீரத்தைப் பழித்துரைத்த வீங்கிய உட

வினருக்கு விருந்தா! களத்திலே நிற்கொணாது கால் பிடரியில்பட ஓடிய கோழைகளுக்கா விருந்து! வேந்தே! நகைச்சுவைக்குரிய பல மொழிகளை நான் கேட்டுள்ளேன். ஆனால், எம்மொழியும் இம்மொழியின் முன் நிற்காது. தோற்றோடின தொந்தியினருக்கு விருந்தாம்!''

“அமைச்சரே! நாம் உத்திரவிடுகிறோம், நம்மால் தோற்கடிக்கப்பட்டு, இங்குக் கல் சுமந்துவந்த கனகன் விசயன் எனும் இரு காவலருக்கும் விருக்து நடத்தவேண்டும்”

“கல்லைச் சுமந்துவந்த பெருவீரத்துக்கு மகிழ்ந்தா இவ்விருந்து”

“காரணமின்றிக் காரியமாற்றேன். கட்டளையை நிறைவேற்றும். காரணம் பிறகு விளக்குவேன். விருந்து நடக்கட்டும்”

சேரன் செங்குட்டுவன், கைதியான கனக விசயருக்கு விருந்திட உத்திரவு பிறப்பித்த போது மன்னருக்கும் அவர்தம் அமைச்சருக்கும், உரையாடல் வேறுவிதமாகவா அமைந்திருக்கமுடியும்!!

* * *

“விசயா! கங்கைக் கரையிலே, தமிழ் வீரர்கள், தருக்களை வேரறப் பிடுங்கியெறியும் சூறாவளிபோலச் சுழன்றனரே, அன்று ஏற்பட்டதைவிட இன்று எனக்கு கலக்கம் அதிகமாக இருக்கிறது. நமக்கு விருந்தாமே!!”

“ஆம், கனகரே! இந்த ஆச்சரியம் நமக்கூட்டும் அச்சம், இவ்வளவென்று அளவிட முடியவில்லை”

“விசயா! விருந்தென்று அழைக்கிறார்கள். என்ன நடக்கப்போகிறது தெரியுமோ?”

“கண்டதுண்டமாக்கி, நம்மைக் கழுகுக்கு விருந்திடுவார்கள்.”

“அதில்லை! இதோ ஈட்டி! இதை உங்கள் மார்பிலே ஆழப் பதியச் செய்கிறோம்! இது வாள், உமது வலது கரத்தைத் துண்டிக்கிறோம்! இது, கோடாரி, உடலைப் பிளக்க உதவும்! இந்தக் கூரிய அம்புகளால் உங்கள் கண்ணைத் தோண்டி எடுத்துவிடப் போகிறோம்! என்றெல்லாம், கூவப்போகிறார்கள்! அந்த ஆயுதங்களையே நமக்கு விருந்தாகத் தரப் போகிறார்கள்.”

கனகனும் விசயனும் கலங்கிப்போய் இது போலக்குளறி இருப்பர். வேறோர் புறத்திலேயோ, “மலைபோன்ற இத் தோளைச் சுமக்கின்றேன் வீணன்! என் மண்டலத்தை அவமதித்த ஆரியருக்கு, என் படைமுன் ஓடிய பேதையருக்கு, என் கோல்முன் கூத்தாடிய குறும்பருக்கு, என் கண்முன், என் கட்டளைப்படி, கல்லைத் தலையிலே சுமந்து வந்த கசடருக்கு, நான், என் கரத்தால், வெற்றிவாளேந்திய கரத்தால், அவர்களை என் மன்னன் அடி பணியச்செய்த கரத்தால், தமிழகத்தின் தாள் வணங்கச் செய்த கரத்தால், அந்தோ ‘பாவி’ அவ்விரு உருவங்கள், கங்கைக் கரையிலே மன்னர்களாக இருந்தன, நமது மன்னனைப் பழித்தன, இன்று நடைப்பிணங்களாயின’ என்ற மக்களுக்கு அந்த மதியிலிகளைக் காட்டிய கரத்தால், விருந்திட வேண்டுமாமே! வேந்தன் இவ்விதம் ஒரு கட்டளை பிறப்பித்தாரே, ஈதென்ன கொடுமை!” என்று கூறிச் சோதித்திருப்பான், வீரப் படைத்தலைவன் வில்லவன் கோதை.

சேரன் செங்குட்டுவன், மாடலன் எனும் பார்ப்பனரின் மொழியிலே மயங்கினான்! மயக்கவைத்தவன், ‘வீரவேந்தே! வெற்றி பல கண்டாய் இங்கு, அங்கு வெற்றிகாணவேண்டாமா?” என்று கேட்டான். அங்கு என்றால் அந்த உலகம் என்றான்! அந்த உலகம், மேலுலகம் என்று கூறினான். வீர வேந்தனிடம் வீணுரை புகுத்தினான். உறையிலிட்டவாள் போலாயிற்று மன்னனின் மன உறுதி! மாடலன், மன்னனை வென்றான்! களத்திலே கடும்புலி போலிருந்த மன்னனை, வேள்வி செய்யச் சொன்னான். பாசறை அமைத்ததுபோதும், பர்ணசாலைகள் அமைத்திடு என்றான். வீர வாழ்வு போதும், வேதியருக்காகவாழ்! என்றான். கங்கைக் கரைவரை புகழ் பரப்பிய காவலன், அஞ்சா நெஞ்சுடைய அரசன், தமிழகத்தின் தன்மானத்தைக் காக்கவே தனக்கு வாளும் இரு தோளும் உள்ளன என்று உறுதிகொண்டிருந்த வேந்தன், மாடலனின் பேச்சால் மயங்கினான்.

அம்மயக்கத்தின் விளைவே, மண்டியிட்டுக் கிடந்த ஆரியமன்னருக்கு, விருந்திடச் சொன்னது! அதிலும் கனகவிசயரைத் தோற்கடித்த தீரப்படைக்கு யார் தலைவனாக இருந்தானோ, அதே வில்லவன் கோதையையே அதே கனக விசயருக்கு விருந்திடச் சொன்னான். விரண்டு தான் போயிருப்பர் விப்பிர வேந்தர் இருவரும்! ஊர் மக்கள், திகைப்புண்டு போயிருப்பர்! ஆனால், மாடல மறையோன், மறைவிடத்திலிருந்துகொண்டு, புன்னகை புரிந்திருப்பான்!!

வில்லவன்கோதை அன்று அளித்த விருந்து, இன்றுவரை தொடர்ந்து நடக்கிறது. விப்பிரர்கள், வில்லவன் கோதை அளித்த

விருந்திலே விலாப்புடைக்கத் தின்றூர்கள் என்பதல்ல விசனத்துக் குரியது. மற்று எது எனில், தோற்றம் தோத்திரத்துக்கு ஏற்றவர்களாரூர்களே ஆரியர்கள், அந்த அளவுக்கு அரசன் செங்குட்டுவனை மட்டந்தட்டினூனே மாடலன் என்ற மறையோன் என்பதே சிந்தனைக்குரியது, சோகமூட்டக் கூடியது.

இலண்டன் விருந்து ஐரோப்பாவிலே, இல்லாதாரின் நிலையை உணர்த்திற்று. வில்லவன் கோதை நடத்திய விருந்து வீணராம் வேதியருக்கு, நமது வெற்றி வீரர்கள் மயங்கி, இடமளித்ததைக் காட்டுகிறது.

* * *

இன்றுவரை, நமது வெற்றிவீரர்கள், வேந்தர்கள், செல்வவான்கள், யாவரும், வில்லவன் கோதைகளாகவே உள்ளனர். தமிழகத்திலே, மொழியை, கலையை, அரசை, தன்மானத்தை, வளத்தை அழிக்கவிரும்பி ஆரியர் நடத்திய தாக்குதல்களிலே, களங்களிலே, நமக்குச் சேரன் செங்குட்டுவர்கள் அவ்வப்போது கிடைத்து வந்திருக்கிறூர்கள். அவர்களின் வீரத்தின்முன்பு, கனகவிசயக் கூட்டம், தோற்று வந்துதானிருக்கிறது. போரிலே புலிகளாகவே நாம் இருந்துள்ளோம். இன்றுங்கூடத்தான்! அரசியல் ஆற்றலிலே, நமது சர். சண்முகத்திடம், ஆரிய அரசியல் தலைவர்கள் என்னசெய்ய முடியும்! நமது சர். இலட்சுமண சுவாமியார்முன், ஆரிய வைத்தியர்கள் என்ன செய்யமுடியும்! நமது சர். இராமசாமியார்முன், எந்த ஆரியர்தான் சொற்பொழிவுத் திறனிலே ஈடாகமுடியும்! நமது ராஜா சர் முன், எந்த ஆரியன் வியாபாரத்துறையிலே போட்டியிட்டுச்சமாளிக்க முடியும்! நமது மறைமலை அடிகளார், காவலர் பாரதியார் ஆகியோர்முன் எந்த இராகவ ஐயர்களேனும் என்ன செய்ய முடியும்! ஆம்! இறுமாப்போடு கூடச்சொல்லலாம், தனித் தனித் துறையிலே தலையாய நிலையினைத் தமிழர் பெற்றுள்ளனர்—திறமையால், தகுதியால், ஆரியரின் போட்டியை எதிர்த்து ஒழித்து! வீரவாளேந்திய வெற்றி வேந்தர்கள் காலமுதற் கொண்டு, விற்பன்னர்களான நமது மாபெருந் தலைவர்களின் காலம் வரையிலே, ஆற்றலிலே ஆரியனைத் தமிழர் தோற்கடித்துள்ளனர்! ஆனுல், அன்று முதல் இன்றுவரை, நமது ஆற்றல்மிக்க தலைவர்கள், வில்லவன் கோதைகளாகவே உள்ளனர்! களத்திலே தோற்று, கல் சுமந்தனர் கனகவிசயர்! மாடலனின் சொல்லைச் சுமந்தான், கனகவிசயர் தலையிலே கல்லைஏற்றிய சேரன்! மாடலன், கனகவிசயர் தோற்றதை நாடு மறந்துவிடும் படியான தந்திரக்காரியம் செய்தான். வில்லவன் கோதை விருந்தளித்தான், ஆரியருக்கு விருந்துதந்தான். இன்றும் சேரன் செஙகுட்டுவன்போலக் களத்திலே கீர்த்தியுடன் உலவும் மாவீரர்கள்போல் உள்ள தலைவர்கள்பலர் உளர் தமிழகத்திலே! ஆனுல் அவர்களின் மனையிலேகூட அல்ல, மனதிலே மாடலன் உறைகிறுன்!! வெற்றிவீரரை, அந்த மாடலன் மடக்குகிறுன், மயக்கமூட்டுகிறுன்!! அவன் மொழிகேட்டு, "வில்லவன் கோதை விருந்து" களை, நமது மாவீரர்கள் இன்றும் நடத்துகிறூர்கள், வீரத்தை இழக்கிறூர்கள், வீணர்கள் கொழுக்கிறூர்கள்! "வில்லவன் கோதைவிருந்து," வீரன், வீணரின் வெற்றுரையிலே மயங்கி வீழ்ந்ததற்கு ஓர் எடுத்துக் காட்டு, நண்பரீர், இதனை நீவிர் எடுத்துக் காட்டுக காட்டினருக்கு. இத்தகைய "வில்லவன் கோதைவிருந்துகள்" இனியும் நடைபெற இடந்தராதீர், இன அழிவுக்கு வழி கோலாதீர். இலண்டன் விருந்து நடத்திய அம்மை அறிவுபரப்பினர். வில்லவன் கோதை அளித்த விருந்து, அழிவை விதைக்க உதவிற்று. அந்த விருந்தையும் இந்த விருந்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள் — சரியானதோர். பாடம் கிடைக்கும்.


HEALTH HOUSE
T'NAGAR, MADRAS-17.

"கர்ப்பத்தடைக் களஞ்சியம்" 20 படங்களுடன் கூடியது ரூ. 1. "மூத்தத்தின் மர்மம்" அணு. 6. தபால் செலவு தனி.

ஆண், பெண் கையாளக் கூடிய கர்ப்பத்தடைச் சாதனங்கள் அடங்கிய சாம்பிள் செட் ரூ. 4. தபால்செலவு தனி.

எமது பிரசுரங்களுக்கு இலங்கையில் சோல் ஏஜண்டுகள்:—

மோகன் & கோ.

66, முதலாம் குறுக்குத் தெரு, தபால் பெட்டி. 964, கொழும்பு;

Higginbothams ஸ்டால்களில் எமது பிரசுரம் கிடைக்கும்.

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுதேவை

# வரி வாங்கவேண்டிய முறை

[டாக்டர் மு. வரதராசனார் எம். ஓ. எல்.]

வயிற்றுக்கே போதாமல் போராடிக்கொண்டிருக்கும் ஏழை மக்களிடம் வரி வாங்கவேண்டிய முறை ஒன்று; வயிறு நிரம்பி வழிந்து பெட்டிகளிலும் பாங்கிகளிலும் பணம் தேங்கும் செல்வரிடம் வரிவாங்க வேண்டிய முறை வேறு.

இதுதான் குடியரசு (ஜனநாயக ஆட்சி) நிலவும் எல்லா நாடுகளிலும் கையாளப்படும் வரி முறை.

நம் நாட்டிலும் உழவர்களுக்கு வருமான வரி இல்லாமல் இருப்பது இந்தக் காரணத்தால்தான். உழுது பயிரிடுவோர்க்கு எவ்வளவு காணி நன்செயும் புன்செயும் இருப்பினும் பெட்டிகளிலும் பாங்கிகளிலும் பணம் தேங்குவதற்கு இடம் இல்லை. ஆனால் மாதம் இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம் வாங்கும் தொழில் உடையவரும் வருமான வரி செலுத்த வேண்டியுள்ளது. காரணம் அவர்களின் வருவாய் வயிற்றுத் தேவை தீர்ந்து மிகுதியாகக் கூடியது என்ற கருத்தே ஆகும்.

ஆனால் சில வரிகளில் இந்த முறையை முற்றிலும் கையாள முடிவதில்லை. விற்பனை வரியை எடுத்துக் கொள்வோம். வயிற்றுப் போராட்டம் உடையவர்களும் விற்பனைவரி செலுத்தவேண்டியிருக்கிறது. ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகளான மிளகாய் முதலியவற்றிற்கும் விற்பனைவரி இருக்கிறது. ஆகவே அவர்களும் விற்பனைவரி செலுத்த வேண்டியிருக்கிறது. அன்றாட உணவுப் பொருள்களாகிய சிலவற்றிற்கு விற்பனை வரி ஏற்படுத்தாமல் விலக்கியிருக்கலாம். அதனால் குறையும் வரிவருவாயை, ஆடம்பரப் பொருள்களின்மேல் விற்பனை வரியாக மிகுதியாக்கலாம். பட்டு, வெள்ளி, பொன், ரத்தினம், விலை உயர்ந்த வாசனைப் பொருள்கள், வெளிநாட்டிலிருந்து டப்பிகளிலும் புட்டிகளிலும் வரும் சத்துப் பொருள்கள் முதலிய பலவற்றிற்கு ரூபாய்க்கு இரண்டணா மூன்றணா என்றும் விற்பனை வரி வாங்கலாம். ஏன் எனில், மிகுதியான அந்த வரி, பெரும்பான்மையான ஏழைமக்களின் வாழ்க்கையைத் தாக்காது. வயிற்றுக்கே போதாமல் போராடும் அவர்களின் போராட்டத்தை மேலும் நெருக்கடி யாக்காது. வளமாக வாழும் சிலர் அந்த மிகுதியான வரித் தொகையைச் சேர்த்துக் கொடுப்பதில் துன்பமும் இருக்காது.

சினிமா முதலான பொழுது போக்குத் துறைகளில் அவ்வாறு வரி வாங்கப்படுகிறது. டிக்கட் வாங்கும் ஒவ்வொருவரும், கொடுத்த பணத்தில் ஒரு பங்கு வரியாகச் செலுத்துகிறார்கள். வயிற்றுக்குப் போதாத ஏழை மக்களும் அங்கு வருவார்களானால், அவர்களும் மற்றவர்களைப்போல் ஒரு பங்கு வரி செலுத்த வேண்டியுள்ளது. அதனால் குறை இல்லை! அந்த ஒரு நாள் ஒரு வேளைக்கு மட்டும் அவர்கள் மற்றவர்களைப் போல் கவலை தீர்ந்தவர்களைப் போல் பொழுது போக்கிச் சினிமா பார்க்க விரும்புகிறார்கள். ஆகையால் அதற்குரிய வரிப்பணத்தைச் செலுத்தவேண்டியது கடமை ஆகிறது. ஆனால் உப்பு மிளகாய் வாங்கும்போது அவற்றோடு விற்பனை வரியும் சேர்த்துக் கட்டும் நிலைமை வேறு. உணவைத் துறந்து வாழும்படியாக அவர்களை வற்புறுத்த இடம் இல்லை. புட்டி உணவுகளையும் டப்பிப் பழங்களையும் துறந்து உயிர் வாழலாம். ஆனால் கூழையும் கஞ்சியையும் சுவை குறைந்த சோற்றையும் துறந்து உயிர் வாழ முடியாது என்பதை உணரவேண்டும்.

அதே போல், ஏழை மக்களின் எளிய திருமணத்திற்கு வரி வேண்டியதில்லை. ஆனால்

செல்வர்கள் பெரிய பந்தலும் சிறந்த அலங்காரமும் செய்து வரவேற்று நடத்தும் திருமணங்களுக்கு வரி விதிப்பது தவறாகாது. ஆடம்பர அலங்காரம் செய்வதற்காகச் செலவிடும் பணத்தோடு ஒரு சிறிது தொகை, நாட்டின் நன்மைக்காக, வரியாகக் கொடுப்பது நல்ல கடமை; அது அவர்களுடைய நாட்டுப்பற்றையும் காட்டுவதாகும். ஆகவே, தனிப்பட்டவர்கள் கொண்டாடும் ஆடம்பரக் கொண்டாட்டங்களில் வரி விதிப்பது முறை ஆகும். பந்தலின் அகலம் நீளம் கணக்கெடுத்து, மற்ற அலங்காரங்களையும் அளந்தறிந்து, அடிக்கு இவ்வளவு என்று வரி வாங்குவது குடியாட்சி முறைக்கு ஏற்றதும் ஆகும். அந்த விழாக்களுக்கு வருவார் போவாரைக் கணக்கிடும் கருவி வைத்து அதன் வாயிலாக ஆட்களை அளவிட்டு வரிவாங்கினாலும் முறையே ஆகும்.

இவ்வாறு வரி செலுத்துவதே இக் காலத்தில் அறம் செய்வது என்ற மனப்பான்மை ஏற்படவேண்டும். பழங்காலத்தில் ஆறில் ஒரு பங்கு அரசனுக்கு இறையாகக் கொடுப்பது கடமை என்ற உணர்ச்சி நாட்டு மக்களுக்கு இருந்தது. குடியாட்சியில் பலவகை வரிகள் கொடுப்பதும் அறத்தைச் சார்ந்த கடமை என்ற எண்ணம் குடிமக்களுக்கு ஏற்படவேண்டும் அதுவரையில், "அறம் செய விரும்பு" என்று சொல்லிக்கொண்டிருப்பதால் பலரும் அறம் செய்துவிட மாட்டார்கள். வரி விதித்து வாங்குவதால் பலருக்கும் அந்த எண்ணம் உண்டாகச் செய்யலாம். எடுத்துக்காட்டாக, பெருஞ் செல்வர்க்கு வருமான வரி மிகுதியாக இருப்பதால், வரி குறையும் வகையில் அறம் செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்படுகிறது அதனால் சிலர் கல்வி நிலையங்களையும் பத்திரிகைகளையும் நடத்தி அறம் புரிகின்றனர். மறைக்காமல் வரி கொடுப்பது முதல் கடமையாக வற்புறுத்திய தன் பயனாக, இரண்டாந்தரமான இந்த அறச் செயல்களையாவது செய்ய முயல்கிறார்கள். ஆகையால், இதுவும் வரவேற்கத் தக்கது ஆகும்.

இங்கிலாந்து முதலான நாகரிக நாடுகளைப் பின்பற்றி விதிக்க வேண்டிய வரி மற்றொன்று உள்ளது. அதுதான் மரணவரி என்பது. ஒருவர் இறந்த பிறகு, அவருடைய செல்வத்தில் மக்களுக்குப் பங்குஇருப்பதுபோல், அரசாங்கத்திற்கும் ஒரு பங்கு அமைவதே மரணவரி என்பது. ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் இந்த மரணவரி இருப்பதால், அங்கெல்லாம் செல்வர்கள் தம் மரணத்திற்கு முன்பே செல்வத்தில் பெரும்பங்கைப் பொதுத்தொண்டுக்கு எழுதி வைக்கிறார்கள். எத்தனையோ பல்கலைக் கழகங்கள் இவ்வாறு தனிப்பட்டவர்களின் செல்வத்தால் நடைபெறுகிறது. அங்கே கல்விக்காக அரசாங்கம் செலவிட்டால்தான் உண்டு என்ற நிலைமை இல்லை. பெரும்பாலான கல்வி நிலையங்கள் தனிப்பட்டவர்களின் அறச்செயலாலேயே நடைபெறுகின்றன. நம் நாட்டில் அப்படிப்பட்ட வரிமுறை இல்லாத காரணத்தால், அத்தகைய கல்வி நிலையங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மிகச் சிலவே இருக்கின்றன.

அந்த நாடுகளில் ஒருவர் இறந்த பிறகு விட்டுச் செல்லும் சொத்தில் முதல் பங்கு அரசாங்கத்தைச் சார்வதாகும். முழுச் சொத்தையும் பொது நலத்திற்கு எழுதிவிட்டு இறந்தாலும் ஒரு பங்கு அரசாங்கத்திற்கு மரணவரியாகப் போய்ச் சேரும். இங்கிலாந்தில் உள்ள அந்தச் சட்டத்தால், இன்று அறிஞர் பெர்னாட்ஷாவின் சொத்தில் முதல் பங்கு அரசாங்கத்திற்கு உரிமை ஆகிறது. ஆங்கில மொழி வளர்ச்சிக்காகவும், அயர்லாந்திற்கும் இங்கிலாந்திற்கும் இடையே கலையுறவுக்காகவும், முழுச் சொத்தையும் அவர் எழுதி வைத்து விட்டார். சொத்தில் முதல்பங்கு மரணவரியாகப் போகும் என்று தெரிந்தும் மனமார அவ்வாறு செய்தார். அதுதான் இந்த நூற்றாண்டிற்கு உரிய அறம் உணர்ந்தவரின் செயலாகும். காலம் மாறுவதற்கு ஏற்ப அறமும் அதன் கூறுகளும் மாறும் என்பதை நன்கு உணர்ந்தவர் பெர்னாட்ஷா. ஆகையால் தயங்காமல் அவ்வாறு செய்தார்.

பாடுபட்டுத் தந்தை சேர்த்து வைக்கும் சொத்து முழுதும் மகனுக்குத்தானே சேர வேண்டும் என்ற பிற்போக்கு எண்ணமே இன்னும் நம் நாட்டில் உள்ளது. அந்த எண்ணம் குடியாட்சி முறைக்கு ஏற்றதாகாது. தந்தை பாடுபட்டு நூல்கள் எழுதுகிறார்; அவருடைய மகனுக்கும் பேரனுக்கும் அந்த நூல்கள் உரிமை ஆவதில்லை. ஐம்பது ஆண்டுகளுக்

குப் பிறகு நூல்கள் எல்லோருக்கும் பொது வுரிமை ஆகின்றன. யார்வேண்டுமானாலும் அச்சிட்டு விற்றுக்கொள்ளும் உரிமை பெற லாம். ஷெல்லியின் நூல்களை இன்று யார் வேண்டுமானாலும் அச்சிட்டுக் கொள்ளலாம். அதுபோலவே, விஞ்ஞானத் துறையில் ஒரு வர் புதிதாகக் கண்டுபிடிக்கும் சிறந்த கருவி யைப் பதினான்கு ஆண்டுகளுக்கு மேல் யார் வேண்டுமானாலும் உண்டாக்கி விற்றுக் கொள்ளலாம். கண்டுபிடித்தவரின் மக்க ளுக்கு உரிமை போய்விடுகிறது. கியூரி அம்மையார் போன்றவர்கள் கண்டுபிடித்த சிறந்த பொருள்கள் இன்று உலகத்தார்க் கெல்லாம் உரிமையாக உள்ளன. ஆனால் பாட்டன் பாடுபட்டுச் சேர்த்த செல்வத்தில் பேரனுக்கு மாறாத உரிமை என்றென்றும் இருக்கிறது; பேரனுடைய பேரனுக்கும் அவ னுடைய பேரனுக்கும் இருக்கிறது. நூல் கள் எழுதுவதைவிட, விஞ்ஞானக் கருவி கள் கண்டுபிடிப்பதைவிட, சொத்துச் சேர்த்து வைப்பது அருமையான முயற்சியா? போற்றத்தக்க முயற்சியா? அல்ல, அல்ல. நூல்கள் பொது நன்மைக்குத் துணை செய் யும்; விஞ்ஞானக் கருவிகள் துணை செய்யும்; ஆனால் வழிவழியாக வரும் செல்வ மேம் பாடு பொது நன்மைக்கும் ஊறு செய்யும்; அந்தக் குடும்பத்தில் பிறக்கும் மக்களையும் சோம்பேறிகளாக்கியும் செருக்குடையவர்க ளாக்கியும் கெடுக்கும். பொது நன்மைக் காகவே பாடுபடும் எழுத்தாளர் விஞ்ஞானி களின் மக்களுக்கு உரிமை குறைவு! பொது நன்மையை மறந்து சொத்துச் சேர்த்து வைத்திடும் செல்வரின் மக்களுக்கு எல்லா உரிமையும் உண்டு! அதனால்தான் நாகரிக நாடுகள் வரி முறையைத் தக்கவாறு அமைக் கின்றன; நம் குடியாட்சியிலும் அத்தகைய நல்ல வரிமுறை அமைய வேண்டாமா?

---


**திராவிடர் இயக்க நூல்கள்**

அனைத்தும்
ஒருங்கே கிடைக்குமிடம்

**பகுத்தறிவுப் பாசறை**

பவழக்காரத் தெரு :: சென்னை 1.

**சிறந்த நூல்கள்**

அறிஞர் அண்ணாதுரை 1 0

அண்ணாவைப்பற்றித் தமிழ் நாட்டு அறி ஞர் பலரின் கருத்துக் காவியங்களைக் கொண்ட தொகுப்பு நூல். அழகிய மூவர்ண அட்டையுடன்.

அண்ணாவின் வாழ்க்கைக் குறிப்புகள் 0 4

அண்ணாவின் அழகிய முகப்படத் துடன். பழமநீ எழுதியது.

கட்டழகி காஞ்சனா 1 4

ஒரு ஆடலழகியின் அந்தஸ்த்து வாழ்க் கையைச் சித்தரிக்கும் சுவை நிறைந்த நவீனம்,

சேரன் எழுதியது. அழகிய மூவர்ண அட்டையுடன்.

வியாபாரிகளுக்குக் கழிவு 20 சதம்.
அனுப்பும் செலவு இலவசம்.

**பாரி நிலையம்**

59, பிராட்வே சென்னை-1

**மிஷினரிகள்**
**விற்பனைக்குத் தயார்**

ஆயில் என்ஜின்கள், எலக்டிரிக் மோட்டார்கள், தண்ணீர் பம்புகள், கரும்பாலைகள், பிண்டோடைப் ரோட்டரி ஆயில் மில்கள், ரைஸ், மாவு மில் கள், பாலில் வெண்ணெயெடுக்கும் மிஷன், பாக்குத்தூள் மிஷன்கள்.

இன்னும் பலவித மிஷினரிகள் விபரங்களுக்கு எழுதவும்.

தந்தி "NAVASTAR" போன் 3472

**மதுரூஸ் மில் ஸ்டோர்ஸ்**

302, லிங்கிசெட்டி தெரு,
POST BOX 174, G. T. மதுரூஸ்.

# சென்னை அளித்த சிறந்த விடை

"ஆட்சியாளர்களின் அளவுக்குமீறிய அடக்குமுறை ஆவேசத்திற்கு ஆற்றல் அதிகமா? அல்லது, தீரத் திராவிடரின் திடநெஞ்சத்தில், சிறந்ததோர் இடம் பெற்றிருக்கும் சீரிய கொள்கைகளுக்கு ஆற்றல் அதிகமா?"

"போலீஸ் வீரர்களின் கைகளில் சுழலும் குண்டாந்தடிகளின் வல்லமை பெரிதா? அல்லது 'பெற்றால் திராவிடநாடு—இல்லையேல் இடுகாடு' என்று வீரமுழக்கம் புரியும் வேங்கைக் கூட்டத்தவரின் உள்ள உரத்தின் வல்லமை பெரிதா?"

"எதேச்சாதிகாரம்— கண்மூடி ஆட்சி-பதவிப் பித்து—அதிகார மோகம்—இவைகளுக்குள்ள திறமை சிறந்ததா? அல்லது, நீதி-நேர்மை—நியாயம்—ஒழுக்கு—இனப்பற்று-தமிழ்வீரம்— இவைகள் பெற்றிருக்கும் திறமை சிறந்ததா?"

"வடஇந்திய ஏகாதிபத்யம், அதன் தென் இந்தியக் கொலுப் பொம்மைகளோடு ஒன்றாகச் சேர்ந்துகொண்டு உல்லாசமாக ஆடிக்காட்டும் வெல்லிங்டன் தர்பார் நல்லதா நாட்டுக்கு? அல்லது சுதந்தரம்-சமத்துவம்—சகோதரத்துவம் என்னும் மூன்று சிறந்த மாளிகைகளை எழுப்ப அல்லும் பகலும் ஓயாதுழைத்துவரும் திராவிடர் இயக்கத்தின் திறமைமிக்க பணி நல்லதா நாட்டுக்கு?"

"எது தேவை நம் சமுதாயத்துக்கு? திராவிட வீரமா அல்லது ஆரிய பேரமா? சியாங்-கே-ஷேக் மார்க்கமா அல்லது மா—சே- துங் பாதையா? திருவள்ளுவர் கண்ணோட்டமா அல்லது பகவத்கீதை பாராயணமா? டில்லியுடன் கட்டுண்டு கிடக்கும் அடிமை வாழ்வின் அவல நிலையா அல்லது விடுதலைத் தனியரசு அமைத்து வீர வாழ்வு வாழும் விவேகமுள்ள நிலையா? எது தேவை இவற்றில்—எது தேவை?"

"முழந்தாளிட்டுக்கொண்டே உயிர் வாழ்வதைவிட நிமிர்ந்து நின்றபடி மாள்வது மேல் என்றானே இத்தாலிய வீரன் மாஜினி, அந்த வாசகம் சிறந்ததா, அல்லது, டில்லி நம்மைக் குட்டக்குட்ட அதற்குக் குனிந்துகொடுப்பதுதான் தேசபக்தி என்கிறார்களே இந்த நாட்டுக் கிராமணிகள் சிலர்—இந்த வாசகம் சிறந்ததா?"

"கண்களுக்கு ஒளி எப்படியோ, நுரையீரலுக்குக் காற்று எப்படியோ, அப்படித்தான், மனித சமுதாயத்திற்குச் சுதந்தரம் இன்றியமையாத பொருள் என்று எழில்ததும்பும் மொழியாலே கருத்துச் சுவைததும்ப இயற்றினானே இங்கர்சால் ஓர் எழுத்தோவியம், அந்த ஓவியம் நம் உள்ளத்தைக் கொள்ளைகொள்ள வேண்டுமா? அல்லது எந்த வடநாடு நம்மை எப்படி உதாசினப்படுத்தினால் என்ன—சுதந்தரத் தனியரசு நமக்கெதற்கு என்று வேகவேகமாகத் தீட்டுகிறார்களே விசித்திர செங்கல்வராயர்கள் ஓர் எழுத்தோவியம்—இந்த ஓவியம் நம் நெஞ்சில் நிலைத்திடவேண்டுமா?".

ஆம்! இந்தக் கேள்விகளைத்தான், ஆயிரமாயிரம் அஞ்சாநெஞ்சர்களின் அறப்போர் நிலையமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகம், சென்ற 7-1-51 ஞாயிற்றுக்கிழமையன்று, சென்னை நகரத்தை நோக்கிக் கேட்டது.

சென்னை விடை கூறியிருக்கிறது இக்கேள்விகளுக்கு—சிறந்த முறையில்! மிகச் சிறந்த முறையில்—மிகமிகச் சிறந்த முறையில்! நாட்டிலே உள்ள நல்லறிவாளர்கள் அனைவரும் நன்று நன்று என்று பாராட்டிப் புகழ்ந்து போற்றி ஆதரிக்கும் முறையில்!

"ஆட்சியாளர்களின் அடக்குமுறை ஆயுதத்தைவிட மக்கள் மன்றத்தில் எக்களிக்கும் எண்ணங்களுக்குத்தான் ஆற்றல் அதிகம்."

"குண்டாந்தடிகளின் குருட்டுப் பார்வையைவிட இலட்சிய வீரர்களின் வீர முழக்கத்திற்குத்தான் வல்லமை மிகுதி."

"வடஇந்திய ஏகாதிபத்தியம்—தென் இந்திய ஆரியம்— இவற்றின் கூட்டாட்சியைவிட சேரன் செங்குட்டுவனின் சந்ததியினர் தென்னாட்டில் தனியாட்சி நிறுவி தனிவாழ்வு வாழ்வதுதான் சிறந்தது."

"எதேச்சாதிகாரப் பாதை எள்ளளவும் நமக்குத் தேவையில்லை, திருவள்ளுவர் வகுத்த திருநெறியே தென்னாட்டுக்குப் போதும்."

"சுதந்தரம் எமது பிறப்புரிமை. பெற்றே தீருவோம் நாங்கள் திராவிடத் தனியரசு."

"டில்லிபுரியாரின் ஆட்சியல்ல, சுவர்க்கமே எமது சிறையாக அமைந்தாலும் அதன் சுவர்களைத் தாண்டிக் குதிக்கவே நாங்கள் விரும்புவோம். அடிமை வாழ்வை ஏற்றுக்கொள்ள ஒருபோதும் நாங்கள் எண்ணவும் மாட்டோம்."

இதுதான், சென்னை, 7-1-51 ஞாயிறன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கித் தந்துள்ள சீரிய விடையின் சிறந்த பகுதி.

இந்த அரிய விடையை, சென்னை, வெறும் வார்த்தைகளால் கூறவில்லை. கண்ணியமே உருவான காங்கிரஸ் கனவான்களின் குண்டாந்தடிகள் கோரமான உருவெடுத்து சென்னை மக்களின் உடலை வாட்டி வதைத்தபோதும், புன்முறுவல் பூத்த முகத்துடனே பூமாலையை ஏற்பார்போல் நின்ற வண்ணம், "திராவிடநாடு திராவிடருக்கே

வடகாட்டு மந்திரியே திரும்பிப் போம்'' என்று வீரமுழக்கமிட்டார்களே அந்த அஞ்சாநெஞ்சர்கள், அந்த அற்புதமான செயல்மூலம் அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறது.

7-1-51 ஞாயிறன்று சென்னைக்கு வந்தார் டில்லி ஆட்சிப்பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் அற்புதசித்தர்களில் ஒருவராகிய அன்பர் ஹரிகிருஷ்ண மேதாப்.

நாடாண்ட வீர இனத்தவர்கள்தான் திராவிடர்கள்—ஆனால் அவர்களை ஓடேந்திப் பிச்சை எடுத்து உயிர் வாழ்ந்தாகவேண்டிய பட்டினிப் பட்டாளமாக ஆக்கிவிட்டது டில்லி.

கங்கையை வென்ற இராஜேந்திரனையும், கடாரத்தை வென்ற இராஜராஜனையும் தங்கள் மூதாதையர்களாகக் கொண்ட முத்தமிழர் பரம்பரைதான் திருவிடத்துத் தீரர்கள்—ஆனால் அந்த வாளேந்திய வீரர் கூட்டத்தைத்தான் வடவர்தம் தாளேந்தும் தாசர் நிலைமைக்கு இறக்கிவிட்டது டில்லி.

வடஇமயத்தில் புலிக்கொடியைக் கம்பீரமாகப் பறக்கவிட்ட மன்னர் மன்னன் செங்குட்டுவனையும், தென்னிலங்கையிற் பல பகுதிகளை வென்றுண்ட வீரவேந்தன் பராந்தகனையும் தங்களிடத்திலே உருவாக்கிக் கொடுத்த உன்னத சமுதாயம்தான் திராவிட சமுதாயம்—ஆனால் அந்த சமுதாயத்தைத்தான் அலட்சியப்படுத்தவேண்டிய அலங்காரப் பதுமைகளாக எண்ணிவிட்டது டில்லி.

அந்த டில்லிபுரியின் அமைச்சர்களில் ஒருவர்தான் ஹரிகிஷ்ண மேதாப்.

எனவேதான் அவருக்கு, அவர் எந்த வடஇந்திய ஆதிபத்யத்தின் அடையாளச் சின்னமாக இருக்கிறாரோ அந்த ஆதிபத்யத்தை அடியோடு வெறுக்கிறது தென்னாடு என்பதை அவருக்கு எடுத்துக்காட்டும் தோரணையில், பல்லாயிரக் கணக்கில் சென்று அவர் பார்வையைக் கவரும் விதத்தில் கருப்புக்கொடி காட்டுவதென்று முடிவு செய்திருந்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

7-1-51 ஞாயிறு காலை 9-30 மணிக்கு அமைச்சர் மேதாப் சென்னை சட்டக்கல்லூரிக்கு எதிரிலே உள்ள யுனைடெட் இந்தியா லைப் அஸ்யூரன்ஸ் கம்பெனிக் கட்டிடத்திற்கு வருகைபுரிகிறார் என்பதறிந்த சென்னைத் திராவிட சமுதாயம் காலை 6-30 மணி முதலே அந்த இடம் நோக்கி சென்னையின் நாலாபுறங்களிலிருந்தும் பறந்து செல்லலாயிற்று.

வண்ணாரப்பேட்டை, இராயபுரம், பெரம்பூர், ஓட்டேரி, புரசைவாக்கம், எழும்பூர், சேத்துப்பட்டு, சைதாப்பேட்டை, அம்மன்கோயில், முத்தியாலுப்பேட்டை, பெத்துநாய்க்கன்பேட்டை, திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் ஆகிய ஒவ்வொரு வட்டாரத்திலேயிருந்தும் ஒவ்வொரு மக்கட் கடல் கரைபுரண்டோடி வந்தது சட்டக்கல்லூரி உள்ள வட்டாரத்தை நோக்கி!

நேரம் ஆக ஆக, கூட்டம், அளவில் பெருகிக்கொண்டே வந்து, சுமார் 8 மணி அளவில், மாபெரும் ஜன சமுத்திரமாகக் காட்சி அளித்தது.

அந்த நேரத்தில் அங்கு செறிந்தும் மிடைந்தும் துதைந்தும் நிறைந்துமிருந்த மக்கட் கடல், காண்பவர் எவரையும் பிரமிக்கச் செய்யத்தக்க அளவு பிரம்மாண்டமானதாக இருந்தது.

கிழக்கே பாரிஸ் கார்னர் முதல், மேற்கே பூக்கடை வரையில் உள்ள மூன்று பர்லாங் தூரமும் மனித வெள்ளம்.

அதுபோலவே வடக்கே பிராட்வே முனையிலிருந்து தெற்கே கோட்டை இரயிலடி வரை உள்ள நெடுந்தொலைவு முழுமையும் மாபெரும் திரள்!

குழுமியிருந்த மக்களின் தொகை ஒன்றரை இலட்சம் என்ற எண்ணிக்கைக்குச் சிறிதும் குறையாது—அவ்வளவு பெருங்கூட்டம்! அவ்வளவு பிரம்மாண்டமான மனித வெள்ளம்!

ஓர் அமைச்சருக்குக் கருப்புக்கொடி காட்டித் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வதற்காக இவ்வளவு பெருங்கூட்டம் இதற்குமுன் இந்தியத் துணைக் கண்டத்தில், எங்குமே, எப்போதுமே, கூடியதாகத் தெரியவில்லை.

வரலாறு கண்டறியாத காட்சி—நாட்டில் ஆள வந்தார்கள்மீது எவ்வளவு வெறுப்பும் எரிச்சலும் மூண்டிருக்கிறது என்பதற்குச் சரியானதோர் சாட்சி—அன்று அங்குக் கூடியிருந்த மக்களின் மாட்சி.

மூதறிஞர் உள்ளம் போல, வானத்தின் விரிவு போல, இந் நிலவுலகின் அகல நீளம் போல, பரந்து விரிந்து பார்க்குமிடமெங்கும் நீக்கமறக் காட்சி அளித்தது அம் மக்கட் கூட்டம்.

கூட்டம் கடலென இருந்தாலும், குழப்பம், ஊசி முனையளவும் இல்லை.

சிறு சலசலப்பில்லை.

சந்தடி துளியளவுமில்லை.

பலாத்காரப் பரபரப்போ, அர்த்தமற்ற ஆர்ப்பாட்டமோ கொஞ்சமும் இல்லை.

கூடியிருந்த ஒன்றரை இலட்சம் பேரும் அமைதியின் சின்னங்களாக, ஒழுங்குமுறையின் உடைமும் உதாரணங்களாக, கட்டுப்பாட்டையும் கண்ணியத்தையுமே தங்கள் வாளாகவும் கேடயமாகவும் கொண்டவர்களாக, அமைச்சர் மேதாப் வருகையையே எதிர்ப்பார்த்தவராக நின்றிருந்தனர்.

8-30 மணி இருக்கும்.

திடீரென்று மாபெரும் போலீஸ் பட்டாளமொன்று மக்கட் கடலின் உள்ளே புகுந்து ஒரு காரணமுமில்லாமல் மக்களைத் தடியால் அடித்துக் கோரமாகத் தாக்கி மூர்க்காவேசத்துடன் சுழன்று சுழன்று வரலாயிற்று.

நிமிஷத்திற்கு நிமிஷம் போலீஸ் லாரிகள் புதிது புதிதாக வந்து குவிந்தபடி இருந்தன.

வந்து குவிந்த ஒவ்வொரு லாரியிலிருந்தும் குண்டாந்தடிகளைப் பொதுமக்கள் மீது ஓங்கி ஓங்கி அடித்த வண்ணம் போலீஸ் கான்ஸ்டபிள்கள் கூட்டம் கூட்டமாக இறங்கினர்.

சாதாரண போலீஸ் பட்டாளம் மட்டுமல்லாமல் ஸ்பெஷல் ரிசர்வ் போலீஸ் படைகள் வேறு நூற்றுக்கணக்கில் வந்து நிறைந்தன.

ஆயுதம் தாங்கிய போலீஸார் 'ஜீப்' கார்களில் ஏறிக்கொண்டு கண்மண் தெரியாமல் கூட்டத்தினுள் புகுந்து பொதுமக்களைப் படாதபாடு படுத்தத் தொடங்கினர்.

கூடியிருந்த ஒன்றரை லட்சம் பேர் மீதும் பயங்கரமான தடியடி தர்பாரை நடத்தி, பலரைப் பலத்த காயத்திறகுள்ளாக்கி, சுமார் அரை மணி நேரத்திற்குள்ளாக, அமைச்சர் வரவேண்டிய இடத்தைச் சுற்றி சுமார் ஒரு சதுர மைல் பரப்பளவிற்கு போலீஸ் ஆள் அரவத்தைத் தவிர வேறு மனித நடமாட்டமே இல்லாதபடி அந்த இடத்தை வெறும் பாலைவனமாக மாற்றி விட்டனர் போலீசார்'

அந்த இடத்தை அந்த நேரத்தில் பார்த்தவர்கள் யாரும் அங்கே ஓங்கி உயர்ந்துள்ள அந்தக் கட்டிடங்கள் மட்டும் இல்லாமலிருந்தால் அந்த வட்டாரத்தை மக்கள் வாழும் பகுதி என்று கூறியிருக்க மாட்டார்கள். சுடுகாடு என்றுதான் நிச்சயமாகக் கூறியிருப்பார்கள். அந்த அளவுக்கு ஆள் அரவமே அற்றுப் போகும்படி செய்யப்பட்டது மந்திரியார் வர இருந்த மண்டலம்.

சட்டக் கல்லூரி வட்டாரம் இதுபோல மனித ஓட்டாரமே அற்ற இடமாகப் போலீசாரால் சுத்தம் செய்யப்பட்டு வந்த அதே நேரத்தில், அந்த இடத்திலிருந்து ஏறத்தாழ பத்துமைல்களுக்கு அப்பால் உள்ள பறங்கிப்பேட்டையிலிருந்து பத்தடிக்கு ஒரு போலீஸ் கான்ஸ்டபில் வீதம் பாதையின் இரு மருங்கும் ஏராளமான போலீஸ்காரர்கள் வரிசை வரிசையாக நிறுத்தப்பட்டனர்.

பத்தடிக்கு ஒரு போலீஸ் யூனிட் வீதம் ஒவ்வொரு பத்து போலீஸ்காரர்கள் நிற்குமிடம் தாண்டியதும், அங்கங்கே ஒரு போலீஸ் யூனிட் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த முறை, பறங்கிப் பேட்டையிலிருந்து சென்னைக் கோட்டை இரயிலடிவரை கையாளப்பட்டது.

கிழக்கே கடற்கரை இரயிலடியிலிருந்து மேற்கே பூக்கடை வரையிலும், வடக்கே ஸ்ரீராமுலு பார்க்கிலிருந்து தெற்கே கோட்டை ரயிலடிவரையிலும், இதைவிட மிக நெருக்கமாக போலீஸ் வீரர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்,

தடியடி, விடாமல் நடந்தபடி இருந்தது.

கருப்புக் கொடி காட்ட வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தீரர்கட்கு மட்டுமல்ல—அங்கே நடப்பது இன்னது என்பதையே அறியாமல் வேறு வேலையாக அங்கே வந்த பொதுமக்களிற் பலருக்கும் பலமான அடி.

நமக்குப் போட்டியாக அமைச்சர் மேதாப்பை வரவேற்றதாகக் காட்டிக் கொள்ள வந்த தேசியத் தோழர்கள் பலர் படுகாயமடைந்த காட்சி மிகவும் பரிதாபகரமானதாக இருந்தது.

ஒரு காங்கிரஸ் தோழர்—கதர் சட்டையும் அணிந்திருக்கிறார்—வேகவேகமாக வந்தார் அமைச்சர் மேதாப்பை வரவேற்று உபசரிக்க! அவர் கையைப் பிடித்து இழுத்து வெளியே தள்ளினார் ஒரு போலீஸ்காரர். உடனே அக் காங்கிரஸ் தோழர், "நான் சூனாமானா அல்ல மிஸ்டர்! காங்கிரஸ்வாதி மிஸ்டர்! மேதாப்பை வரவேற்க வேண்டும் மிஸ்டர்!" என்று உரத்த குரலில் கூவ, "வரவேற்பாவது மண்ணாங்கட்டியாவது—போன்னா போய்யா" என்று போலீஸ் வீரர் எரிந்து விழ, அப்படியும் அத் தேசியவாதி போக முடியாதென மறுக்க, இறுதியில் அவர் அப் போலீஸ்காரரின் குண்டாந்தடியால் தாக்குண்டு புழுப்போல் துடித்த நிகழ்ச்சி காண்பவர் அனைவர் உள்ளத்தையும் உருகவைக்கும் தன்மை படைத்ததாக இருந்தது.

இதே நேரத்தில், ஸ்ரீராமலு நாயுடு பார்க் அருகில் ஒரு கல்லூரி மாணவர் கோட்டை ரயிலடி நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவர், தனக்கும் திராவிட இயக்கத்துக்கும் துளியும் தொடர்பில்லை என்பதைப் பலமுறை எடுத்து விளக்கியும் கூட, போலீஸ் தோழர்கள் இருவர் அவரைச் சூழ்ந்து கொண்டு கைப்புடைத்தனர். இந்தச் சேதியைக் கேட்டால் கல்லும் கசிந்துருகும். மரமும் கதறி அழும். அவ்வளவு பரிதாபம், கோரமமை நிறைந்த சம்பவம் அது!

சைனாபஜாரில் உள்ள மாடர்ன் கபே ஓட்டலில் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தனர் சிலர். ஏழெட்டு போலீஸ்காரர்கள் ஓட்டலுக்குள்ளே புகுந்து, சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்த அவர்களை இழுத்து நிறுத்தி அடித்த காட்சி—அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!—மனித உள்ளம் படைத்த எவராலும் சகிக்கக் கூடியது அன்று.

பிராட்வே முனையில் உள்ள அம்பீஸ் சிற்றுண்டிச்சாலையிலும் இதுவே போன்றதோர் போலீஸ் திருவிளையாடல் நடைபெற்று, அங்கே சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்த பலருக்கும் தடியடித் தழும்பு ஏற்படலாயிற்று.

அன்றையதினம் தடியடிபட்டவர்களிற் பெண்களின் தொகையே அதிகம்.

பிராட்வே முனையில் ஓர் அம்மையார் சிறு மூட்டையைத் தலையில் சுமந்த வண்ணம் சென்று கொண்டிருந்தார்கள். திடீரென்று போலீசார் அந்த அம்மையாரைத் துரத்திக் கொண்டோடி வந்து தடியால் அடித்துத் துன்புறுத்திய கொடுமை

சொற்களின் எல்லைக்குள் விவரித்துக் கூறக் கூடிய ஒன்றன்று.

சாதாரண கான்ஸ்டேபில்களை விட அசிஸ்டெண்ட் கமிஷனர்கள் போன்ற உயர்தர அதிகாரிகளே தடியடி தர்பாரை மிக ஜரூராக நடத்திக் காட்டினர்!

வேகமாக ஓடிக் கொண்டிருந்த நிரபராதிகளை அதைவிட வேகமாக ஓடிச்சென்று துரத்திப் பிடித்து நிற்கவைத்து அடித்த அக்கிரமத்தை எத்தனைமுறை கண்டித்தாலும் தகும்—அவ்வளவு அநீதி நிறைந்த அருவருக்கத்தக்க செயல் அது.

ஆட்சியாளர்களின் அடக்குமுறை ஆவேசம், போலீஸ்காரர்களின் தடியடி மூலமாக, இவ்வளவு தூரம் விஸ்வரூபம் எடுத்து விபரீத விளையாட்டு ஆடியுங் கூட, திராவிடப் பெருங்குடி மக்கள், போலீஸ்காரர்களைத் திருப்பித் தாக்க வேண்டுமென்ற தீய நினைப்புத் துளியளவும் கொள்ளாமல் கண்ணியத்துடனும் சகிப்புத்தன்மையுடனும் நடந்து கொண்ட நல்ல முறை மிகமிகப் பாராட்டப்பட வேண்டியதோர் பெருந்தன்மைப் பண்பாகும்.

தடியடி, வேகவேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்த இந் நிலையில், கருப்புக்கொடி அணிவகுப்புக்குத் தலைமை தாங்கி அதை நடத்தி சென்ற "போர்வாள்" ஆசிரியர் காஞ்சி மணிமொழியார் அவர்களும், சென்னை மாவட்டத் தி. மு. க. செயலாளர், தோழர் கே. கோவிந்தசாமி, தலைமைக் கழகச் செயற்குழு உறுப்பினர் பஞ்சாட்சரம் ஆகிய மூவரும், யுனைடெட் இந்தியா கட்டிடத்திற்கு அருகே நின்று கொண்டிருந்த அசிஸ்டன்ட் கமிஷனர் ஒருவரிடம் சென்று, "நாங்கள் அமைதியானமுறையில் கருப்புக்கொடி காட்டிவிட்டுச் செல்லத்தான் வந்திருக்கிறோமே தவிர வேறு எத்தகைய தவறான செயல் புரியவுமல்ல. ஆகையால் எங்கள் மீது தடியடி தர்பார் நடத்துவது குடியாட்சி முறைமைக்கே ஒத்தது ஆகாது" என்று கூறினர்.

அதற்கு, **அசி. கமிஷனர்:**—இல்லை! முடியாது! கருப்புக்கொடி காட்ட நான் அனுமதிக்க மாட்டேன்.

**தோழர்கள் காஞ்சி மணிமொழியார், கே. கோவிந்தசாமி, பஞ்சாட்சரம் மூவரும்:**—நீங்கள் கூறுவது சரியில்லை. கருப்புக் கொடி காட்டுவது சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள முறைதானே!

**அசி. கமி:**—அதெல்லாம் எனக்குத் தெரியாது. சென்னை நகர போலீஸ் சட்டப்படி போலீஸ் லைசென்சின்றி, ஐவருக்குமேல் கூடக் கூடாது.

**இவர்கள்:**—ஐவருக்குமேல்தானே கூடக் கூடாது' சரி. நாங்கள் மூவர்தானே இருக்கிறோம். எங்களைமட்டும் கருப்புக் கொடி காட்ட அனுமதிக்கலாமே தாராளமாக.

**அசி. கமி:**—அதுகூடக் கூடாது.

**இவர்கள்:**—ஏன்?

**அசி. கமி:**—கூடாது என்றால் கூடாது. அவ்வளதான். நீங்கள் இந்த இடத்தைவிட்டுச் செல்லுங்கள்.

**இவர்கள்:**—முடியாது. அமைச்சர் மேதாப்பிற்குக் கருங்கொடி காட்டிவிட்டுத்தான் நாங்கள் இந்த இடத்தைவிட்டு அகல்வோம்.

இவர்கள் இப்படிச் சொன்னதும், இவர்கள் மூவரையும், அசிஸ்டெண்ட் கமிஷனர் உடனே கைது செய்து, அருகே உள்ள சட்டக் கல்லூரி போலீஸ் ஸ்டேஷனில் சிறைவைத்தனர்.

இவர்கள் கைது செய்யப்படுவதற்கு முன்னதாகவே, சென்னை நகராட்சிமன்ற உறுப்பினர் தோழர் முனிசாமி, சென்னை மாவட்டத் தி. மு. க. உறுப்பினர் தோழர் சி. வி. இராசன் ஆகிய இருவரும் கருப்புக் கொடி காட்ட முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தனர்.

அடுத்து,

**சென்னை நகராட்சி உறுப்பினர் தோழர் என். ஜீவரத்தினம்,**

**ஆர். அங்கமுத்து,**
**மறைமலை,**
**கே. பார்த்தசாரதி,**
**பி. இராமச்சந்திரன்'**
**ஏ. பி. செல்லக்கண்ணம்மாள்,**
**ஏ. பி துரைராஜ்,**
**சி. எம். சாமி,**
**எப். கலைமணி,**
**பி. இரங்கநாதன்.**

ஆகிய பத்துப் பேரும் கைது செய்யப்பட்டனர்.

தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு ஏதோ வேலையாக வந்திருந்த கிறித்தவ நண்பர் தோழர் ஜெபசிங் என்பவர், கறுப்புத் தோலால் பைண்ட் செய்யப்பட்ட பைபில் புத்தகத்தைக் கையில் வைத்திருந்தார் என்ற ஒரே காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டார்.

இவ்வளவு திருவிளையாடல்களும் நிகழ்ந்த பிறகு, 9-30 மணி அளவில், டில்லி அமைச்சர் மேதாப், சுற்றிலும் போலீஸ் முகங்களைத் தவிர மக்கள் முகம் ஒன்றைக்கூடக் காணமுடியாத பரிதாபகரமான நிலையில் வந்து சேர்ந்தார்.

அவர், யுனைடெட் இந்தியா கட்டிடத்திற்கு வந்தபோது ஜே கோஷம் உண்டா—இல்லை!

பூமாலைகள் விழுந்தனவா அவர் கழுத்தில்—கிடையாது!

பொதுமக்கள் ஆரவாரம்?—துளியும் இல்லை!

பரிதாபம்! பரிதாபம்!—இப்படித்தான் வாய்விட்டுக்கூறி, அவர் நிலைக்கு அனுதாபம் தெரிவித்திருப்பர், அவரை அன்று அப்போது கண்ட எவரும்!

யுனைடெட் இந்தியா கட்டிடத்திற்குள் நுழைந்தார் மேதாப்—எண்ணி ஐம்பது பேர்கூட இல்லை அங்கே அவரை வரவேற்க!

இந்த ஐம்பது பேரைக் காணவேண்டிய அற்புதமான பணியைப் புரியத்தான் வெளியே திரண்டிருந்த ஒன்றரை லட்சம் பேரையும் தடியால் அடித்து விரட்டிடவேண்டிய நிலையை உருவாக்கியிருக்கிறார் மேதாப்!

* * * *

பகல் $2\frac{1}{2}$ மணிக்கு, மேதாப், யுனைடெட் இந்தியாவை விட்டகன்றதும், சிறைப்பட்ட நம் தோழர்கள் அனைவரையும், நீங்கள் இனி வெளியே போகலாம் என்று கூறினர் ஒரு போலீஸ் அதிகாரி. உடனே நம் தோழர்கள் வெளியேற முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டனர். திகைத்துப்போன அதிகாரி ஏன் என்று கேட்டார். "ஏன்? அன்பர் ஆசைத்தம்பிக்கு மொட்டையடித்துவிட்டு, மூன்று மாதம் சென்றதும், நாங்களா மொட்டையடித்தோம்—அதெல்லாம் வெறும் பொய் என்று கூறிவிட்டது இந்த அரசாங்கம். அதுபோலவே, இன்று எங்களைச் சிறைப்படுத்திய சம்பவத்தையும் நாளை இல்லை என்று மறுக்கக்கூடும். ஆகவே எங்களைச் சிறைப்படுத்தி வைத்திருந்ததை போலீஸ் டைரியில் எங்கள் எதிரில் எழுதி 'ரிகார்ட்' செய்யுங்கள். பிறகே நாங்கள் போவோம்" என்று அமைதியாக, ஆனால் அழுத்தம் திருத்தமாகக் கூறினர் நம் தோழர்கள். முதலில் முடியாது என்று மறுத்தாலும் இறுதியில் போலீஸ் அதிகாரிகள் நம் தோழர்கள் விரும்பிய வண்ணமே நடந்து, சிறைவாழ்வை ரிகார்ட் செய்தபிறகு, நம் இயக்க வீரர்கள் விடுதலை பெற்றனர்.

* * * *

அமைச்சர் திவாகர் வந்தபோது அவருக்குக் கருங்கொடி காட்டத் திரண்ட கூட்டத்தைவிட, அன்பர் ஆச்சாரியார் வந்தபோது கூடியகூட்டம் பலமடங்கு அதிகம்.

அதுபோலவே, ஆச்சாரியார் வருகையின் போது ஈண்டிய மக்கள் தொகையைவிட சென்ற வாரம் மேதாப் வந்தபோது வந்துகுவிந்த மக்கட் கடல் மேலும் பலமடங்கு அதிகம்.

ஆளவந்தார்களின் அடக்கு முறை, வலுக்க வலுக்க, திராவிடர் இயக்கத்தின் ஆற்றல் மேலும் மேலும் வளருமேதவிர குறையாது என்பதை விளக்க இந்த உண்மை ஒன்றே போதும்.

வாழ்க திராவிடர் இயக்கம்!

## 1916-ல் இம் மாபெருந் தலைவர்கள் தூவிய சிறு விதைதான்




திராவிடத் தந்தை
**தியாகராயர்**



அறப்போர் வீரர்
**டாக்டர் நாயர்**

## 1951-ல் திக்கெட்டும் வளர்ந்திருக்கும் திராவிடர் இயக்கம்.

# அண்ணா ஆற்றிய அருஞ் செயல்கள்



(மா. இளஞ்செழியன்)

இங்கிலாந்துக்கு ஒரு எச். ஜி. வெல்ஸ். அயர்லாந்துக்கு ஒரு பெர்னாட்ஷா. அமெரிககாவுக்கு ஒரு இங்கர்சால். சோவியத் ரஷ்யாவுக்கு ஒரு மாக்சிம் கார்க்கி. பிரஞ்சு நாட்டுக்கு ஒரு வால்டேர். ஜெர்மானியர்கட்கு ஒரு காரல் மார்க்ஸ். ஆம்! அதுபோலத் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கும் ஓர் ஒப்பற்ற அறிஞரேறு, அண்ணாதுரை.

மக்கள் மன்றத்தை முற்றிலும் மறந்துவிட்டு மூலையில் முடங்கிக் கிடக்கும் மூதறிஞர் குழுவைச் சேர்ந்தவர் அல்லர் அண்ணாதுரை. பொதுவாழ்வுப் போர்க்களத்தில் நேரிடையாகக் குதித்து, அஞ்சா நெஞ்சுடன் அறப்போர் புரிந்து வரும் அரிய செயல் வீரர்.

அவர், தமிழகத்தில், இதுவரை ஆற்றியிருக்கும் அருஞ் செயல்கள் ஏராளம்.

அவை அத்தனையையும் ஒருங்கே தொகுத்துக் கூறுவது அல்ல இக் கட்டுரையின் நோக்கம்.

கலை உலகம், திராவிட இயக்கம், சுயமரியாதை மன்றம்—இம் மூன்று துறைகளிலும் அவர் உருவாக்கியுள்ள மறுமலர்ச்சியை மட்டும் மக்கள் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துவது இக்கட்டுரை.

செந்தமிழ் நாட்டில் இதுபோது ஒரு மகத்தான மறுமலர்ச்சி சகாப்தம் உருவாகியிருக்கிறது. நெடுங்கால உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தவன் திடீரென்று விழித்தெழுந்து திக்கெட்டும் பவனிவரத் தொடங்கியது போல, இரவெல்லாம் இமைமூடிக் கிடந்த கமலம் கதிரவன் வரவு கண்டதும் களிப்புமிகக் கொண்டு கண்களை அகலத் திறந்து இன்ப ஒளி வீசித் திகழ்வதுபோல, பன்னெடு நாட்களாக ஊமையாக இருந்தவன் திடீரென ஓர் நாள் பேச்சாற்றல் பெற்று மடமடவென வார்த்தைகளை அள்ளி இறைக்கத் தொடங்கியதுபோல, வேதம்—புராணம்—இதிகாசம்—தலைவிதி தத்துவம்—சாதி வேறுபாடு—ஆரிய மாயை—சடங்கு சம்பிரதாயம்—மூட நம்பிக்கை ஆகிய பல்வேறு நோய்களால் தாக்குண்டு தன் பலமெல்லாம் சிதைந்து சீர்கேடுற்றுக் கிடந்த தமிழ் நாடு, இப்போது, விழிப்புணர்ச்சி பெற்று, எழுச்சிநடை போட்டு நடக்கத் தொடங்கிவிட்டது. இந்தத் தமிழ் நாட்டு மறுமலர்ச்சியில் அறிஞர் அண்ணாதுரைக்கு ஒரு நிலைத்த இடம் உண்டு என்பதை அவருடைய பிறவிப் பகைவரும் மறுத்தல் இயலாது.

நெடுந்துயிலில் ஆழ்ந்து கிடந்த தமிழர் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி, அதைப் புத்துலகப் பாதைக்குச் "செல்க" என ஆணையிட்டார் பெரியார் எனில், புராணம் எனும் துருப்பிடித்துக் கிடந்த தமிழர் கலையைத் தட்டித் தீட்டிக் கூர்மையாக்கி அதற்குப் புரட்சிப்பிடி இட்டு, அதைப் பகுத்தறிவுப் போராட்டத்திற்குரிய போர்வாளாக மாற்றி யிருக்கிறார் அண்ணா!

"பேச்சு மேடையா—அங்கே அண்ணாவின் "பாணி"யில் பேசாதவர்கட்கு இடம் கிடையாது"

"பத்திரிகை உலகமா—அங்கே அண்ணா கையாளும் தமிழ் நடையைக் கையாண்டால்தான் தனி மதிப்பு!"

"சிறுகதை வட்டாரமா — அங்கேயும் அண்ணாவின் முத்திரை மோதிரம்தான் பொறிக்கப்பட்டிருக்கிறது"

"நாடக அரங்கமா—அங்கு மட்டுமென்ன—அண்ணாவின் பேனா நர்த்தனம் அல்லது அதன் எதிரொலி இல்லையேல் எந்த நாடகத்திற்குத்தான் ஏது மதிப்பு இந் நாளில்?"

"திரைப்படக் காட்சிதானே!—அங்கே கிடப்பது இப்போது அண்ணா சகாப்தம்தான்!"

இப்படியெல்லாம் தமிழர்கள், இப்போது பூரிப்புடனும் பெருமையுடனும் பேசிக்கொள்கிறார்கள். இந்தப் பேச்சு வெறும் பேச்சு அல்ல—உண்மையின் நிழற்படம். அண்ணாவின் பேனாமுனையிலிருந்து தெறித்தோடி வரும் எழுத்துக்களால், அல்லது அவர் எழுத்துக்கள் போலவே அமைந்துள்ள பிறர் எழுத்துக்களால் 'நகாசு வேலை' செய்யப்படாத எந்தச் சிறுகதை அல்லது நாவலுக்கும், எந்த நாடகம் அல்லது திரைப்படத்திற்கும், எந்த எழுத்தோவியம் அல்லது கட்டுரை அமைப்பிற்கும் இப்போதெல்லாம் பொதுமக்களின் பாராட்டுதல் கிடைப்பதே இல்லை. பொதுமக்களின் பாராட்டுதல் மட்டுமா—அறிஞர் உலகத்தின் ஆசிமொழியும் கிடைப்பதில்லை. தமிழ்நாட்டு எழுத்தாளர் உலகமும், பேச்சாளர் உலகமும், ஏறத்தாழ இந் நாளில், அண்ணாவின் கரமும் அண்ணாவின் குரலுமாகவே இருக்கின்றன. இந்த அளவுக்கு, அண்ணா, தமிழ்ப் பேச்சையும் தமிழ் எழுத்தையும் மாற்றி அமைத்து மறுகோலம் செய்திருக்கிறார் — எனவேதான் அவர், தமிழ் இலக்கியத்தின் உரைநடை மறுமலர்ச்சித் தலைவர் என்றழைக்கப் படுகிறார்—தவறென்ன இருக்கமுடியும் அப்படி அழைப்பதில்?—யார்தான் அதைத் தவறென்று அப்படிக் கூறமுடியும்?

'தமிழ்நாட்டு மறுமலர்ச்சி' என்று பொதுவாக அழைக்கப்படும் சொற்றொடர், பல்வேறு பகுதிகளைத் தன்னகத்தே அடக்கிக் கொண்டிருக்கும் பிரம்மாண்டமானதோர் மாளிகையாகும்.

இந்த மகத்தான மறுமலர்ச்சி மாளிகையின் அரசியல் பகுதிக்கு அடிப்படை அமைத்தவர்—கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார். சமுதாயப் பகுதிக்குக் கால்கோள் நிகழ்த்தியவர்—திராவிடத் தந்தை தியாகராயர். பகுத்தறிவுப் பகுதிக்கு இடம் தேடிக் கொடுத்தவர்—வெண்தாடி வேந்தர் பெரியார் இராமசாமி. கவிதைப் பகுதியில் புதுவழி கண்டவர்—புத்துலகக் கவிஞர் பாரதிதாசன்.

நேர்மைப் பண்பும் வரலாற்று அறிவும் படைத்த கண்ணியவான்கள் எவரும் இந்த உண்மைகளை மறுக்கமாட்டார்கள். இவையே போலத்தான், தமிழ் உரைநடைத் துறையில், மறுமலர்ச்சி மன்னர் என அழைக்கப்படும் அரியநிலை பெற்றவர் அறிஞர் அண்ணாதுரை என்பதையும் மறுக்கமாட்டார்கள்.

கலைத்துறையில், அண்ணா, எப்படி ஒரு பெர்னாட்ஷாவாக இருந்து, தமிழர் கலையை ஆரிய வலையிலிருந்து மீட்டு தமிழர் நிலையை உயர்த்தும் சிறந்த உலைக்களமாக அதைத் திருத்தி அமைத்துத் தீரமிக்க பணிபுரிந்திருக்கிறாரோ, அப்படித்தான், திராவிட இயக்கத் துறையிலும், அவர், ஒரு லோகமான்ய திலகராக ஒளிவீசி, அதுவரை மிதவாதக் கட்சியாக மெள்ள மெள்ள ஊர்ந்து சென்று கொண்டிருந்த ஜஸ்டிஸ் கட்சியை, அதிதீவிரக் கருத்துக்கள் கொண்ட திராவிடர் கழகமாக மாற்றி அமைத்து மறுவடிவம் கொடுத்திருக்கிறார்,

ஜமீன் ஜாம்பவான்களுக்கும் மிட்டா மிராசுகளுக்கும் 'பந்தடி மேடை''யாக இருந்த ஜஸ்டிஸ் கட்சி, ஆயிரமாயிரம் பாட்டாளிகளின் அரியதோர் பாசறையாக மாறியது அறிஞா அண்ணாதுரையின் அரும் பெரும் முயற்சியாலேயே யாகும்.

1944 இறுதியில், சேலத்தில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில்தான், அந்தக் கட்சி, திராவிடர் கழகமாக மறுமலர்ச்சி பெறும் மகத்தான செயல் நடைபெற்றிருக்கிறது. சேலம் மாநாட்டை, அண்ணாவின் மாநாடு என்றே கூறிவிடலாம். அந்த அளவுக்கு, அந்த மாநாட்டின் வெற்றிக்கு அண்ணா அவர்களே காரணகர்த்தாவாக இருந்திருக்கிறார்.

"சேலம்" நடைபெறுவதற்கு முன்னரெல்லாம், திராவிட இயக்கத்தில், உழைப்பவ

முன்னணி ஓர் புறமும், அவர்கள்தம் உழைப்பின் பயனைத் தங்கள் உல்லாச வாழ்க்கை என்னும் வளவயலுக்கு நீராகப் பாய்ச்சிக் கொள்வோர்தம் அணிவகுப்பு மற்றோர் புறமுமாக இருக்கும். இடையே, பிளவும் பகையும் பொச்சரிப்பும் பிணக்கும் ஏராளமாக இருக்கும். கட்சி, அந்தக் காலத்தில், ஏறத்தாழ, தொழிலாளிகள் ஓர்புறமும், அந்தத் தொழிலாளர்தம் உழைப்பு எனும் உறுபொருள் கொண்டு தங்கள் இலாபக் கோட்டையைத் தங்கத் தகட்டால் மினுக்கிக்கொள்ளும்முதலாளிகள் மற்றோர் புறமுமாக இருக்கும் பஞ்சாலைபோலத்தான் இருந்தது. உடன் பிறந்தே கொல்லும் வியாதியைப் போல, கட்சிக்கு உள்ளிருந்துகொண்டே அதன் ஆற்றலையும் ஆர்வத்தையும் சிதைத்துக்கொண்டிருந்தனர் சீமான் உலகத்துச் செல்லப்பிள்ளைகள் அந்தக் காலத்தில்! உழைப்பாளிகள் நெஞ்சு நோகும். தாம் பட்ட பாடெல்லாம் வீணாகிறதே என்பதை எண்ணுகிறபோது, தொண்டர்கள் உள்ளம் வேகும். ஆனால் தலைவர்களோ இந்த உள்ளக் குமுறலைப் பற்றிச் சிறிதளவும் எண்ணிப் பாராமல் சுகபோகப் பாதையில், உல்லாசப் பவனி புரிந்த வண்ணம் இருப்பர். கட்சியின் நிலை இது அந்தக் காலத்தில்! இந் நிலையில் கட்சி கலகலத்துப்போயிற்று என்றால் அதிலே வியப்பென்ன இருக்கிறது?

கட்சி, இவ்வண்ணம், கட்டுக் குலைந்து கலகலத்துப் போயிருக்கிற நிலையிலேதான், அண்ணா, கல்லூரிப் படிகளைவிட்டு இறங்கி, கட்சி மாளிகைக்குள் நுழைந்தார். நுழைந்ததும் கண்டார் கருத்தழிந்து கிடக்கும் கட்சித் தலைவர்களை. கண்டதும், "இந் நிலையை மாற்றியே தீருவேன் — உழைப்பவர்தம் பொதுவுடைமையாக கட்சியை ஆக்கியே தீருவேன்" என்று சூள் உரைத்தார். உரைத்ததனை நிறைவேற்ற அல்லும் பகலும் ஓயாது உழைத்தார்.

அண்ணா, கட்சிக்குள் நுழைந்தபோது, செல்வம் இல்லை அவருக்கு! செல்வாக்குமில்லை! அறிஞரே என்றழைக்க ஆட்களுமில்லை! தளபதியே என்றுரைக்கத் தோழர்களுமில்லை! தன்னந்தனியாகத்தான் நுழைந்தார் கட்சிக்குள் அவர்! தன்னந்தனியாகத்தான் பாடுபட்டார்!

"இந்தக் கட்சியாவது உருப்படுவதாவது! இதில் ஏனப்பா நுழைகிறாய் அண்ணாதுரை?"

"படித்திருக்கிறாய்—பட்டம் பெற்றிருக்கிறாய்—சிறந்த அறிவும் இருக்கிறது உனக்கு—எல்லாம் இருந்தும் ஏன் அண்ணாதுரை ஒன்றும் இல்லாதவன்போல இந்தக் கட்சியைக் கட்டிக்கொண்டழுகிறாய்"

"அண்ணாதுரை! இதோ பார்! நான் சுற்றி வளைத்துப் பேச விரும்பவில்லை! சுருக்கமாகவே கூறுகிறேன்! நீ இந்த உதவாக்கரைக் கட்சியில் இருப்பதால் உனக்கும் புண்ணியமில்லை! கட்சிக்கும் இலாபமில்லை! போப்பா! போய் வேறு ஏதாவது நல்ல வேலையைக் கவனி!"

"என்ன அண்ணா! இன்னுமா இந்தக் கட்சியில் இருக்கிறீர்கள்? இந்தக் கட்சி உருப்படும் என்ற நம்பிக்கை இன்னமுமா இருக்கிறது உங்களுக்கு?"

அண்ணா, திராவிடர் இயக்கத்தில் நுழைந்தபோது, அவருடைய உற்ற நண்பர்களும் உறவின்முறையினரும் அவரைப் பார்த்துக் கூறிய வாசகங்கள், இப்படித்தான், கேலியும் கிண்டலும், விஷமமும் விபரீதமும் ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் தன்மையினவாக அமைந்திருந்தன.

"ஆமாம்—நீ செய்வதுதான் சரி"

"உன்னாலே ஆகக்கூடிய செயல்தான் இது"

"உன்னைப் போன்ற இளைஞரேறுகள்கூட கைவிட்டுவிட்டால் பிறகு திராவிட சமுதாயத்தின் கதி என்னதான் ஆவது?"

"ஆயிரம் குறை இருக்கட்டும் அண்ணாதுரை—இந்தக் கட்சி ஒன்றால்தான் திராவிட சமுதாயத்தைச் சீர்திருத்த முடியும்—எனவே இந்தக் கட்சி இருந்துதானாகவேண்டும்—இக் கட்சிக்குள் உன்னைப் போன்ற உள்ள உறுதிபடைத்தவர்கள் நிச்சயம் உலவித்தானாகவேண்டும்"

அந்தக் காலத்தில், அண்ணாவைப் பார்த்து, இதுபோல, உணர்ச்சியும் உற்சாகமும் ஊட்டும் உன்னத உரைகளைப் புகன்ற உண்மை ஊழியர்கள் எவரும் இலர்.

அவரைக் கண்டு பேசிய அனைவர் சொற்களிலும், வேண்டாமப்பா — வீண் முயற்சி இது—விட்டுவிடப்பா என்ற எச்சரிக்கை

காதம்தான் சுழன்று சுழன்று அலேஓசை எழுப்பிக்கொண்டிருந்தது.

அந்த அலேஓசை கண்டு அஞ்சி அடங்கிஞரில்லே அண்ணு. உள்ளம் உடைந்து ஓடுங்கிஞரில்லே—இவ்வளவு கேலியா என்று கூறிக் கீழே சாய்ந்தாரில்லே—நம்மால் ஆகாது இச் செயல் என்று கூறிப் பயந்து பதுங்கிஞரில்லே—கருமமே கண்ணுயிருந்தார் — முடியாது என்பது என் அகராதியில் இல்லே என்று வீரமுழக்கம் புரிந்தார்—ஏனப்பா உனக்கு இவ் வீண்செயல் என்று விவேக சிந்தாமணி வாசித்தவர்களேப் பார்த்து, கஷ்டநஷ்டமடைதல் என்னும் விலேயைக் கொடுத்தால்தான் இலட்சிய வெற்றி என்னும் அரும்பொருள் நம் கைக்குக் கிட்டும் என்னும் தத்துவ விளக்கத்தைத் தந்தார்—ஓய்வு ஒழிவு இன்றி, அலுப்புச் சலிப்பு இன்றி, கொஞ்சம் பொறுப்போம் பிறகு பார்ப்போம் என்ற எண்ணமின்றி தொடர்ந்து பணிபுரிந்து வந்தார்—என்றேனும் ஓர் நாள் "சேலம்" நடந்தே தீரும் என்பது அவருக்கு நன்கு தெரியும்—எனவே, உள்ள உறுதியுடன், அளவற்ற பொறுமையுடன், இலட்சியப் பாதையில் ஏறு நடை நடந்துவந்தார்! கடைசியில் ஓர் நாள், "சேலம்", அவர் எதிர் பார்த்தபடியே, அவர் காலடியில் வந்துநின்று வெற்றி வெற்றி என்று கிண்கிணி கீதம் இசைத்திடலாயிற்று.

1934-ல், அண்ணு, ஜஸ்டிஸ் மாளிகைக்குள் நுழைந்தார்.

1944-ல், கட்சியில், "சேலம்" நடைபெற்றிருக்கிறது.

1934—1944! இடையே இருப்பன பத்து ஆண்டுகள்!

அந்தப் பத்து ஆண்டுகளும், அண்ணு, உழைப்பின் உருமாக ஒளி வீசிஞர். அதன் விளேவாக, கட்சி, மிட்டாமிராசுகளின் மாடமாளிகைகளே விட்டுவிலகி, பாட்டாளி மக்களின் ஓட்டைக் குடிசைகளே நோக்கி இன்பபுரிப் பயணம் புரியத் தொடங்கி, மிக விரைவில் உழைப்பவர் உலகின் தனி உடமையாக மாறிவிட்டது.

ஜஸ்டிஸ் கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றியது மட்டுமல்ல, மாற்றப்பட்ட கட்சிக்குத் "திராவிடர் கழகம்" என்னும் தேனினுமினிய பெயரைச் சூட்டியதேகூட அண்ணுதுரைதான் என்பது பலருக்குத் தெரியாது. அதைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும் என்று எண்ணியதுமில்லே அண்ணு.

திருச்சி விசுவநாதம் அவர்கள் ஒருமுறை தெளிவாக எடுத்துக் காட்டியிருப்பதைப் போலத் "திராவிடநாடு பிரிவினே பற்றிப் பேச்சுப் பிரசாரம் மட்டுமே நடைபெற்று வந்த காலத்தில், அந்தப் பிரிவினேயின் பேரால் ஒரு கழகம் இருக்கவேண்டும் என்ற எண்ணம் முதன்முதல் அறிஞர் அண்ணுதுரைக்கே ஏற்பட்டது."

ஜஸ்டிஸ் கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றி, அதன் முழு உரிமைகளேயும் ஜமீன்தார் உலகத்திடமிருந்து தட்டிப் பறித்து உழைப்பவர் உலகத்திற்கு எடுத்துக் கொடுத்ததோடு நிற்கவில்லே அண்ணு. சுயமரியாதை இயக்கத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அதுபோலவே அற்புதமான அளவுக்கு அருந்துணே புரிந்திருக்கிஞர்.

அண்ணுவின் வருகைக்கு முன்பு, சுயமரியாதை இயக்கம், பாமரர்களின் எல்லேக்குள் மட்டுமே சுழன்று கொண்டிருந்தது.

படித்தவர்கள் அந்த இயக்கத்தைப் பார்த்து எள்ளி நகையாடினர்.

பட்டதாரிகள், சீச்சீ—இதுவும் ஓர் இயக்கமா என்று தூற்றல் அந்தாதியைத் துருவிப் பார்த்தனர்.

பண்டிதர்கள், "தீதுடைத்து இப் பாதை செல்லன்மின் செல்லன்மின்!" என்று பொதுமக்கட்கு "அபாய அறிகுறி" காட்டிக் கொண்டிருந்தனர்.

மாணவர்கள், சுயமரியாதை இயக்கம் இருக்கும் திக்கு நோக்கியும் எட்டிப் பார்க்க மறுத்தனர்.

ஆசிரியர்கள், சூனுமாஞ என்ருலே சுத்த மடையர்கள் என்றுதான் பொருள் என விசித்திர அகராதியை உருவாக்கிக் கொண்டிருந்தனர்.

கல்லூரி மாளிகைகள், சுயமரியாதை இயக்கத்தால் எட்டிப் பிடிக்கமுடியாத நெடுந்தொலேவில் கம்பீரமாகக் காட்சிதந்து கொண்டிருந்தன.

பல்கலேக் கழகங்களோ, சுயமரியாதை என்ற சொல்லேயும் கேட்டறியாத தனிப் பெரும் நிலேயில் நின்றன.

கேலி
கிண்டல்
ஏசல்
தூற்றல்
அலட்சியம்
அவமதிப்பு

இவைதான், அந்தக் காலத்தில், படித்தவர் உலகு, சுயமரியாதை உலகுக்களித்த காணிக்கைப் பொருள்கள்.

படித்தவர்கள், வான வீதியில் கண்சிமிட்டிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களாகக் காட்சி தந்தார்கள்.

ஆனால் சுயமரியாதை இயக்கமோ தரையில் ஊர்ந்து செல்லும் தனி மனிதனாக இருந்து வந்தது.

படித்தவர்கள், உயரத்தே காட்சிதரும் சந்திர மண்டலத்தில் இருந்து வந்தார்கள்.

ஆனால் சுயமரியாதை இயக்கமோ, நிலவுலகில், அலைகடலில், பாய்ந்து செல்லும் மரக்கலமாக அமைந்திருந்தது.

படித்தவர்கள், வேகமாகச் செல்லும் ரயில் வண்டியில் உல்லாசமாக வீற்றிருக்கும் பிரயாணிகளாக இருந்து வந்தார்கள்.

ஆனால் சுயமரியாதை இயக்கமோ, வேகமாகச் செல்லும் ரயிலைப் பார்த்து வியப்புற்ற வண்ணம் வீதியில் நின்று கொண்டிருக்கும் பாதசாரியாகக் காட்சி அளித்துவந்தது.

படித்த வட்டாரம்—சுயமரியாதை இயக்கம்—இரண்டும் இரு துருவங்கள் என்றுதான் அந்தக் காலத்தில் அனைவராலும் நம்பப்பட்டு வந்தது.

பட்டதாரிகள் மேடையில் சுயமரியாதை இயக்கம் இடம்பெறுவதும், சுயமரியாதை வட்டாரத்தில் பட்டதாரிகள் பவனி வருவதும் இந் நிலவுலகில் நடக்கமுடியாத நிகழ்ச்சிகள் என்றுதான் எல்லாம் உணர்ந்தவர்கள் என்று தம்மைத்தாமே புகழ்ந்து கொள்ளும் எல்லோரும் கூறிவந்தனர்.

"வெஞ்சினத்துடன் பாயும் வேங்கை சுயமரியாதை இயக்கம்! துள்ளி ஓடும் புள்ளி மான்கள் மாணவர்கள்! இரு சாராருக்குமிடையே இணைப்பு உண்டாவதா—ஆகாத காரியம்! முடியாத செயல்!"—இப்படித்தான் பேசினர் சகலகலா வல்லவர்கள்!

"ஆகாத காரியம்! முடியாத செயல்!—யாரையா கூறினார்கள் அந்தச் சோம்பேறி வேதாந்தத்தை?" என்று இடிமுழக்கம் புரிந்த வண்ணம் சுயமரியாதைச் சூறாவளிப் படையின் முன்னணியில் வந்துநின்றார் காஞ்சிபுரத்துக் கட்டிளங்காளை.

வந்து நின்றார்! நின்றார் என்றால் சும்மாவா நின்றார்? இல்லை! தன் சொற்பொழிவு எனும் மாய வலையைப் பட்டதாரிகள் வட்டாரத்தின்மீது வீசியபடி நின்றார்.

முதலில் சிலர்—பிறர் பலர்—பிறகு பலப் பலர்—அதன்பிறகு, பட்டதாரிகள் வட்டாரத்திலிருந்து ஒரு பட்டாளமே வந்து நின்றது அண்ணாவின் பக்கம்.

நாளாக ஆக, அப் பட்டாளத்து வீரர்கள் தொகை ஒன்று பத்து நூறாகப் பெருகலாயின்று.

முதலில் ஒரேஒரு பட்டாளம்தான் அண்ணாவின் பக்கம் நின்றுகொண்டிருந்தது. பிறகோ, பல பட்டாளங்கள், பலப் பல பட்டாளங்கள், அவர் ஆட்டிடும் சுட்டுவிரல் கண்டு, அதன் ஏவல்வழி நடக்கத் தயார் தயார் என்று இன்பமுழக்கம் புரிந்த வண்ணம் அவர் அருகே நின்றிடும் அருங்காட்சி வழங்கிடலாயின.

சுயமரியாதை இயக்கம் என்றாலே முன்னெல்லாம் சுடுசொல் வீசிய "சுந்தர புருஷர்கள்", இப்போது, அது அல்லவா அறப்போர் புரியும் ஆணழகர்கட்கேற்ற பகுத்தறிவுப் பாசறை என்று வாழ்த்துரை வெண்பா வாசித்திடலாயினர்.

கேலி பேசினோர், பாராட்டு மொழிகளை வீசலாயினர்.

கிண்டல் குண்டுகளை வீசியோர், திருப்பல்லாண்டு பாடலாயினர்.

ஏசல் பாசுரம் இசைத்திட்டவர்கள், போற்றித் திரு அகவல் புனைந்திடலாயினர்.

தூற்றல் பாணம் தொடுத்தவர்கள் துதிமொழி தினம்தினம் தொடுத்திடலாயினர்.

அலட்சியப் பார்வையை முன்னர் அளித்தவர்கள் வணக்கம் செய்ய விரைந்திடத் தொடங்கினர்.

இழித்துரைத்த பேனாக்கள் போற்றிப் புகழ்த் துடிதுடிக்கலாயின.

"படித்தவர் உலகமா—அது சுயமரியாதை இயக்கத்தின் பரம விரோதியாயிற்றே!" என்ற பழிமொழி மறைந்து, பட்டதாரிகள் மண்டலமா—அது சுயமரியாதை இயக்கத்தின் செல்லப்பிள்ளைகள் வாழும் இடமாயிற்றே என்ற புதுமொழி பிறந்தது.

கல்லூரிகள், தன்மான இயக்கத்தின் படைவீடுகளாயின.

ஆசிரியர்கள், சுயமரியாதைச் சூறாவளிப் படையின் தளபதிகளாயினர்.

மாணவர்கள், சடங்கு சம்பிரதாயம் என்னும் கோட்டை கொத்தளங்களை இடித்துத் தள்ளும் வெடிகுண்டுகளை வீசும் வீர விமானிகளாயினர்.

பண்டிதர்கள், புரட்சிப் பட்டாளத்தின் டாங்கிப் படைகளாயினர்.

கல்விச் சாலை ஒவ்வொன்றிலேயும் தன்மான இயக்கத்தின் நாதம் கணீர் கணீர் என எதிரொலி எழுப்பத் தொடங்கிற்று.

பள்ளி வகுப்பு ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுயமரியாதை சப்மரீனாக மாறி, வர்ணாஸ்ரம வல்லரசை மண்ணோடு மண்ணாக்கி மாண்டு மறைந்து போகச் செய்யும் மாபெரும் பணியைப் புரிந்திட விரைந்தது.

மாணவர்கள் கரத்திலிருந்து கம்பராமாயணமும், கந்தபுராணக் குப்பையும், திருவிளையாடல் தெருப்பாட்டும், பெரிய புராணப் பொய்யுரையும், வேக வேகமாக விடைபெற்று விரைந்தோடி மறைந்தன.

அவையெல்லாம் வீற்றிருந்த கரங்களில், பாண்டியன் பரிசும், பாரதிதாசன் கவிதையும், இராவண காவியமும், இரணியன் நாடகமும், பெருமையுடன் சென்று பூரிப்புடன் குடிபுகலாயின.

'ஹிந்து' பத்திரிகையைப் பிடித்த கைகள் 'திராவிடநாடு' இதழ்களைப் பிடிக்கலாயின.

மித்திரனைக் கண்டு களித்த உள்ளம் 'விடுதலை'யைப் பார்த்துப் பூரிக்கலாயிற்று.

கல்லூரிதோறும் அண்ணா வெற்றிப்புன்னகையுடன் வீரஉலா வரத்தொடங்கினார்.

மாணவர்கள் தங்கள் ஏடுகளில் வால்டேரைக் கண்டனர். எதிரே அண்ணாவைக் கண்டனர். உடனே, அவர்களை அறியாமலே அவர்கள் வாய், வாழ்க தென்னாட்டு வால்டேர் என்ற வீரமுழக்கத்தை விண்ணதிர மண்ணதிர எழுப்பலாயிற்று.

பட்டதாரிகள் தங்கள் கல்லூரி நூல் நிலையத்தில், அமெரிக்க நாட்டிலே அறிஞன் இங்கர்சால் ஆற்றிய அறப்போர் முழக்கங்களை ஆநந்தத்துடன் படித்தனர். படித்துவிட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தனர். அண்ணா பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தனர். இன்பத் திராவிடத்து இங்கர்சாலே—நீவிர் வெல்க வெல்க என்ற இன்ப ஒலியை எழுப்பினர்.

ஆசிரியர்கள், தம் மாணவர்கட்கு மறுநாள் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக, பெர்னாட்ஷாவைப் படித்தனர். படித்துக்கொண்டிருக்கையிலேயே அவர்கள் எதிரே அண்ணா வந்தார் அவர் தீட்டியுள்ள பல ஏடுகளைக் கையிலேந்திய வண்ணம்! வாங்கிப் படித்தனர் ஆசிரியர்கள் ஆவலுடன்! அண்ணாவின் ஏடுகளில் பெர்னாட்ஷா பேசுவதைக் கண்டனர். கண்களை நிமிர்த்தனர். அண்ணா—அறிவுக்களை ததும்பும் தோற்றத்தில்! ஆநந்தம் மிகக் கொண்டு அவருடன் கைகுலுக்கி, யாம் பெற்ற பெர்னாட்ஷாவே வருக வருக. என வரவேற்புரை வழங்கினர்.

சங்க இலக்கியம் ஒரு கையில்! அண்ணாவின் இலக்கியம் மறு கையில்! மாறி மாறிப் பார்க்கின்றனர் புலவர்கள் இரண்டையும்! வேறுபாடே காணோம் இரண்டிற்கும்! "என்ன பார்க்கிறீர்கள் மாறி மாறி?"—கேட்கிறார் அண்ணா புன்னகையுடன்! தங்களைத்தான் பார்க்கிறோம் சங்க இலக்கியத்தில்—கூறுகின்றனர் புலவர்கள் பூரிப்புடன்! புலவர் வட்டாரம், அண்ணா எங்கள் சொத்து என்று உரிமை பாராட்டத் தொடங்குகிறது.

ஆம்!

மாணவர்கள்
பட்டதாரிகள்
ஆசிரியர்கள்
புலவர்கள்

நான்கு சாராரும் ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டு, ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு, சுயமரியாதைக் கோட்டத்துக்கு விரைந்தோடிவரலாயினர். ஆமாம்! அண்ணா, இயக்கத்தில் நுழைவதற்கு முன்

ளுல், தன்மான இயக்கத்தைத் தீண்டப்படாத பொருள் என்று கருதிய அந்த நான்கு சாராரும்தான்!

முன்னே, சுயமரியாதை இயக்கம், தத்தித தத்தித் தளர்நடைதான் நடக்கமுடிந்தது. காரணம், அப்போது, படித்தவர்கள்—பாமரர்கள் — என்ற இருகால்களிலே ஒன்று ஊனம்.

ஆனல், இப்போதோ, இயக்கம், கட்டிளங் காளையெனத் துள்ளிக்குதித்து விரைந்தோட முடிகிறது—இரு கால்களும் பூரணவளர்ச்சி பெற்றிருக்கிற காரணத்தால்.

சுயமரியாதை இயக்கத்திற்குப் பாமரர்களிடம் பெரியதோர் செல்வாக்கைத் திரட்டித் தந்தவர் பெரியார் இராமசாமி.

அதுபோலத்தான் படித்தவர் உலகில் அந்த இயக்கத்திற்கு மட்டற்ற மதிப்பை உருவாக்கித் தந்தவர் அறிஞர் அண்ணாதுரை.

படித்தவர்கள், பாமரர்கள் — இருவரும் இரு கண்கள் தன்மான இயக்கத்திற்கு.

முப்பது ஆண்டுகட்கு முன்பு ஈரோட்டிலிருந்து புறப்பட்டார் ஒரு டாக்டர் — ஒரு கண்ணைத் திறந்தார்

பதினைந்து ஆண்டுகட்கு முன்பு காஞ்சிபுரத்திலிருந்து கிளம்பினுர் வேறோர் டாக்டர்— அவர், மறு கண்ணைத் திறந்தார்.

முன்னவர், பெரியார்!

பின்னவர், அண்ணா!

* * *



வாலிபர் உள்ளங்களின் வசீகரத் தென்றல்

**திராவிட இயக்கம்!**

**சுயமரியாதை இயக்கம்!**

இவ்விரண்டும், திராவிட சமுதாயம் பெற்றிருக்கும் இரு பெரும் கருவூலங்கள்—தென்னாட்டின் வாழ்க்கையை வளமுள்ளதாக ஆக்க வந்த ஒப்பற்ற வழிகாட்டிகள்!

திராவிட இயக்கம்!—இதற்கு அடிப்படை அமைத்த அண்ணல், சர் தியாகராயர்.

சுயமரியாதை இயக்கம்!—இதற்குக் கால்கோள் நிகழ்த்திய தீரர், பெரியார் ஈ. வெ. ரா.

ஆனல், இந்த இரண்டு இயக்கங்களையும் அவை அடைபட்டுக் கிடந்த சின்னஞ்சிறு வட்டாரங்களிலிருந்து கைபிடித்து இழுத்து வெளி உலகத்துக்கு அழைத்துச் சென்று, சிறிதும் எதிர் பார்க்கப்படாத புதிய புதிய வட்டாரங்களில் எல்லாம் அந்த இயக்கங்கட்கு ஒப்பற்ற செல்வாக்கையும் சிறப்பையும் புகழையும் பாராட்டையும் ஈட்டித் தந்த பெருமை, அண்ணாவின் தனி உரிமை.

அஞ்சா நெஞ்சன் கொலம்பஸ் எப்படி தன் தளரா முயற்சியாலும் உயிருக்குத் துணிந்த பல கடற் பயணங்களாலும் ஸ்பானிய மன்னன் பெர்டினண்டின் சாம்ராஜ்யத்துக்கு, பலப்பல புதிய மண்டலங்களைத் தேடித் தந்து பெரும்புகழ் பெற்றானே, அப்படித்தான், தென்னாட்டுத் தளபதி அண்ணா, தன் எழுத்து சொல் எனும் இருபெரும் கப்பல்களைத் துணையாகக் கொண்டு, மட்டற்ற எதிர்ப்பு எனும் அலைகடலைக் கிழித்துக் கொண்டு நெடுந்தொலை சென்று, புதிய புதிய பிரதேசங்களில், திராவிட, சுயமரியாதை இயக்கங்கட்கு, ஆதரவையும் பாராட்டையும்

அமோகமான அளவு தேடிக் குவித்திருக்கிறார்.

கொலம்பஸ், அலைகடலுக்கப்பால் சென்று, புதிய புதிய மண்டலங்களை, ஸ்பானிய சாம்ராஜ்யத்திற்கென்று, விடா முயற்சியுடன் தேடிக்கொண்டிருந்த அதே நேரத்தில் ஸ்பெயின் நாட்டில் பல விஷமிகள் கொலம்பஸ்மீது இல்லாததையும் பொல்லாததையும் கூறி விஷவிதைகளைத் தூவி ஊர் மக்களுக்கு அவர்மீது வீண் துவேஷம் உண்டாகக் காரணமாக இருந்தனர்.

அதுபோலத்தான் அண்ணா, தன் இரு கண்களென விளங்கும் இரு பெரும் இயக்கங்களைப்புதிய புதிய பிரதேசங்கட்கு அழைத்துச் சென்று புதுபுது செல்வாக்கைத் தேடித் தந்த நேரத்தில் துரோகி என்றும் தூய்மையற்றவர் என்றும் விஷமி என்றும் வீணர் என்றும் சில சூதுமதியினரால் வீண் பழி சுமத்தப்பட்டார்.

வீண்பழி சுமத்தப்பட்டார். ஆனால் அது கண்டு, விலாவிலே விரக்திப் புழு கொட்ட, உள்ளத்தைச் சோர்வெனும் கரையான் அரிக்க, ஓய்வுபெற்றுப் பொது வாழ்வை விட்டே ஒதுங்கிவிடவில்லை அண்ணா. சில சமயம் கட்சியை விட்டு ஒதுங்கியிருக்கிறார்—அப்போதும் கட்சிப் பணியைவிட்டு ஒதுங்கினாரில்லை. எந்த நேரத்திலும், எத்தகு ஆபத்து வேளையிலும், இடரும் பழியும் இழிவும் தொல்லையும் எவ்வளவு ஏற்பட்ட காலத்திலும், இயக்க இலட்சியம்தான், அவருடைய இதயகீதமாக இருந்துவந்திருக்கிறது பொது வாழ்வுப் போர்க் களத்தில் அவர் முதன்முதல் குதித்த அந்த நாள் தொட்டு, ஆயிரமாயிரம் வாலிபர்களின் அருமை அண்ணாவாக ஒளிவீசித் திகழும் இந்த நாள் வரை, இயக்க இலட்சியத்தை அவர் மறந்த நாள் இந்த நாள் என்று கூறத் தக்க நாள் எந்த நாளும் கிடையாது.

ஆபத்தும் பகையும் அடுக்கடுக்காக ஏற்பட்ட வேளையில் எல்லாம் "எதையும் தாங்க இந்த இதயம் உண்டு" என்னும் பைரனின் பொன்மொழியையே தன் வாழ்க்கை வழியாகக் கொண்டு ஆபத்துகட்கஞ்சாமல் இயக்கப் பணியைத் தொடர்ந்து புரிந்து வந்திருக்கிறார் அண்ணா.

அண்ணாவின் வருகைக்கு முன்னர், திராவிட இயக்கம் சுயமரியாதை இயக்கம் இவ்விரண்டும் வெளி வட்டாரங்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அதன் விளைவாக வெளி வட்டாரங்களும் இவ்விரு இயக்கங்களை அந்தக் காலத்தில் அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை.

ஆனால் அண்ணா அவர்கள் இவ்விரு இயக்கங்களிலும் உலவத் தொடங்கியபிறகு, இவ்வியக்கங்கட்கும் வெளி வட்டாரங்கட்கும் மிக நெருங்கிய தொடர்பு ஏற்படலாயிற்று. அதன் பயனை வெளி வட்டாரங்களும் இவ் இயக்கங்களை மதிப்புடனும் கண்ணியத்துடனும் பெருமை கொடுத்து நடத்தத் தொடங்கின.

அண்ணாவின் சகாப்தம் இந்த இயக்கங்களில் தொடக்கமாகிய பின்னர், சர்வ கட்சி மேடைகளில் இந்த இயக்கங்கள் மதிப்புள்ள இடம் பெறலாயின. மதிப்புள்ள இடம் பெறுவது மட்டுமா, எங்கெங்கு சர்வகட்சி மேடைகளில், இந்த இயக்கச் சொற்போர் வீரர்கள் இடம் பெறத் தொடங்கினரோ, அந்த மேடைகளெல்லாம் திராவிட சுயமரி


திராவிடப் பெருமக்கட்கு
எங்களின் பொங்கல் வாழ்த்துகள்!

★

கவியரசர் பாரதிதாசன்
எழுதிய நூல்கள்
அனைத்தும் எம்மிடம் கிடைக்கும்.

★

பட்டியலுக்கு எழுதுங்கள்

★

அண்மையில் வெளிவந்தது:
இரு சிறு நாடகங்கள் அடங்கிய
இன்பக்கடல்
விலை ரூ. 1—0—0

பாரதிதாசன் பதிப்பகம்
புதுச்சேரி

யாதை இயக்க மேடைகளோ என்று பிறர் ஐயுறவேண்டிய அளவுக்கு நம்சொந்த மேடைகள்போலவே காட்சி தரலாயின.

அண்ணாவின் வருகை காரணமாக திராவிட சுயமரியாதை இயக்கங்களின் மதிப்பும் நிலையும் முன்னினும் பல மடங்கு உயர்ந்திருக்கின்றன என்பதற்கு ஆயிரம் ஆதாரங்களை அடுக்கடுக்காக எடுத்துக் காட்ட முடியும். ஆனால் அண்ணா அவர்கள், புலவர் சேதுப்பிள்ளை அவர்களுடனும் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களுடனும் நிகழ்த்திய கம்பராமாயணச் சொற்போர் ஒன்றே போதும் அவரால் இந்த இயக்கங்கள் எவ்வளவு சிறப்படைந்திருக்கின்றன என்பதை நன்கெடுத்து விளக்க!

கம்பராமாயணத்தைப் பயின்று பயின்று கம்பராமாயணமே வடிவாகஇருப்பவர் புலவர் சேதுப்பிள்ளை; சொல்லின் செலவர் என்று தமிழ்நாட்டு அறிஞர்களால் ஒருசேரப் புகழப்படும் சிறப்பும் செல்வாக்கும் படைத்தவர்.

செந்தமிழ் இலக்கியங்களில் ஒப்பற்ற புலமையும் இணையற்ற பயிற்சியும் வாய்க்கப்பெற்று இருபதாம் நூற்றாண்டின் நக்கீரர் என்று போற்றத்தக்க உயரிய நிலையில் நிற்கும் தமிழ்மொழித் தலைவர் நாவலர் பாரதியார்.

இந்த இருபெரும் புலவர்களும் அண்ணா அவர்களுடன் சொற்போர் நடத்த ஒப்புக்கொண்ட அந்த விநாடியிலேயே திராவிட சுயமரியாதை இயக்கங்களின் மதிப்பு முன்னைவிட பத்து மடங்கு உயர்ந்துவிட்டது என்று கூறலாம்.

அந்த இரண்டு சொற்போர்களிலும் புகழேணியின் உச்சியில் ஏறிநின்று வெற்றிக் கொடியை உயர்த்தியவர் அண்ணாதான் என்ற சேதி தமிழகமெங்கும் பரவியபோது, திராவிட சுயமரியாதை இயக்கங்களின் மதிப்பு மேலும் ஒரு பத்து மடங்கு உயர்ந்துவிட்டது என்பதையும் நாம் தாராளமாகத் தலைநிமிர்ந்து கூறலாம்.

---

# பாடம் புகட்டும் பேராசிரியர்கள்!





விலாசம் தெரியாமற்போன சியாங்—கே—ஷேக் தம்பதிகள்

இவர்கள் யார்? தெரிகிறதல்லவா? புதிய பேராசிரியர்கள்! சில காலம், ஓங்கார உருவெடுத்து 'ஓஹோ' என உலவினாலும், இறுதியில், எதேச்சாதிகாரிகளின் வாழ்வு எப்படி முடியும் என்பதைத் தங்கள் வாழ்க்கையின் மூலம் விளக்கும் சிறந்த பேராசிரியர்கள் இவர்கள்! அண்டையில் உள்ள சீன நாட்டில் இரண்டாண்டுகட்கு முன்வரை சர்வாதிகார தர்பார் செலுத்திய இவர்கள் இன்று இருக்கும் இடமே தெரியவில்லை! இவர்கள் வாழ்வு—எதேச்சாதிகாரிகட்கு ஒரு பாடம்!

# திராவிடத்தைத் திராவிடரே ஆள்வோம்!


[ வாணிதாசன் ]

பொன்னுலையைக் கீழ்வானில் இளம்பரிதிக் கொல்லன்
புலர்காலை மூட்டிவிட்டான்; பனிப்போர்வை நீக்கித்
தன்னுடலின் அழகெல்லாம் நீர்ப்பரப்பில் வானம்
சரிபார்த்துக் கொண்டிருக்கும்; பூசிரிக்கும் பொய்கை;
மின்னிடையார் விழிவண்டு கள்வெறியில் பாடும்;
மேனிதரு நாற்றத்தை நொச்சிப்பூ வீசும்;
நன்னாளில் நற்பொங்கற் திருநாளில் தம்பி;
திராவிடத்தைத் திராவிடரே ஆள்வமெனச் சொல்லே!

தோய்ந்திருக்கும் நற்பசுமை வயற்காட்டில்; பூத்த
செங்கரும்புத் தோட்டமோ மணல்மேடாய்த் தோன்றும்;
மேய்ந்திருக்கும் பசுமாடு; கிழக்காளை காதல்
வெறியூட்டும்; பொறுக்காத இளங்காளை பாயும்;
சாய்ந்திருக்கும் கிளையிருந்து குழலூதும் பையன்;
தனைமறந்து புள்ளிசைக்கும்; நற்பொங்கல் நாளில்
தேய்ந்திருக்கும் நம்மினத்தின் நிலையுயர்த்த தம்பி!
திராவிடத்தைத் திராவிடரே ஆள்வமெனச் சொல்லே!

கண்ணிட்ட செங்கரும்பின் மேல்தோலை நீக்கிக்
கத்துகின்ற சிறுபிள்ளைக்கு அளித்துநகை காட்டிப்
பண்ணிட்ட செவ்வாயார் மருதநிலப் பெண்கள்,
பாலோடு குங்குமப்பூ ஏலத்தைச் சேர்த்து,
விண்ணிட்ட பச்சரிசி புதுப்பானைப் பொங்கல்
விருந்தூட்டித் தமிழூட்டும் நற்பொங்கல் நாளில்,
மண்ணிட்ட வளமெல்லாம் பொதுவாக்கித் தம்பி!
திராவிடத்தைத் திராவிடரே ஆள்வமெனச் சொல்லே!

கற்றூணைப் பிளக்கின்ற தோளுடைய காளை
கார்முழக்கம் செய்கின்ற ஏர்தழுவக் கண்டு
சிற்றூரின் நடுவிருக்கும் மன்றத்தில் சிற்றூர்த்
திங்களெலாம் கடைக்கண்ணால் சிரித்துநகை காட்டும்;
செற்றாரும் மறம்வாழ்த்துஞ் செந்தமிழைக் கேட்டுச்
செவிகுளிரும்; கிழவர்களின் தோளுயரும் தம்பி!
நற்றமிழர் திருநாளில் தைப்பொங்கல் நாளில்
திராவிடத்தைத் திராவிடரே ஆள்வமெனச் சொல்லே!



# வீழ்ந்த மாவீரன்

[தில்லை அறிவழகன்]

அவன் மன்னர் மன்னன்தான்! ஆனாலும் அவன் உள்ளத்திலே ஒரு கலக்கம்.

வான மண்டலக்கடலில் மதிநல்லாள் பவனி வந்து கொண்டிருந்தாள். தமிழகத்தின் மன்னர் மன்னனைக் காணுவதில் அவள் பேரின்பம் கொண்டாள். வெள்ளிய நிலவை அள்ளித் தெளித்துக் கடலோடு குலவி மகிழ்ந்து சிரித்தாள். ஆனால் அந்த வெண்ணிலவால் அவன் மயக்கமும் தெளியவில்லை. கலக்கமும் நீங்கவில்லை.

முன்னாளில் அவன் அடைந்த வெற்றிகளை நினைத்தபோது, கலக்க நிலையிலுள்ள அவன் உள்ளத்திலும் களிபேருவகை பெருகி ஓடியது.

சிங்களத்தீவைச் சில நாட்களில் போரிட்டுக் கைப்பற்றினான். சேரனின் கப்பற்படையைக் காந்தளூர்ச்சாலை என்ற அவன் துறைமுகத்திலேயே பணிய வைத்தான். வேங்கை நாட்டை வென்றான். சாளுக்கியரின் ஆணவத்தை அடக்கினான். அவனுடைய ஆண்மை, படைத்திறம், புகழ், வெற்றி, அத்தனையும் கன்னியாகுமரிமுதல் கிருஷ்ணா நதிதீரம் வரையில் ஒலித்துக் கொண்டிருந்தது. பரந்த திராவிடத்தின் ஒவ்வொரு நகரத்திலும் அவனுடைய வீரர்கள், தளபதிகள், துணைத்தலைவர்கள், வெற்றிப் புன்னகைபூக்க, அவனுடைய புகழ் பாடி வந்தனர்.

நேற்று முன்னாள்தான் பன்னீராயிரம் முன்னீர்ப் பழந்தீவை (இலக்ஷத்தீவை) வென்றான்.

இவ்வளவையும்விட பெருமகிழ்ச்சி தரும் மற்றோர் உருவம் அவன் முன் நின்றது. அது அவன் மகன்தான்.

அரும்பு மீசைக்காரன்தான்! ஆனாலும் அகில உலகத்தையும் ஆட்டிப் படைக்கும் ஆற்றல் கொண்டோன். அரிமாவும் அஞ்சும் ஆண்மை மிக்கோன். 'இவன் தந்தை என்னோற்றான் கொல்' எனும் சொல்லை அயல் மன்னர்கள் அனைவரையும் சொல்லவைத்தோன்!

அவ்வீர மகன் முன்னே, தோல்வி, புறமுதுகிட்டு ஓடிற்று. வெற்றியோ ஓடிவந்து ஆரத்தழுவி முத்தமிட்டது. இத்தனைப் பெருவீரனை மகனாகப் பெற்ற பெற்றிமிக்கோன் அவன். அவனும் சாதாரண மானவன் அல்லன். களங்கள் பல கண்டு வெற்றி பல கொண்ட மன்னர் மன்னன். அஞ்சாத நெஞ்சினன்.

ஆனாலும் அவன் உள்ளத்திலே பெருங்கலக்கம்!

இந்நிலையில் பெருங்கலத்தில், மாபெருங் கடலின் நடுவே, தமிழகக் கடற்கரையின் பல மைல்கள் அப்பால் தாயகம் நோக்கி வெகு வேகமாக வந்து கொண்டிருந்தான் **சோழன் இராசராசன்.**

அந்தோ! ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தாயினும் அதிகமாக அவனை மகிழ்ச்சிக்கடலில் கூத்தாடச் செய்த அந்த அருமை மகனை இழந்து விட்டான் அது அவன் உள்ளத்தில் ஏற்பட்ட சபலம்தானோ? இல்லை! இருக்க முடியாது!

ஐயோ! அந்த ஒரே மகன் கொலை செய்யப் பட்டு விட்டான். இல்லை! இல்லை! இருக்க முடியாது! ஏன் இருக்கக்கூடாது?

"அப்பா! என் தினவெடுக்கும் தோள்கள் அரண்மனையில் அறுசுவையுண்டியையும், ஆடையாபரணங்களையும் பூணி மகிழும் வேலையைத்தான் ஏற்க வேண்டுமா? எதிரிகளிடமிருந்து மலையென ஓடிவரும் யானையின் தும்பிக்கையை வெட்டி. அதிலிருந்து மலையூற்றென வெளிப்படும் குருதிப் பெருக்கினைக்கண்டு மகிழ்ந்திட வேண்டாமா நான்? நீங்கள் மாத்திரம்தான் அந்த மகிழ்ச்சி உணவை மனமாரச் சுவைத்திட வேண்டுமா? நான் உண்ணக் கூடாதா? தயவுசெய்து தடுக்காதீர்கள்! நானும் வருகிறேன்" என்று கூறிய மறத்தமிழ் மகன், படுகொலை செய்யப் பட்டு விட்டான் என்னும் செய்தி, களம்பல கண்ட மன்னனையும் கலங்க வைக்காதா?

அவன் எண்ணமிடலானான்:—

"நான், அவனைப் பிரிந்ததற்கு நல்ல தண்டனை தந்து விட்டான். என் எதிரே போர்க்களத்தில் உயிர் துடிக்க இறந்திருந்தால்கூட நான் பொறுத்திருப்பேனே! ஏன்? மகிழ்ந்திருப்பேன்! ஆனால். வஞ்சகத்தால் அரண்மனைப் பஞ்சணையில் வஞ்சி எழில் இளநங்கையோடு இன்பத்துயில் கொண்டபோது கொலை செய்யப்பட்டான்!......அப்பப்பா! நினைக்கவே உள்ளம் கூசுகிறதே! ஐயோ!........ இரத்த ஆறு ஓடிடும் போர்க்களங்கள் பல கண்ட என்னையுமல்லவா துடிக்க வைக்கிறது." ...ஏன் யாரைத்தான் துடிக்க வைக்காது? உதவாக்கரை மகன் இறந்தாலும் துடித்து அழுதிட வைக்கும் பித்துக்கொண்ட பெற்ற மனமல்லவா அது? மாமன்னன் என்பதால் மனம் என்ற ஒன்றில்லாமல் மாண்டு விடுமா?

அவன் இதயம் அழுதது பேரிரைச்சலோடு!

அவன் உள்ளமே அவனைச் சுட்டது!

அவன் இப்பொழுது சொல்ல நினைக்கும் சில சொற்களைச் சொல்லிவிட்டு வந்திருந்தால் அந்த ஒரே மகன் கொலைசெய்யப்படாமல் காப்பாற்றப் பட்டிருப்பானல்லவா?

இந்த எண்ணம் அவன் உள்ளத்தைப் பழுக்கக் காய்ச்சிய இரும்பு, பச்சைக் குழந்தை மேல் பட்டுத் துடிக்கச் செய்தது போல துடித்திடவைத்தது.

இதற்குக் காரணங்களுமில்லாமலில்லை.

முன்னாள் இரவு, அவன் வெற்றி பெற்ற முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் ஒன்றில் அத்தீவின் பெண்கள் ஒரு கூத்து நடத்தினர்......

......ஒரு வீரன் வெற்றி பெற்று தன்னூர் திரும்புகிறான். மனைவியும் இளமகனும் தம்பியும் புன்னகை பூக்க வரவேற்கின்றனர்.........

......மறுநாள் அவ்வீரன் தன் மனைவியோடு கதறுகின்றான்...... காரணம், ஊரிலுள்ள சில பொறாமைக்காரர்களால் அவனுடைய ஒரே மகன் கொலை செய்யப்பட்டுவிட்டான்........

—இந்த வெறுங்கூத்தை நம்பித் துடிக்க அவன், பைத்தியக்காரனல்ல. அவன் வாழ்க்கையில் உண்மையிலேயே ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது.

வான மண்டலத்தில் சந்திரன் பிரகாசித்துக் கொண்டுதானிருந்தான். கடந்தகால நினைவலைகள் இன்னும் வாட்ட ஆரம்பித்தன.

"அண்ணன் சதிகாரர்களால் கொல்லப்பட்டதிலிருந்து நாம் பெற்றதொரு 'நீதியை' மகனுக்குச் சொல்லியிருந்தால் அநியாயமாகக் கொல்லப்படுவதிலிருந்து அவனைக் காப்பாற்றியிருக்கலாமல்லவா?"

"அன்று, தமையனைச் சதியால் கொலை செய்தவர்களைக் கொன்றதால் அண்ணனைப் பெற முடிந்ததா?"

"நானே புதல்வனைக் கொன்ற சதிகாரர்களைச் சிரச்சேதம் செய்வதால் மட்டும் இறந்த மகன் உயிர் பெற்று எழுந்து விடப்போகிறானோ?"

"வீரமிக்க அண்ணன் வஞ்சகத்தால் வீழ்த்தப்பட்டதை அவனிடம் கூறியிருந்தால் அவன் தப்பியிருப்பானே?"

இந்த எண்ணங்கள் என்ற அலைகளால் மோதுண்டு அளவிட முடியாத அந்தகார துக்க சாகரத்தில் அவன் தத்தளித்தான்.

செந்தமிழர் வாழும் நாட்டில் செய்தியன்ன சேதியொன்று, தான் கரைசேரும் நேரத்தில் காத்திருக்கும் என்று நினைத்தபோது அழுதே விட்டான். இப்படியே எவ்வளவு நாழிகை இருந்திருப்பான் என்று சொல்ல முடியாது,

வானத்து நிலாவைப் பார்த்தான். அவள் மேலைக்கடலில், அரசனின் கோபத்தைக் காண அஞ்சி தன் முகத்தை மறைத்துக் கொண்டாள்.

கதிரவன் எழும்பினான்! தமிழகக் கடற்கரையும் வந்து சேர்ந்தனர். முகத்தில் வருத்தம் கப்பிக் கொள்ள கரையில் இறங்கினான்.

என்ன ஆச்சரியம்! வீரம் சுடர்விட்ட கட்டமைந்த உடலோடு ஓடிவரும் தன் மகன் இராசேந்திரனை, மன்னர் மன்னன் இராசராசன் கட்டித்தழுவிக் கொள்கிறானே!

அவ்வாறானால் அருமை மகன் இராசேந்திரன் கொலை செய்யப்பட்டிருப்பான் என்று இராசராசன் நினைத்ததெல்லாம் வெறும் சபலம்தானா?

——ஆயிரம் முறை சொல்ல நினைத்த அந்தச் சொற்களைக் கூற வாயெடுத்தான். ஆனால் சொல்லவில்லை. நிறுத்திக் கொண்டான். தன் வாழ்க்கையில் நடந்த அந்த உண்மை நிகழ்ச்சியைக் கூறிய பின் சொல்லலாம் என்று எண்ணினான்.

"அப்பா! நீங்கள் மிகவும் கலங்கியவர் போல் காணப்படுகிறீர்களே, ஏன்?"

"உண்மைதான்! போருக்குச் சென்ற வேகத்தில் உன்னிடம் சிலவற்றைச் சொல்ல மறந்துவிட்டேன்!"

"அதற்காக ஏன் அப்பா மனக்கலக்கம்!"

"குழந்தாய்! கடந்த ஆயிரம் ஆண்டாகவே தமிழக வரலாற்றில், சூதறியா நெஞ்சினர் சூழ்ச்சிக்காட்பட்டிருக்கின்றனர். பேதமறியா மதியினர் பித்தராக்கப்பட்டிருக்கின்றனர். நாடறியா இனத்தவர் நல்லரசுகளைக் கவிழ்த்திருக்கின்றனர்!"

"அதனால்........?"

"நீயும் சூறையாடப்பட்டுவிட்டால் என் செய்வது என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டது. முடிசூடிய வேண்டிய நீ........"

"நான் போய் விட்டால்......மக்கள் தேர்ந்தெடுத்துள்ள நல்லமைச்சர்கள் இருக்கிறார்கள் நாட்டையாள......"

"ஆனால் என்னுடைய ஒரே மகன்......!"

இராஜேந்திரன் கண்களில் நீர் பெருகியது.

"நெஞ்சில் நஞ்சும், நாக்கில் தேனும் ஒழுகப் பேசுகிறவர்களின் வஞ்சகத்தால்தான் உன் பெரியப்பா—ஆதித்தகரிகாலர் வீழ்ச்சி அடைந்தார். அதை எண்ணினாலே, உள்ளம் வேகும்; குருதி, கோபத்தைக் கொப்பளிக்கும். கண்கள், அனல்பிழம்பாகும். நரம்புகள் துடிக்கும்; உடல் பதறும். ஆமாம் இராஜேந்திரா! அவ்வளவு கோரமான வரலாறப்பா அது!"

"அப்படியானால் அந்த வரலாற்றைக் கொஞ்சம் சொல்லுங்கள் அப்பா"

"சொல்கிறேன் இராஜேந்திரா" என்று கூறி இராசராசர் தன் மருமகளையும், மனைவியையும் அழைத்துக்கொண்டு தேரில் ஏறினார்.

இரதம், சோழ நாட்டின் பெருந் தலைநகர் தஞ்சை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

தந்தையும் மகனும் உருக்கமாகப் பேசிக்கொள்வதை ஆனந்தக் கண்ணீர் பொங்கப் பார்த்துக்கொண்டு அரசி வானமாதேவி தன் அருமை மருமகள் அருகே அமர்ந்திருந்தாள். இரதத்தின் சாரதிகூட, இராசராசர் கூறப் போகிற அந்த வரலாற்றைக் கேட்க, அமைதியாகக் குதிரையை ஓட்டினான். மன்னர் மன்னன் இராசராசன் பேசத் தொடங்கினான்:—

"இராசேந்திரா! இன்றைக்கு இருபதாண்டுகளுக்கு முன்—அப்பொழுது நீ வானமாதேவியின் வயிற்றிலிருந்தாய்!

* * * *

தஞ்சை அரண்மனையில்:—

என் சிற்றப்பா மதுராந்தக உத்தம சோழர் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார்.

ஒரு நாள்!

அவர் அன்பொழுகும் சொற்களில் 'அருள் மொழி' என அழைத்தார். அருகே சென்றேன். தாயினும் இனிய பாட்டி செம்பியன் மாதேவியார் அருகே உட்கார்ந்திருந்தார்கள். கண்டராதித்தர் —அவருடைய மகன்—அருகேதான் நின்றார்.

என் முகம் சிவந்திருந்தது! என் கண்கள் நீர் கொட்டக் காத்திருந்தன! என் நாவோ பேச முடியாமல் தவித்தது!

இருந்தாலும் ஏதோ சொன்னேன்!

"சிற்றப்பா!......நீங்கள் பேசிப் பேசிக் களைப்படைய வேண்டாம்......கொஞ்ச நேரம் பேசாமல் இருங்கள் சிற்றப்பா! உடல் நலமாக அது தான் வழி......"

அந்தப் பதிலை, தான் விரும்பாததுபோல் அவர் சொன்னார்.

"அருள்! நான் பெற்ற மகன் கண்டராதித்தனை விட உற்ற மகனாக உன்னை வளர்த்தேன். நீ அவனை உடன் பிறந்த தம்பியாகப் பாவிப்பதைக் காண நான் மனமெல்லாம் பூரிக்கிறேன்........ நான் நிம்மதியாகச் சாக வேண்டுமானால் உன்னிடம் சில நிகழ்ச்சிகளைச் சொல்லித்தான் ஆக வேண்டும்......"

அவர் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லினையும் என் மன ஏட்டில் தீட்டிக்கொள்ள ஆவலாய்க் காத்திருந்தேன். திடீரென்று, அவர் என்னைப் பார்த்து, "அருள் மொழி! வஞ்சகம் பெரிதா? வீரம் பெரிதா?" என்று ஒரு கேள்வியை வீசினார்.

* * * *

தஞ்சை நோக்கிச் செல்லும் இரதத்தில்:—

"நீதான் இந்த கேள்விக்குப் பதில் சொல்லேன்" என்று கதையைச் சொல்லிக் கொண்டு வந்த இராசராசர் தன் மகன் இராசேந்திரனைக் கேட்டார்.

வீரத்தின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறும் தந்தையார் இப்படி ஒரு கேள்வியைத் தன்னைப் பார்த்துக் கேட்பது கண்டு திடுக்கிட்டு விட்டான், இராசேந்திரன்.

"வஞ்சகத்தைவிட வீரம்தான் பெரிது. இதிலே என்ன சந்தேகம் அப்பா?" என்றான்.

"குழந்தாய்! நானும் இந்தப்பதிலைத்தான் அன்று என் சிற்றப்பாவுக்குச் சொன்னேன்" என்று பதில் கூறிய இராசராசர் கதையைத் தொடர்ந்தார்.

* * * *

அன்று என் சிற்றப்பா கூறினார்:—

"அருள் மொழி! நீ இந்தப் பதிலைத்தான் சொல்வாயென்பது எனக்குத் தெரியும்! வீரத்தினால் வெல்ல முடியாதது ஒன்றுமில்லை என்பதை உன் உள்ளத்தில் ஊன்ற முயற்சித்தவன் நானே! அதில் வெற்றியும் பெற்றமையில் நான் மகிழ்கிறேன். ஆனால் முடிசூட்டப்பட்டவுடன் நீ இவ்வுலகத்தைக் கூர்ந்து கவனிக்கும் திறன்பெற வேண்டும். அப்பொழுது காண்பாய் பெருவீரம் கூட சிறுவஞ்சகத்தால் அழிக்கப்படுவதை......"

* * * *

"அப்பா மன்னிக்க வேண்டும் வீரத்தின் முன்னால், வஞ்சகம், பொறியில் தப்பிய நரியென ஓடிடும் என்பதே என் எண்ணம்" என்று இராசேந்திரன் இங்கு குறுக்கிட்டுச் சொன்னான்.

"குழந்தாய்! அப்பா சொல்வதைக் கேட்டுக் கொண்டு வா, இடையில் பேசாதே!" என்றாள் வானமாதேவி.

"சரி அம்மா! நான் பேசவில்லை" என்றான் பாசாங்குக் கோபத்துடன்.

இதைக் கண்டு இராசேந்திரனின் மனைவிதான் முதலில் சிரித்தாள்.

பின் எல்லோருமே சிரித்தனர். இராசராசர் தொடர்ந்து பேசினார்.

* * * *

**அரண்மனையில்:—**

படுத்திருந்த சிற்றப்பா "சரி! உன் அண்ணன் அன்று......" என்று ஏதோ சொல்ல ஆரம்பிப்பதைக் கண்டு நான் சொன்னேன். "என் தந்தையாரைக் கொன்ற பாண்டியனைப் பழிக்குப் பழி வாங்கிய அண்ணா ஆதித்த கரிகாலரைத் தானே குறிப்பிடுகிறீர்கள்......"

"ஆம் அருள்!......என்றார் அவர். "அவர் வீரத்திற்கு இணையேது" என்றேன் நான்.

உடனே சொன்னார். "உன் அண்ணன் பெருவீரன்தான். ......ஆனால்......,வஞ்சகமறியாத வீரனாகத் திகழ்ந்ததால் அவன் கொலை செய்யப்பட்டு விட்டான்......!

"உள்ளத்தை வாட்டும் அந்தச் செய்தியை இப்பொழுது ஏன் ஞாபகம் ஊட்டுகிறீர்கள்?"

"வேண்டுமென்றேதான் அருள்!"

"ஏன்?"

"நீ தமிழகத்தின் தலைசிறந்த வீரனாகத் திகழ வேண்டும் என்ற காரணத்தால்தான்......"

"என்னையே வாட்டி வதைக்கும் அந்தச் செய்தியைக் கூறியா......?"

"ஆம்!......நீ வாழ வேண்டும் என்ற நல் விருப்பத்தால்தான்......நீ வஞ்சகத்தால் வீழக்கூடாது என்ற நல்ல நினைவால்தான்... '**வஞ்சகத்தின் முன் வீரம் நிற்காது**' என்பதை உன் அண்ணன்—மாவீரன்—உணராது போனதால் வீழ்ந்தான்—அதை உனக்குத் தெரிவிப்பதால் நீ அந்த மாய வலையில் வீழாமல் தப்பிப்பாய் என்ற நல்லெண்ணத்தால்தான்......"

"அண்ணனைக் கொலை செய்தது யார் என்று உங்களுக்குத் தெரியுமோ? தாமதியாது இப்போதே சொல்லுங்கள். வெட்டி வீழ்த்துகிறேன் உடனே சென்று ......"

"வெட்டி வீழ்த்த அவர்கள் வாழை மரங்களல்லவே அருள்மொழி!"

"கருவேல மரங்களானால், கோடாரி கொண்டு சாய்க்கிறேன் சிற்றப்பா"

"அப்படியிருந்தாலும் பரவாயில்லையே, அவர்கள் பார்ப்பதற்கு வழவழ வென்றிருக்கும் வாழை மரங்கள்தான்! நீ அவற்றை வெட்டுதற்குக் கோடரி எடுத்துச் சென்றாலும் அருகே சென்றவுடன், 'இவற்றை நாம் ஏன் வெட்ட வேண்டும்' என்று மயங்கி நிற்கச் செய்துவிடும் மாய மரங்கள்! வெள்ளைச் சிகப்பாய் அங்கே கனிகள் தொங்கும்! அவற்றைக் கண்டவுடன் நாக்கில் நீர் சுரக்குமேயல்லாது வீரம் பிறக்காது. கனிகளை ஈன்று தரும் திறத்தைக்கண்டால், அவர்களை நாட்டிற்கு நல்லது செய்யும் தொண்டர்கள் என்று உன்னை எண்ணச் செய்துவிடுவர். கோடரியை அங்கேயே போட்டுவிட்டு உன் கையில் வந்து வீழ்ந்த கனியோடு இன்பத்தை அள்ளிப் பருக வீடு திரும்புவாய்! அவ்வாழைகள் பயங்கர மனித உருவெடுக்கும்! நீ போட்ட அதே கோடரியால் உன்னையே வெட்டிச் சாய்க்கும்!

வேடிக்கையாக, விசித்திரமானதாகத் தோன்றுகிறது உனக்கு! ஆனால் ஆதித்தகரிகாலன் கொல்லப்பட்டது இப்படித்தான்!"

"அப்படியா சிற்றப்பா?,'

"ஆம் அது ஒரு குள்ள நரிக் கும்பலே தம்பி!... ஆனாலும் நீ உடனே அவர்களைத் தண்டித்துவிடக் கூடாது......உன் அண்ணன் மாண்ட அன்று நானும் உன்னைப்போல் துடித்திருந்தால் சதிகாரர்களைக் கண்டு பிடித்திருக்க முடியாது. வஞ்சகத்தை வஞ்சகத்தால்தான் வெல்லலாம் என்பதை உணர்ந்து அமைதியாக இருந்தேன். ஒற்றர்களைக் கொண்டு ஆய்ந்தேன். அவைகளைக் குறிப்பேட்டில் குறித்திருக்கிறேன். வஞ்சகர்களை அழைத்து விசாரித்துத் தண்டனை கொடு" என்றார்.

நான் தேம்பினேன்.

"அருள் மொழி! நீ தேம்பாதே. நான் சாகப் போகும் நாளில் வீரம் சுடர் விடும் நிலையில்தான் உன் முகம் இருக்கவேண்டுமே தவிர, சோகம் ததும்பும் நிலையில் இருத்தல்கூடாது. ஆதித்தன் கொலை செய்யப்பட்ட அன்று நானும் இப்படித் தான் தேம்பினேன்......சிற்றப்பனுகிய நான் பட்டத்தை அடைவதற்காக அவனைக் கொலை செய்தேன் என்று அந்தக் கயவர்கள் கயிறு திரித்து விட்டபோது தற்கொலை செய்து கொள் ளக்கூட முடிவு செய்தேன். ஆனால் உன் அன்பு மொழிதான் அன்று என்னைச் சாக விடவில்லை, அருள்மொழி, **வஞ்சகத்தின் முன்வீரம் நிற்காது** என் பதை நீ உய்த்துணர வேண்டும் அப்பொழுது தான் நீ பெறுகிற பெருவெற்றிகள் நிலைக்கும். அதற்காக நீ சதிகாரர்கள் அனைவரையும் ஒழித் துக்கட்டி விடலாம் என்பதாக நினைத்து விடாதே.

அவர்கள் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய ஒரு சிலரல்லர். எண்ண முடியாத அளவு இந்நாட் டில் நுழைந்து இதன் தனிப்பெருமையான மொழி, கலை, நாகரிகம், இலக்கியம், அத்தனை யையும் ஒழித்துக்கட்டி, சமயம் வந்தால் மன் னர்களைப் பெண்களைக் கொண்டோ மதமெனும் போதை புகட்டியோ மயக்கி, இவற்றால் வளைபா தாரைச் சதியால் தந்திரமாக வீழ்த்தக் காத் திருக்கும் சதாநந்தர்களையே முழுதும் கொண்ட து கும்பல் அவர்கள். மறுபடியும் கூறு கிறேன். அவர்கள் அரசியலிலும், சமூகத்திலும் மக்கள் உள்ளத்திலும் நீ ஒழித்துக் கட்டமுடியாத அளவு புகுந்திருக்கிறார்கள். நீ அவர்களை அழிக்க முயன்றால் அது உன்னையே அழித்துக் கொள்ளு வதாகும். ஆகவே நீ அவர்களைத் திருப்தி செய்ய முயல்"

"அது எப்படி முடியும்?"

"ஏன் முடியாது? உன்னிடம்தான் பொன்னும் மணியும், முத்தும், வைரமும் குவிந்திருக்கின்ற னவே அவற்றை அவர்களுக்குத் தானமாகக் கொடு! நாடெங்கும் கோயில்களை எழுப்பு! மடங் களையும் சத்திரங்களையும்கட்டு! அவற்றிலெல்லாம் அவர்கள் வயிறு கொழுக்க உண்ண வழிசெய்! அதிலேயும் அவர்கள் திருப்தியடையா விட்டால் தானமாக நிலங்களும் வீடுகளும் கொடு. இப்படி யெல்லாம் செய்தால் அவர்களுடைய வஞ்சகம் உன்னுடைய இரண்டு மூன்று தலைமுறைக்காவது சிறிதளவு குறைந்திருக்கும்"

"அதன் பின்னல்........"

"நீ அதைப் பற்றிக் கவலைப்படாதே...... அவர் கள் கொடுமை அதிகமாக அதிகமாகத்தான் நாட் டில் அறிவுதயம் ஏற்படும். அந்த அறிவுச்சுடர் முன் நிற்க முடியாமல் தானே அழிந்து விடுவர்... மற்றொன்று கூற மறந்து விட்டேனே! இத்தலை நகர் தஞ்சையிலேயே அப்பூசுரர்கள் மலைக்க நீ ஒரு பெருங்கோயிலைக் கட்டவேண்டும். நீ இந்தச் செய்கைகளை யெல்லாம் உன் பேராலேயே செய்தால் அவர்கள் சந்தேகிப்பார்கள். ஆகவே உன் பாட்டியார் செம்பியன் மாதேவியாரின் பெயர்ப்பற்றுதான் இதற்கெல்லாம் காரணம் என்று கூறு......... ஆனல், நீ உன் அண்ணன் ஆதித்த கரிகாலனைக் கொன்ற மூன்று சதிகாரர் களை மட்டும் தண்டிக்காமல் விட்டு விடாதே! 'வஞ்சகத்தின் முன் வீரம் நிற்காது" என்பதைநீ என்றும் மறக்காமலிரு. உன் பாட்டனாரால் எனக்கு உவந்தளிக்கப்பட்டஇம் மணிமுடியை உன்னிடம் ஒப்படைக்கும் இத்தருணத்தில் நான் உனக்குத் தரும் அழியாப்பரிசு,நீ என்றும் போற்றிக் காப்பாற்ற வேண்டியபரிசு, சிறந்த பரிசு, இந்த ஒரு வாக்கியந்தான்......வஞ்சகத் தின் முன் வீரம் நிற்காது......"

என்று கூறிக்கொண்டிருந்த போதே என் சிற் றப்பாவின் கண்கள் மூடின.

நானும், அங்கிருந்தவனையோரும்கதறியழுதோம்!

பின்னர் என்னல் அந்த சொற்களை ஒரு போதும் மறக்க முடியவில்லை. என்றென்றும் பறிக்க முடியாத விதமாக அந்தச் சொற்கள் என் உள்ளத்திலே ஆழப் பதிந்துபோய் விட்டன. அந்தச் சொற்கள் பொறிக்கப்பட்டுள்ள இடத்தி லேயே, அவற்றிற்குப் பக்கத்திலேயே, கொலை யுண்டுபோன என் அண்ணன் ஆதித்தன் தன் வெற்றி விழாவில் ஆற்றிய அரிய சொற்பொழிவு ஒன்றும் அழகாகப் பதிந்துபோய் இருக்கிறது.

அண்ணு ஆதித்தரின் வீரமுழக்கத்தில் சூட்சமம் உள்ள பகுதி—சதிகாரர்களின் கண்களை உறுத் திய சொற்கள் இவைகள்தாம்.

"......நம்மிடையே பொன்னும் காசும் தான மாக வாங்க வந்தோரை நம்பினதால்தான் கடந்த ஆயிரம் ஆண்டாகத் தமிழ்ப் பேரரசு எதுவும் தோன்றவில்லை......

......உழவர்களைப் போற்றுங்கள். ஊரார் சோற்றைத் தின்னும் உன்மத்தர்களைப் போற்று தீர்கள்......

......சாதி சமயம் என்ற பேரால் முன்னேற் றத்தைத் தடுக்கும் எதையும் அரசியலில் புகுத்த முயலாதீர்கள்......

* * * *

......ஆதித்த கரிகாலனின் சொற்களை, இராச ராசன் கூறிக்கொண்டிருந்தபோது அவர்கள் ஏறியிருந்த ரதம் சோழவள நாட்டின் தலைநகர்— தஞ்சையின் கோட்டை வாயிலை அடைந்து விட்டது.

அங்குக் கூடியிருந்த வெள்ளம் போன்றதமிழர் கூட்டம், விண்ணதிர, வானமளாவிய கோட் டைச் சுவரெல்லாம் எதிரொலிக்க, மா தென்னை வாழை யெல்லாம்கூட செவி மடுக்கக் கேட்ட தோ என, மகளிர் கூட்டத்துக் குண்டலங்க ளெல்லாம் ஆட,

"வாழ்க இராசராசன்"

"வெற்றி தமிழருக்கே!"

"வெல்க சோழநாடு!"

"வாழ்க இளவரசர் இராசேந்திரன்" என முழங்கிற்று. அரண்மனையில் அமைச்சர் முத லானோர் வாழ்த்துக் கூறினர். விருந்து மண்ட

பத்தினுள் இராசராசர் இராசேந்திரர் முதலானோர் சென்று அமர்ந்தனர்.

இராசேந்திரன் உள்ளத்தில் மக்கள் அப்பொழுது வாழ்த்திய பேரொலிகள் ஒலித்தன! அன்றும் பெரியப்பா ஆதித்தரை இப்படித்தானே மக்கள் வாழ்த்தியிருப்பார்கள். அப்படியும் அவரைக் கொலை செய்யும் எண்ணங் கொண்டோர் ஒரு சிலர் இருந்திருக்கின்றனரே! அப்படியானால் இன்றும் சிலர் இருப்பரோ என்று எண்ணமிடலாயிற்று அவன் உள்ளம். கதையின் முடிவை அறிய அவன் உள்ளம் துடித்தது.

அந்த நேரத்தில் இராசராசரே சொல்ல ஆரம்பித்தார்.

"அன்று ஆதித்தரை சதியால் கொலை செய்த ரேவிதாசன், சோமன், பரமேஸ்வரன் என்ற மூவரையும் தந்திரமாகப் பிடித்துவரச் செய்தேன். கொலை செய்யுமுன் சதியாலோசனை என்ன நடத்தினார்களோ அதைப் பேசச் சொல்லிக் கட்டாயப்படுத்தினேன்.

"உடல் வளர்க்கும் பூசுரர்களால்லவா? பயந்து உண்மையைக் கக்கினார்கள்! பேசினதை அப்படியே ஒப்புவித்தார்கள்.

* * * *

**சதியாலோசனை:—**

"கேட்டாயா ஆதித்தகரிகாலனின் பேச்சை?"

"பேச்சை மட்டுமல்ல, அவனை வாழ்த்திய பேரொலியையும் கேட்டேன்"

"வெறுங் கூச்சலடா அது"

"வெறும் கூச்சலா? நாம் இனிமேலும் பொருத்திருந்தால் நமது வம்சத்தையே அழித்துவிடும் வைர வாளடா அது!"

"அதற்காக......?"

"ஒரு வழி தேடவேண்டாமா?......"

"அந்த 'ஒரு வழி' நம்மை ஒரே வழியாய் ஒழித்து விட்டால்?......எல்லாம் வெறும் ஆகாச கோட்டை"

"ஆரியர்களின் ஆகாசக் கோட்டை பூமியிலுள்ள பல அசுரர்களின் கற்கோட்டைகளையே அழித்திருக்கிறது—மறந்து விடாதே"

"அது அந்தக்காலம்......"

"(மூளையைக் காட்டி) இதைச் செலவழித்தால் இப்பொழுதும் முடியும்......"

"உண்ட வீட்டிற்கே......"

"கிருஷ்ண பரமாத்மாவே இரண்டகம் செய்திருக்கும்போது......"

"வஞ்சக விஷத்தின்மீது தஞ்சம் என்ற வெல்லப்பாகைத் தடவுவோம். வா, பிறகு எல்லாம் சரியாகி விடுகிறது பார்"

* * * *

"—இராசேந்திரா, பேச்சு முழுதும் உண்மையோ இல்லையோ அந்தக் கடைசி வார்த்தைகள் முழுதும் உண்மையானவை"—சொல்லி முடித்தார் இராசராசர்.

"எப்படிக் கொன்றார்கள் என் பெரியப்பாவை?" என்று ஆவலோடு இராசேந்திரன் கேட்டான்.

"எப்படியோ வஞ்சகமாக ஏமாற்றிக் கொன்றார்கள்! அதைத் தெரிந்து நாமென்ன செய்யப் போகிறோம்!......ஆனால் நீ இதை மறந்துவிடக் கூடாது. வஞ்சகத்தின் முன் வீரம் நிற்காது"

வானமாதேவிமுதல் அனைவர் கண்களிலும் நீர் பெருகியது.

* * * *

கடைசி வரையில் இராசேந்திரன் தன் தந்தை இராசராசர் கூறிய இந்தச் சொற்களை மறக்காமல் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே நிலைநாட்டினான். இராசராசனே தன் சிற்றப்பா மதுராந்தகர் கூறியபடி தஞ்சையில் ஒரு பெருங்கோயிலை எழுப்பினான், வஞ்சக மனிதர்வாழும் இவ்வுலகத்தில், தான் கட்டிய கோபுரத்தின் நிழல் கூட விழக்கூடாது என்று நினைத்துத தானோ என்னவோ, கோபுரத்தின் நிழல், எந்த வேளையிலும் தரையில் விழாமல் இருக்கும்படியான முறையில் அக்கோயிலின் கோபுரத்தை அமைத்திருக்கிறான் இராசராசன். அதைப்பற்றி தஞ்சைக் கோபுரத்தையே கேளுங்கள். ஒரு வேளை விடை கூறினாலும் கூறும்! ஆனால் என்னைக் கேட்கக் கூடியது ஒன்றிருக்கிறது. "இந்த வரலாறு உண்மையா?" என்பதுதான் அது!

ஆம்! தமிழகத்தின் இணையிலா வீரன், சேரன் செங்குட்டுவனை ஒத்த மறத்தமிழன், இராசராசனின் அண்ணன், ஆதித்தகரிகாலசோழன் வஞ்சகமாகக் கொல்லப் பட்டிருக்கிறான் என்பது மட்டும் முழுஉண்மை.

இதை, உடையார்குடி கல்வெட்டுத் தெள்ளத் தெளிய எடுத்து விளக்குகிறது.

இதோ அக்கல்வெட்டு: "......சோழ அரசியல் பார்ப்பன அதிகாரிகள், சோழன் ராவிதாசனான பஞ்சவன் பிரமாதிராசன், பரமேஸ்வரனான இருமுடிச்சோழ பிரமாதிராசன், மலையனூரானான ரேவதாசகிருமவித்தன், ஆகிய மூவரும் ஆதித்தகரிகாலன் கொல்லப்பட்டதற்குக் காரணமானவர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டுத்தண்டிக்கப்பட்டனர்........."

* * * *

கல்வெட்டின் இவ் வாசகங்கள், வரலாற்றாசிரியர்திருவாளர் சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் தீட்டியுள்ள "**பிற்கால சோழர் வரலாறு**" என்னும் சிறந்த புத்தகத்தில் காணப்படுகின்றன.

* * * *

இப்போது கூறுங்கள்,

ஆரியமாயை, தமிழக வாழ்விலிருந்து அகற்றப் படவேண்டுமா, வேண்டாமா?

---

# பிரேதக் களை

( இராதாமணாளன் )

[தணலிடைப் பட்டுத் தத்தளிக்கும் புழு—இது, நெசவாளர் உலகின் இன்றைய நிலை.

வானிலே ஒய்யாரமாகப் பவனிவரும் வெண்ணிலா—இது, இராதாமணாளனின் கையிலே தவழ்கி விளையாடும் பேனு.

ஒரு நாள், இராதாமணாளனின் பேனு, நெசவாளர்கள் சிந்தும் கண்ணீர்த் துளிகளில் நிழலாடும் துயரக் காதையைக் கண்டது.

விளைவு?

இச் சிறுகதை!

படியுங்கள்!

படிக்கும்போது, கண்கள் குளமாகும்! உள்ளம் வேதனைக் கடலாகும்!

என்றாலும் படியுங்கள்!

படித்தபிறகு, கைத்தறி உலகின் கவலைக் குழி களைத் தூர்க்க உங்களால் இயன்ற உயர்பணி புரியுங்கள்.

இதோ, கதை! அல்ல!—இராதாமணாளனின் பேனு நர்த்தனம்!]

கூட்டம் கூட்டமாக மக்கள் கூவம் நதியை நோக்கி ஓடினார்கள்! அனைவர் விழிகளும் ஆற்றின் நடுபாகத்தில் போய் மொய்த்தன! பெண் ஒருத்தியைத் தூக்கிக்கொண்டு நீந்திவந்தான், ஒருவன்! சின்னஞ்சிறு குழந்தை ஒன்றைக் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு நீந்தி வந்தான், வேறொருவன்! ஆவலமாகக் கண்களை விரித்துக் கொண்டு, ஆச்சரியத்தோடு மக்கள் அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தனர்!

பதினெட்டு வயதுடைய அந்தப் பெண்ணை, ஈர ஆடையோடு, கரையின் மீது கொண்டு வந்து படுக்க வைத்தான், தூக்கிக் கொண்டு வந்தவன்! தன்னைச் சுற்றிலும் நடப்பதொன்றும் அவளுக்குத் தெரியாது! அவள் சுய நினைவு அற்று தரையில் கிடந்தாள்! அவள் அருகே இரண்டுமாதக் குழந்தையின் பிணம்!

"அய்யோ, பாபம்! என்ன கஷ்டமோ?"

"என்னதான் கஷ்டமாக இருந்தாலும், இப்படியா பட்டம் பகலிலே ஆற்றிலே விழுவது?"

" இவள் மட்டும் விழுந்து சாவதை விட்டு, இந்தச் சிசுவைவேறு சாகடித்து விட்டாளே!"

"காலமே கெட்டுப் போயிற்று, தம்பி! திருட்டுத்தனமா இப்படிக் குழந்தையைப் பெற்றுக்கிறதும், மானத்திற்குப் பயந்து உயிரை மாய்த்துக் கொள்கிறதும் சகஜமாய்ப் போய்விட்டது!"

"முகத்தைப் பாத்தால், அப்படிக் கெட்ட நடத்தை உள்ளவளைப் போலத் தெரியவில்லையே!"

"விபசாரி என்றால், நெற்றியில் எழுதி ஒட்டியிருக்குமா என்ன? சுத்த பைத்தியம் போலப் பேசுகிறாயே!"

"அப்படியெல்லாம் ஒரு பெண்மீது அபாண்டமா பழி சுமத்தாதீர்கள்! ஹும்! அவள் கழுத்தில் தாலி இருப்பது தெரியவில்லையா உங்களுக்கு! கட்டினவன் பொல்லா தவனாக இருப்பான்! கண்டபடி அடிப்பதும் திட்டுவதுமாக இருந்திருப்பான்! பாபம், அந்தத் தொல்லைகளைத் தாள முடியாமல், இப்படித் துணிந்துவிட்டிருப்பாள்!"

"ஆமாம் ஐயா, நீங்க சொல்றதுதான் நிஜமாக இருக்கும்!"

"இவ்வளவு அழகான குழந்தையைக் கொல்ல இவளுக்கு எப்படித்தான் மனம் துணிந்ததோ?"

சுற்றிலுமிருந்தவர்கள் இப்படிப் பற்பல விதமாகப் பேசிக்கொண்டிருக்கையில், கூட்டத்தை அவசர அவசரமாக விலக்கிக் கொண்டு போலீஸார் உள்ளே நுழைந்தார்கள்! அவளையும் குழந்தையையும் தூக்கி ரிக்ஷாவில் ஏற்றிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார்கள்.

போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததும், மயக்கம் சிறிது சிறிதாகக் குறைந்துவிடவே, அந்தப்பெண் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள்! சுற்றிலும் போலீஸார் இருப்பதைக் கண்டதும், 'ஆ'வென்று அலறினாள்! தன் அருகே தன் குழந்தை பிணமாகிக் கிடப்பதைப் பார்த்ததும், கதறினாள்!

"இங்கேயெல்லாம் இப்படி அழக்கூடாது!" என்று அதட்டினார், ஒரு போலீஸ்காரர்.

"உன் பெயர் என்ன?" என்று கேட்டுவிட்டு, அவள் சொல்லப்போகும் பதிலை எழுதத் தயாரானார், சப் இன்ஸ்பெக்டர்!

"பார்வதி!" என்று பயந்துகொண்டே பதிலளித்தாள் அந்தப் பெண்.

"உன்னை யார் ஆற்றில் பிடித்துத் தள்ளினார்கள்?"

"நானேதான் விழுந்தேன்!"

"ஏன்?"

"தற்கொலை செய்துகொள்ள!"

"இந்தக் குழந்தையைக் கொன்றதும் நீதானே?"

"ஆமாம்!" என்று கூறிவிட்டு, குழந்தையின் முகத்தைப் பார்த்துத் தேம்பித் தேம்பி அழுதாள் அத் துடியிடையாள்!

குழந்தையைக் கொலை செய்ததாகவும், தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகவும், பார்வதியின் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துகொண்டனர்!

* * *

"இப்பொழுது உன் மேனி, ஒருவித தனி மினுமினுப்போடு அழகு வீசுகிறது!"

"இன்றைக்கென்ன காலை நேரத்திலேயே ஆரம்பமாகிவிட்டது வர்ணனை?"

"காலைநேரமாக இருந்தால் என்ன, மாலை நேரமாக இருந்தால் என்ன? ஆசை என்பது அணையாத விளக்கு! அதன் ஒளி எப்பொழுதும் வீசியது வீசியபடியே இருக்கும், பார்வதி!"

"அத்தான், அந்த ஒளியினால்தானே நான் மினுமினுப்புப் பெற்று இருக்கிறேன்!"

"ஆமாம் பார்வதி! பெண்கள் கர்ப்பவதியாக இருக்கும்போது தனி அழகோடு காணப்படுவார்கள் என்று சொல்வது வழக்கம்! அதை இப்பொழுது உன்னிடம் பார்க்கிறேன்!"

"மறைத்து மறைத்து ஏன் பேசுகிறீர்கள், அதற்கு முன் நான் விகாரமாய் இருந்தேன் என்று நேரடியாகவே சொல்லுங்களேன்!"

"பார்வதி, நீதானே இந்த ஊரிலேயே ரதி! அதனால்தானே உன்னைக் கட்டிக் கொள்ள ஒற்றைக் காலில் தவம் கிடந்தேன்!"

"போதும், போதும்! உங்கள் கேலியும் விளையாட்டும்!" என்று கூறிக்கொண்டே பார்வதி எழுந்தாள்! எழுந்தவளின் கையைப் பிடித்து இழுத்து உட்காரவைத்தான், ஆறுமுகம்!

"வேலை, அப்படியே இருக்கிறது — நான் போகவேண்டும் விடுங்கள்!"

"போகலாம் பார்வதி, குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் சொல்லு!"

"இன்னும் ஐந்து மாதம் போகட்டும் சொல்லுகிறேன்!"

"ஏன்?"

"அப்பொழுதுதானே தெரியும், அது ஆணா பெண்ணா என்று!"

இருவரும் கொல்லென்று சிரித்தார்கள்! அவன் பிடியை விலக்கிக் கொண்டு, ஓடிவிட்டாள் அவள்!

ஆறுமுகம் ஒரு நெசவுத் தொழிலாளி. அவனுக்கென்று சொந்தமாகக் கொஞ்சம் நிலமுமிருந்தது! நிலத்தில் விளைந்து வரும் நெல்லைச் சாப்பாட்டிற்கு வைத்துக் கொண்டு, நெசவுத் தொழிலில் கிடைக்கும் பணத்தை, ஆடை அணிகளுக்காகவும், உல்லாசத்திற்காகவும் செலவழித்துவந்தான், ஆறுமுகம்!

நாட்கள், மாதங்கள், ஓடி மறைந்தன. மழைபெய்ய வில்லை— நிலம் விளைய வில்லை! நூல் கிடைக்கவில்லை — நெசவுத் தொழில் நடைபெறவில்லை! பிறகு வறுமையின் கோரத் தாண்டவத்திற்குச் சொல்ல வேண்டுமா! ஏழை எளியவர்களின் வாழ்க்கை சிதறிச் சின்னாபின்னமாகியதைக் கூற வேண்டுமா?

கர்ப்பிணியாக இருக்கும் தன் மனைவியின் கால் வயிற்றிற்குக் கூட சோறு கிடைக்கவில்லையே என்ற கவலை ஆறுமுகத்திற்கு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போயிற்று! செய்யும் தொழிலுமில்லை—நிலத்திலும் விளையவில்லை — என்ன செய்வான்! பார்வதியின் நகைகளை ஒவ்வொன்றாக விற்று நாட்களை ஓட்டிக்கொண்டிருந்தான்! நகை விற்ற பணத்தை எடுத்துக் கொண்டு, அரிசி வாங்கலாம் என்று கடைக்குச் சென்றால், அங்கே அரிசி கிடைப்பதில்லை! வேறு வழியின்றி அதிகப் பணம் கொடுத்துக் கள்ள மார்க்கெட்டில் அரிசி வாங்கிக்கொண்டு வீட்டிற்குப் போவான்!

அரிசி—இல்லை; நூல்—இல்லை; வெல்லம்—இல்லை; சர்க்கரை-இல்லை! மனிதனுக்கு எவை

சீலவ தேவையோ உயிர் வாழ்ந்து இருப் பதற்கு—அவை எல்லாம் இல்லை! கிடைப்ப தில்லை! கிடைப்பதற்கான வழிவகை செய்வது மில்லை! ஆனால் ஆட்சிப் பீடத்தில் மட்டும் ஓய்யாரமாகக் கொலுவீற்றிருக்கிறார்கள் உல்லாச மந்திரிகள் — வேதனையும் வெட்கமுமில்லாமல்! மக்களுக்கு நன்மை செய்யும் விதத்தில் ஆளத்தெரிந்தால், ஆளவேண்டும்! இல்லாவிட்டால் ராஜிநாமா செய்துவிட்டு, அரசியல் அனுபவமும் ஆளும் திறமையும் மிக்கவர்களுக்கு இடத்தைக் காலி செய்து தர வேண்டும்!

சஞ்சல மிகுதியினாலும், சரியான உணவு இல்லாமையினாலும் ஆறுமுகம் படுத்த படுக்கையாகிவிட்டான்! ஜுரமும், விடாத வயிற்று வலியும் அவனைப் படாத பாடு படுத்தின! எலும்பும் தோலுமாகிவிட்டான்—ஏக்கம் அதிகமாகிவிட்டது பார்வதிக்கு! பார்வதி அப்பொழுது பத்துமாதக் கர்ப்பிணி! என்ன செய்வாள்?

வேறு வழியில்லாமல் சென்னையிலிருக்கும் ஆறுமுகத்தின் அக்கா வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள், தாலியை விற்ற பணத்தைக் கொண்டு! ஆறுமுகத்தின் அக்காள் தனம், பெரிய வாயாடி! முகத்தாலும் வாயாலும் அடித்து வேளாவேளைக்கு ஏதோ கொஞ்சம் அவர்களுக்குப் போட்டாள், சாப்பிட!

ஆறுமுகத்தின் நிலைமை மிகவும் மோசமாகி விடவே அவன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான்! பார்வதிக்கு ஆண்குழந்தை பிறந்தது! குழந்தையைக் கண்டு மகிழ்ச்சி கொள்ள முடியாத அளவிற்கு, அவள் உள்ளத்தை, வேதனை கவ்விக்கொண்டிருந்தது!

"அப்பன் சம்பாரித்து வைத்திருக்கும் சொத்துக்கு மகன் பிறந்துவிட்டானா?" என்று தனம் கையாண்டி செய்யும்போது, பார்வதியின் உயிரே போய்விடும் போலாகிவிடும்! தனம் செய்த கொடுமைகளை எல்லாம் சகித்துக் கொண்டிருந்தாள் அவள்.

ஆறுமுகத்தின் கண்களில் மகிழ்ச்சி ஒளி வீசியது, ஆண்குழந்தை பிறந்திருக்கிறான் என்ற செய்தியைக் கேட்டதும்! நல்ல நிலையில் இருந்திருந்தால் குழந்தைக்கு என்ன என்ன செய்திருப்போம் என்றெண்ணியதும் அவன் அழுதேவிட்டான்! அழுத ஐந்தாம் நாள், ஆவி அவனை விட்டுப் பிரிந்துவிட்டது! ஆறுமுகம் பிணமானான்! பார்வதியும் அவள் குழந்தையும் ஆதரவற்ற அனாதைகளானார்கள்!

ஒரு மாதம், இரண்டு மாதங்கள் எப்படியோ சென்றுவிட்டன!

"உன்னையும் உன் குழந்தையையும் வைத்துக்கொண்டு யார் தண்டபுண்டம் கொட்டுவது? சனியன்கள் எங்கேயாகிலும் தொலையும் என்று பார்த்தால், தொலையும் வழியாகத் தெரியவில்லையே!" என்று அடிக்கடி, தனம், சலிப்போடும் வெறுப்போடும் கூறிக்கொண்டிருந்தாள்! பார்வதியும் அவள் குழந்தையும் எங்கே செல்வது? எப்படிப் பிழைப்பது?

யோசித்தாள் பல நாட்களாக அந்த அபலைப் பெண்! அதன் முடிவுதான், அவளும் குழந்தையும் கூவம் நதியில் குதித்துவிட்டது, செத்து மடிவதற்காக!

* * *

வழக்கு மன்றம்! குற்றவாளிக் கூண்டில் பார்வதி நிறுத்தப்பட்டாள்!

"உன் பெயர்தானே பார்வதி?" என்று நீதிபதி கேட்டார்.

"ஆமாம்!" என்று அழுதுகொண்டே பார்வதி பதில் கூறினாள்!

"நீ உன் குழந்தையைக் கொன்றது உண்மையா?"

"ஆமாம்!"

"தற்கொலை செய்துகொள்ள முயன்றது உண்மையா?"

"ஆமாம்!"

"ஏன்?"

பார்வதி தன் சோக மிக்க வரலாற்றைச் சொல்லி முடித்தாள், "தற்கொலையைவிட எனக்கு வேறுவழி ஏது?" என்ற கேள்வியோடு!

நீதி மன்றத்தில் கூடியிருந்தவர்கள் உள்ளத்தில் வேதனை! முகத்தில் பிரேதக்களை!

நீதிபதி துக்கத்தை அடக்கிக்கொண்டு அவள் முகத்தை உற்றுப் பார்த்தார், "வாழு வழி செய்! முடியாவிட்டால் சாக வழிவிடு!" என்று பார்வதியின் முகம், அவரிடம் சொல்லியது! பிரேதக்களை நிறைந்த அவர்முகம் கூரையைப் பார்த்தது! யோசித்தார்! என்ன தீர்ப்பு வழங்குவது?

# பொங்கல் வந்தது பொங்கல்!

[முடியரசன்]

நல்லதிரு நாளென்றார், உழைப்போர் யாரும்
நயக்கின்ற பொங்கலென்றார் மகிழ்ந்தோம்; ஆனால்
சொல்லரிய துயர்தாங்கி உழைக்கும் குப்பன்
சோர்ந்தநடை போடுகின்ற சுப்பன் அன்னோர்
கல்லுடைத்து மண்வெட்டிக் கஞ்சி இன்றிக்
கதறுகிறார் பொங்குகிறார் அவரி டத்தே
வெல்லமுடன் அரிசிபெறக் காசும் இல்லை!
அவைபெற்றால் பொங்குதற்கோ வீடும் இல்லை!

இந்நிலையை உணர்வதற்கோ அறிவும் இல்லை!
இழிநிலையை நீக்குதற்கும் கல்வி இல்லை!
அந்நிலையைப் போக்கிடுக என்று சொன்னால்,
அமைதியுடன் கேட்டுநலம் செய்வ தற்கோ,
நன்னிலைய அரசியலும் இல்லை! இல்லை!
நாடுகின்றார் தன்னலமே நாட்டை யாள்வோர்
எந்நிலையில் கொண்டுசெலும் இந்தப் போக்கு?
எனமனத்தே பொங்குகிறோம் வந்தாய் பொங்கல்!

வந்திடுக! வந்தெமது நிலையும் காண்க!
வளம்வேண்டும்! சுரண்டுதலை வேண்டோம்! என்பார்
நொந்திடுமா றரசளிக்கும் துயரும் காண்க!
நுண்ணறிவு வளர்ச்சிக்குத் தடையும் காண்க!
வெந்துவிடும் உனக்கென்று மனதி ருந்தால்!
வீணாகப் பணங்காக்கும் கூட்டத் தார்தாம்
சிந்தைமகிழ்ந் தார்ப்பரிப்பர் நின்னைக் காணின்!
சீரழியும் ஏழைகட்கோ ஒன்றும் இல்லை!

எத்தனைநாள் பொறுத்திருப்பர் இந்த வாழ்வை?
என்றேனும் எண்ணிடுவர்; எண்ணிப் பார்ப்பின்
இத்தனையும் எவராலே நேர்ந்த தென்றே
எளிதாகப் புரிந்துவிடும்; புரிந்தால் அந்த
உத்தமர்உன் மத்தராவர்! ஏழை மக்கள்
உள்ளிருக்கும் எலும்பெல்லாம் அம்பே யாகும்!
அத்திருநாள் வந்துவிட்டால் சுரண்டல் இல்லை
அப்பொழுதே பொங்கலெனும் நாளே! நல்லை!

# இந்திய வரலாற்றில் இரண்டோர் ஏடுகள்!

[இரா. இளஞ்சேரன்]

[ஆரிய மாயை ஒரு பயங்கர பலிபீடம்.

அந்தப் பலிபீடத்திற் சிக்கிச் சிதைந்து மாண்டு மறைந்தவர்கள் ஆயிரமாயிரம்.

இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றுச் சுவடியை ஒருமுறை புரட்டிப் பார்த்தாலே போதும், அருந்திறல் வீரர்கள் பலர் ஆரிய வஞ்சகத்தால் சாய்க்கப்பட்ட சோக சம்பவங்கள் சென்ற ஈராயிரம் ஆண்டுக் காலத்தில் ஏராளமாக நிகழ்ந்திருப்பதை எவரும் உணரலாம்.

வீரத்தை, வஞ்சகம், வெட்டி வீழ்த்திய அத்தகு வேதனைக் காட்சிகள் ஏழுமட்டும், இந்திய வரலாற்றுச் சுவடியிலிருந்து பிய்த்தெடுக்கப்பட்டு இங்கே தரப்பட்டுள்ளன.

இந்திய வரலாற்றில் இரண்டோர் ஏடுகள்தான் இவை—என்றாலும் இவற்றிலிருந்து கிடைக்கும் பாடத்திற்கு நிகராக, வேறு புத்தகங்கள் ஓராயிரம் படித்தாலும் கிடைக்காது.

ஆம்! இந்தியத் துணைக்கண்டத்தின் சென்ற கால வரலாற்றில், ஆரியம், அவ்வப்போது நிகழ்த்திய திருவிளையாடல்களின் தன்மையைத் தெள்ளத் தெளிய விளக்குவது இச் சிறந்த எழுத்தோவியம்.

படியுங்கள்—படித்துவிட்டால், பிறகு, உங்கள் வாழ்விலே ஆரியம் புகுந்தால் அதனை உடனே விரட்டியடிக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை நீங்களே உணர்வீர்கள்.]

## ஏடு 1

படியாத முட்டாளின் இதயத்தைப் போல எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. இருளின் நடுவே ஒரு சிறு குடிசை; குடிசையினுள்ளே இருவர் சிந்தனையில் சிக்கியிருக்கின்றனர். அவர்களுக்கு இடையே இருக்கும் அகல் விளக்கு அங்குள்ள இருளை விரட்டியடித்துக் கொண்டிருக்கிறது. அமைதியைக் கிழித்துக்கொண்டு பேசுகிறார் ஒருவர்.

"சந்திரகுப்தா! இந்த நந்தன் நாடாளும்வரை நமக்கு நிம்மதியே இல்லை. அவன் அழிய வேண்டும்—ஆம், நாம் அவனை அழிக்கவேண்டும்."

"சாணக்கியரே! நாமோ எலிகள்; இமயத்தைப் பெயர்க்க நம்மால் இயலுமா? எதற்கு வீணசை? விட்டுவிடும் அந்த எண்ணத்தை.".

"சந்திரகுப்தா! நீ இப்போதே பயந்து சாகிறாயே! நாளை, சாம்ராஜ்யத்தையே, நீ எப்படித்தான் கட்டி சமாளிக்கப் போகிறாயோ தெரியவில்லை!"

"அவனோ அரசன்! நாமோ ஆண்டிகள்! அவனை அழிப்பது அவ்வளவு சுலபமல்ல; மேலும் அவனிடம் பலமான சேனை இருக்கிறது."

"நம்மிடம் அருமையான சூழ்ச்சி இருக்கிறது"

"அவன் வீரன்!"

"நாம் விவேகிகள். சந்திரகுப்தா, சஞ்சலப்படாதே! இன்னும் இரண்டே நாட்களில் அவன் ஆட்சி அஸ்தமித்துவிடும்......அதோடு ஆட்சியும் நம் வசமாகிவிட்டால்......"

"சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல்தான்."

சூழ்ச்சிகளைச் செய்து செய்து பழுத்துப் போன ஆரியத் தலைவன் சாணக்கியனின் மூளை பழுதாகி விடவில்லை.........உபாயம் உருவாகிறது......அகல் விளக்கின் மங்கிய ஒளியிலே கௌடல்யரின் சிவந்த முகம் மேலும் குரூரமாகக் காட்சியளிக்கிறது......மறு கணம் ஒரு விட்டில் பூச்சி விளக்கிலே வீழ்ந்து வெந்து மடிகிறது.

கல, கலவென நகைக்கிறார் கௌடல்யர். அந்த வெறிச் சிரிப்பிலே வீசுகிறது விஷஜ்வாலை.......

அந்த நகைப்பின் ஒலியிலே நந்த சாம்ராஜ்யமே சரிந்து விடுமென்று யார்தான் ஆருடம் கூறி யிருக்கமுடியும் அந்த நேரத்தில்? ஆனால், இறுதியில் அந்த ஆரியத் தலைவனின் நகைப்பொலியால் நந்த சாம்ராஜ்யமே நசிந்துதான் போயிற்று.

"சந்திரகுப்தா! சாணக்கியனின் மூளை சாமான்யமானதல்ல; மார்க்கத்தைக் கண்டுபிடித்துவிட்டேன்" கௌடல்யரின் குரலிலே ஒரு புதுமுறுக்கு தெறித்தோடுகிறது.

"அலெக்ஸாண்டரிடம் சென்று ஆட்சிப் பீடத்தில் அமரத்தக்க ஆற்றல்மிக்கவன் நீதானென்று கூறு. அந்நிய நாட்டான்தானே! நம் வலையில் எளிதில் சிக்கிக்கொள்வான்."

"அவனைப் பார்த்தாலே என் நெஞ்சு பதறுகிறது. ஒருவேளை என் உயிருக்கே உலைவைத்து விட்டால்........"

"பேடிபோல் பேசாதே! ரணகளத்தில் ரத்தத்தைக் கண்டு அஞ்சுவதா? அலெக்ஸாண்டருக்கு நந்தனின்மேல் கோபமுண்டாகும்படி தூபமிடு! சென்றுவா"

*　　*　　*　　*

"டாண்! டாண்" என்ற மணியோசை அந்த மஹால் முழுதும் எதிரொலிக்கிறது. அலெக்ஸாண்டர் அங்குமிங்குமாகப் பீடு நடை போட்டுக் கொண்டிருக்கிறான். அவனது செருப்புகளின் ஒலி நிசப்தத்தைக் கிழிக்கிறது. சந்திரகுப்தன் சாந்தமே உருவானதுபோல் நிற்கிறான்.

"குப்தா! நந்தன் என்னை நாடோடி என்றான்?" —கிரேக்க வீரனது கேள்வியிலே கோபம் கொப்பளிக்கிறது; கண்களோ கனல் களஞ்சியங்களாய் விட்டன.

"ஆமாம். தாங்கள் சொந்த நாட்டைவிட்டு அந்நிய தேசங்களின்மீது படையெடுக்கிறீர்களாம். அதனால்......!"

"அற்பன்! ஆணவத்தால் ஆடுகிறான்! எரிமலையை இலவம் பஞ்சு எதிர்க்கிறது! வேண்டுமென்றே வீழ்ச்சியை வரவழைத்துக் கொண்டான், வீணன்"

"தங்களைப் புகழ்ந்தேன் என்பதற்காகவே தான் என்னையும் அடித்துத் துரத்தி விட்டான்"— சந்திரகுப்தன் சரடு திரிக்கிறான். அவன் வேலை அவனுக்கு!

"நம் வீரத்தை அவ்வளவு மட்டமாகவா மதித்து விட்டான், மடையன்! குப்தா! இனி, நாட்டின் மன்னன் நீயே! நந்தன், நாசத்தை அணைத்துக் கொள்வான். பொங்கும் கடலலை போன்ற என் படையுடன் போ! வெற்றி அன்னையின் ஆசை முத்தம் உனக்கே!"

மன்னனின் கோபம் மடைதிறந்த வெள்ளமாகிறது. சந்திரகுப்தன் முகத்திலே களிப்பு சதிராடுகிறது.

*　　*　　*　　*

சமர்க்களம்!

சங்குகள் முழங்குகின்றன; சாவின் மடியிலே வீரர்களின் பிணங்கள் சுருண்டு விழுகின்றன; வாளொடு வாள் மோதும் ஒலி வானைப்பிளக்கிறது; போர்ப்பூமி சிவப்பு நிலமாகி விட்டது; இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடுகின்றது; சூரியன் தன் ஒளிக்கதிர்களைச் சுருக்கியபடி மலைவாயிலில் விழுகிறான்; போர்க்களமெங்கும், மயான அமைதியும், சூன்யமும் நிலவியிருக்கின்றன. சாணக்கியன் அமைத்த சூழ்ச்சிப் பொறி ஒரு பெரும் சூறவளியையே கிளப்பி விடுகின்றது. வேதனைமிகுந்த நிகழ்ச்சி! வெறிகொண்ட வேழத்தால் தூக்கி எறிப்பட்ட நந்தனின் கடைசி மூச்சு காற்றிலே கலக்கிறது.

சாணக்கியன் சிரிக்கிறான்.

அந்த ஆரியத் தலைவனுக்கு, தான் கண்ட கனவு பலித்து விட்டதே, என்ற பரவசம்! நந்த சாம்ராஜ்யத்தின் கொடி இறக்கப்படுகிறது. குப்த சாம்ராஜ்யத்தின்புதிய கொடி உயர்த்தப்படுகிறது.

அலெக்ஸாண்டர் ஆசிகூறுகிறார். சந்திரகுப்தன் மன்னனாகிறான். அறிவுரை சொல்லும் ஆலோசகராக அமர்கிறார் ஆரிய சாணக்கியர். பகவத் கீதை ஏந்திகள் பரவச கீதம் பாடுகிறார்கள். கனபாடிகள் கூட்டம் களிப்புக் கடலில் நீந்துகிறது.

---

## ஏடு 2

"பிரகாதிபத்யா! சாணக்கியரின் காலமுதல் பிராமணர்களுக்குக் கொடுத்து வந்த சலுகைகளை நிறுத்திவிட்டாயாமே! உன் போக்கு எனக்குப் புரியவில்லை"

"பிராமணோத்தமரே! பொக்கிஷத்திலுண்டாயிருந்த பொருளனைத்தும் பெருமாள் கோயில் பூஜையில் செலவழிந்து விட்டது. பொதுமக்களின் மீது விதித்த வரிகள் போதாவா? அவர்களது உள்ளம் சூறவளியாகி விட்டால் சாம்ராஜ்யப்படகு சரிந்து விடுமே! ஆகையால்........"

"ஆண்டவனின் அவதாரங்களை அலட்சியப்படுத்துவதா? அக்கிரமம் புரிந்து விட்டாய்! அழிந்து போவாய்"

பிரகாதிபத்தியன் சந்திரகுப்தனின் சந்ததியல்லவா? அவனுக்கும் உணர்ச்சியிருக்காதா என்ன?

"வேதியரே! உமது வேதாந்த வீச்சுகள் இங்கே வேண்டாம். வெளியே போம்!"

"பிரகாதிபத்யா! பூதேவர்களோடு மோதுவதும் பரமனோடு மோதுவதும் ஒன்றுதான் என்பதை நீ அறியாய் போலும்! உன் மூதாதையன் சந்திர குப்தனை சக்ரவர்த்தியாக்கியது யார்? ராஜதந்திரி சாணக்கியர். அவரது சந்ததிகள் நாங்கள். எங்களை இழிவுபடுத்தினால் நீ இறந்தொழிவது நிச்சயம்."

பிரகாதிபத்தியனின் உள்ளம் கோபத்தால் கொதிக்கிறது! விழிகளோ அனல் கோளங்களாய் விட்டன. வேதியர் விட்டால் தானே! விஷவார்த்தைகளை வர்ஷிக்கிறார்.

"விநாசகாலே விபரீதப்புத்தி! உன் வீழ்ச்சிக்கு நீயே விதை தூவிக்கொண்டாய்......ஆம், வேதனையை விலைகொடுத்து வாங்கிக் கொண்டாய்..... தொலைந்தாய், போ!"

* * * *

அக்ரகாரம் ஆர்ப்பரிக்கிறது. வேதியர் வீர முழக்கம் புரிகிறார்:—

"பிராமணர்களே! பிரகாதிபத்யனைப் பார்த்தேன். அவன் வேதங்களை விஷப்பேழைகளென்கிறான். பார்ப்பனியத்தைப்பழிக்கிறான். சலுகை தரமறுக்கிறான்; சாவை அழைக்கிறான். மௌரிய சாம்ராஜ்யத்திற்கே சமாதி அமைத்துவிட வேண்டியது தான்... வேறுவழியில்லை."

மௌரிய சாம்ராஜ்யத்தின் சேனாதிபதி புஷ்யமித்திரன். அவர் அந்தக் காலத்திலே வாழ்ந்து வந்த "காமராஜர்"! ஆரியம் தன் கருத்தை நிறைவேற்ற அவனைக் கைப்பாவையாக உபயோகிக்கிறது.

காமினி! அக்ரகார அழகிகளுக்குச் சிகரம் போன்றவள். அவள்மேல் நாட்டம் கொண்டிருக்கிறான் புஷ்யமித்திரன்! அவனது ஆசையை நிறையேற்றுகிறது ஆரியம். புஷ்யமித்திரன் புலிநிகர் வீரன்தான்; ஆனால் போகப் பூனையாகி விட்டான்! வேதியர்கள் வைத்த விஷம் அந்த அளவிற்கு வேலை செய்கிறது.

அவளுடைய தேன் மொழிக்கு முன் இவனுடைய தோள்பலம் தோற்று விட்டது. அவளுடைய வைரச்சிரிப்பிற்கு முன் இவனுடைய வாள் வீச்சு வீழ்ந்து விட்டது. காமினியின் கட்டழகின் முன்னே புஷ்யமித்திரனின் வீரம் பொசுங்கி விட்டது. வேதனை தோய்ந்த சம்பவம்! ஆம், அழகு, ஆண்மையை அழித்துவிடுகிறது.

* * * *

"உங்களைப் பெரிய வீரன் என்று உலகம் போற்றுகிறது, ஆனால் உங்கள் அன்பைப் பெற்ற நான் வெறும் அனாதைதானே!"

"காமினி! பீடிகைபோடுகிறாயே! விஷயத்தை விளக்கமாகச் சொல். வேண்டியதைத் தருகிறேன்."

"நான் இந்த சாம்ராஜ்யத்தின் பட்டமகிஷியாகவேண்டும்."

"விநோதமான வேண்டுகோள்! என் இதய ராணியே நீ தானே"!

"விருப்பத்தை நிறைவேற்ற முடியாதவருக்கு வீண் வார்த்தைகள் ஏன்? வெளியே போங்கள். என் விசாரத்தை அதிகமாக்க வேண்டாம்!"

"காமினி! சக்ரவர்த்தினி பதவி சாமான்யமானதல்ல; அது எட்டாக் கனி; நமக்குக் கிட்டவா போகிறது? வெண்ணிலவு வீண் போகிறதே! வா"

"என் வேண்டுகோள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லையே!"

"காமினி! பிரகாதிபத்தியனைப் பிணமாக்கச் சொல்கிறாய்! என்னைப் படுகுழியில் தள்ளப் பார்க்கிறாய்."

"இல்லை. தேசமெங்கும் உங்கள் கீர்த்தி முழங்க வேண்டுமென்பதே என் நெடுநாளைய ஆசை! அதை நிறைவேற்றுவீர்களா?"

"சரி! பார்ப்போம், வா!"

* * * *

"புஷ்யமித்திரன் வழிக்கு வந்து விட்டானா? மௌர்ய வம்சத்திற்குச் சமாதி அமைப்பேன் என முழங்கினீரே! உம்மால் முடிந்ததா?"

"அதை ஏன் கேட்கிறீர்! காமினியின் காலடியே கைலாசம்; வாய்ச்சொல்லே வைகுண்டம் என்று சொக்கிச் சுருண்டு கிடக்கிறான் சேனாதிபதி! கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையாதா? அதிலும் நம் காமினி நினைத்தால் கடவுளின் கண்களில் கூட மண்ணைப் போட்டு விடுவாள். ஆட்பெரும் படையால் சாதிக்க முடியாததை அந்த ஆரணங்கு சாதித்து விடுவாள். நம் ஆசை நிறைவேறும் நாள் அதிக தூரமில்லை; அவசரப்படாதீர். பொறுத்திருந்து பாரும்.

* * * *

வஞ்சகவலை வேகமாக விரிக்கப்படுகிறது. மௌரியமன்னன் பிரகாதிபத்தியன், தன் படை அணிவகுப்பைப் பார்வையிடுகிறான். திடீரென்று படை வீரர்கள் அவனைச் சுற்றிச் சூழ்கின்றனர். மூன்று கூர்வாட்கள் பிரகாதிபத்தியனின் ஆவியைப் போக்குகின்றன. சேனாதிபதி புஷ்யமித்திரன் புன்னகை புரிகிறான்.

பார்ப்பனீயம் பயங்கரமாகச் சிரிக்கிறது. வஞ்சகம் வாகை சூடுகிறது. வரலாற்றுப் பொன் ஏட்டிலே ரத்த வெள்ளம் தெளிக்கப்படுகிறது.

மௌரிய வம்சத்தின் ஆட்சி முடிவுற்று, சுங்க மன்ன பரம்பரையின் ஆட்சி முளைக்கிறது. புஷ்யமித்திர சுங்கன் மகுடம் புனைகிறான், ஆலயம் கொழுக்கிறது; அக்கிரமம் ஆனந்தப்பள்ளு பாடுகிறது.

## ஏடு 3

புஷ்யமித்திரன் ஏற்படுத்திய சுங்கமன்ன பரம்பரையில் ஒருவன் வேந்தன் தேவபூதி. அவனுக்கு இரண்டாம் திருமணம். தெருவெங்கும் தோரணங்கள் தொங்குகின்றன. மகிழ்ச்சியின் உருவங்களாக உலவுகின்றனர், மக்கள். எல்லோருடைய இதயங்களிலும் களிப்பு கரைபுரண்டோடுகிறது.

தேவபூதியைத் தொலைத்துவிட சூது புரிகிறது ஆரியம். அதற்காக அமைச்சன் வாசுதேவன் மனதில் ஆசைக் கனலை மூட்டுகிறது!

* * * *

"வாசுதேவா! வாழத் தெரியாதவனாயிருக்கிறாயே! அரசபீடம் உன் அணைப்பைப் பெற ஆவலோடு காத்திருக்றது. ஆலோசிக்க நேரமில்லை....

வியப்பால் வாசுதேவன் விழிகள் அகல விரிகின்றன.

"முட்டாள் தனமாகப் பேசுகிறீரே! முடவன் கொம்புத்தேனுக்கு 'ஆசைப் பட்டால் முடியுமா?"

"வாசுதேவரே! கரும்பைக் கடிக்கச் சொன்னால் 'கசக்குமே' என்று கவலைப்படுகிறீரே!"

"கவலைப்படவில்லை; கல்யாணமான புதிது; இன்னும் கொஞ்ச நாட்கள் செல்லட்டுமே! இளம் பெண்ணல்லவா? என்றுதான் சொல்கிறேன்."

"இருந்தாலும்...... காலம் நமக்காகக் காத்திருக்காது. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும். இப்போது சந்தர்ப்பமும், சூழ்நிலையும் நமக்குச் சாதகமாயிருக்கின்றன. இதுதான் ஆட்சிப் பீடத்தை அபகரிக்க சரியான நேரம்."

"அது சரி, அரசனை ஒழித்துவிட்டு நம்மால் ஆட்சி செய்ய முடியுமா?"

"செய்ய முடியாது, என்று சொல்லாதீர்; சிரமமென்று சொல்லும்; ஒத்துக் கொள்கிறேன்."

"உமது திட்டந்தான் என்ன? சொல்லுமே விளக்கமாக!"

"சொன்னால் புரியாது; சுருக்கு வழிதான்; தேவபூதியின் முதல் தாரத்தின் மகளுக்குத் தோழியாயிருக்கும் என் மகளைத் தெரியுமா உமக்கு?"

வாசுதேவனின் வாயெல்லாம் பற்களாகிவிடுகின்றன.

"ஆமாம், தெரியும்; நல்ல அழகி! அவளது..."

"வாசுதேவரே! வர்ணிக்க ஆரம்பித்து விட்டீரே! அவளுடைய வடிவமும், அரசியின் உருவமும் ஓரளவிற்கு ஒத்திருக்கின்றன அல்லவா?"

"ஆமாம்"

"அரசி இப்போது எங்கிருக்கிறாள்?"

"அரண்மனை அந்தப்புரத்தில்"

"வேந்தன்?"

"வசந்த மாளிகையில்......"

"இன்று இரவில் அரசி அரண்மனையை விட்டு வெளியே போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது உமது பொறுப்பு. என் மகளுக்கு அரசியைப் போல் அலங்கரித்து, அரசனின் அந்தப்புரத்துக்கு......"

"ஐயோ! தேவபூதியோ பசியுள்ளவன்; நேரமோ இரவு; நரியின் குகைக்குள் நண்டை அனுப்புவதா? நல்லமூளை உமக்கு! அவள் கதி?"

"அஞ்சாதீர்! தேவபூதி என் மகளைத் தீண்டுவதற்கு முன் அவனது ஆயுள் முடிந்துவிடும். திட்டம் எப்படி?"

"தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள் நீங்கள் தெய்வப்பிறவிகளென்று."

"நாளை நீர் நாட்டின் மன்னனாவீர்; ஆனால் அரசியை மட்டும் ஜாக்கிரதையாக......"

"அரண்மனையைச் சுற்றியும் வேண்டிய வீரர்களைக் காவல் வைக்கிறேன்; விசாரப்படாதீர்."

"வேண்டுகோள் ஒன்று."

"ஒன்றல்ல; ஓராயிரம் கேளும். உமக்காக எதுவும் செய்வான் இந்த வாசுதேவன்."

"பிரமாதமொன்றுமில்லை; என் உதவிக்குப் பிரதிபலனாக, நீர் மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என் மகளை! மறுக்கமாட்டீரே!"

"விவாகம்தானே; உமது விருப்பம்போலாகட்டும்"

* * * *

இரவு.....

எழில் நிலவு பாலைப் பொழிகிறது. குளிர் தென்றல் குளுமையைக் கொட்டிக் கொண்டிருக்கிறது. தேவபூதி வெண்ணிலாவை வெறித்தபடி பார்த்துக் கொண்டிருக்கிறான். காலடி ஓசை கேட்டுத் திரும்பினான். தோகை மயிலாள் வந்துகொண்டிருந்தாள். மகிழ்ச்சி, மன்னனது முகத்தை மலரவைக்கிறது. "மகாராணிக்கு வசந்தமாளிகைக்கு வர இப்போதுதான் வழி தெரிந்ததோ?" தேவபூதியின் குரலிலே கனிவு தோய்ந்திருக்கிறது.

அரசி மெல்ல நகைத்தாள்,

ஆர்வமுடன் அவளது பருவத்தோள்களைப் பற்றினான், தேவபூதி.

"வானமுதே! வசீகரப் பெட்டகமே!" என்பதெல்லாம் வாயளவில்தானே! செய்கையில்....

# மறைந்த நம் மாவீரர்கள்

★

**இப் பொங்கல் திருநாளன்று, மறைந்தும் மறையாதிருக்கும் இம் மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவது நம் கடமை.**




*ஓமான் கடலில் மறைந்துபோன*
**தளபதி பன்னீர் செல்வம்**



*சுயமரியாதை அன்னை*
**நாகம்மையார் ஈ. வெ. ரா.**



*அஞ்சாநெஞ்சன்*
**அழகிரிசாமி**



*அறப்போர் வீரர்*
**வேலாயுதம்**

மகாராணியின் குரலிலிருந்த மாற்றத்தைக் கூட கவனிக்கவில்லை மன்னன். பாவம் அவனுக்கு மனப்பசி! அவளது வாலிப உடலிலே வேந்தனின் கரங்கள் விளையாடுகின்றன—விளக்கு அணைக்கப்படுகிறது. வேந்தன் திகைத்தானா? இல்லை, தித்திக்கும் முத்தத்தை எதிர்பார்த்தான். முத்தம் கிடைத்தது; குளிர் இதழாலல்ல; கொடுவாளால்!

புழுப்போல் துடிக்கிறான் புரவலன்! "அக்ரமக்காரி! சதிசெய்து விட்டாயே! விஷ சர்ப்பமே! நீ......" அவனது கடைசி மூச்சைக் காற்று அணைத்துக்கொள்கிறது. சல்லாபபுரியே அவனுக்குச் சாவுக் கோட்டமாகி விடுகிறது.

"சங்கமன்ன பரம்பரையின் சூரியன் அஸ்தமித்து விட்டது" என்று முணுமுணுத்தாள் அந்த சூதுக்காரி! அவளது கடுங்கும் கரத்திலே ஒரு கட்டாரி! அதிலிருந்து ரத்தம் சொட்டுகிறது.

பிறகு......? வாசுதேவன் மன்னனாகிறான்; வேதியர்களின் வேட்டைக்குக் கேட்கவா வேண்டும்? பூசுரர்களின் ஆட்சி பூத்துக் குலுங்குகிறது.

---

## ஏடு 4

"சிவாஜி முடிசூட்டிக் கொள்ளப் போகிறானாம். என்ன அக்கிரமம்! சூத்திரன் நாடாளுவதா? சிவாஜி வீரன்தான்—ஒப்புக் கொள்வோம்—ஆனால் அவன் வேந்தனாவதா? வேதக் கருத்துக்கள் வீணாவதா?"

"சிவாஜி மன்னனானால் நாடு காடாகும்; மக்கள் மாண்டொழிவர்; மராட்டியமே மயானமாகமாறி விடும்."

"விழலுக்கு வெள்ளம் பாய்ச்சுகிறான்; வெட்டி வேலை செய்கிறான்; அவன் ஒழிந்துபோவது உறுதி"

* * * *

இதுபோன்ற உரையாடல்கள் பற்பல இடங்களில்—பல ரகங்களில் பேசப்படுகின்றன. ஆம், சிவாஜி மன்னனாவதை மக்கள் மன்றமே எதிர்த்தது. சாஸ்திரம்தாங்கிகளின் மயக்க மொழிகளில் மக்கள் மனத்தைப் பறிகொடுத்து விடுகின்றனர்.

* * * *

"மக்கள் மனங்களோ எரிமலைகளாயிருக்கின்றன. இந்த நிலையில் என்ன செய்வது? எனக்கோ மட்டற்ற ஆசை மன்னனாகவேண்டுமென்று"

"பிரபோ! பார்ப்பன சாபம் பலிக்காமல் போகாது. அதற்காகவே அஞ்சுகிறேன்"

"உம்......இப்போது என்ன செய்வது? உமக்கு ஏதாவது யோசனை தோன்றுகிறதா?"—சிவாஜி கேட்கிறான் பரிதாபமாக! முகலாய வல்லரசின் வயிற்றிலே நெருப்பைக் கொட்டியவன்-வெற்றியைத் தவிர வேறொன்றுமறியாத வீரன்—வேத மோகிகளின் கூக்குரலால் விலவிலத்து விடுகிறான். விசித்திரமான சம்பவம்தான்; ஆனாலும் வரலாறு இருக்கிறதே!

"வீரரே! ஒரு யோசனை தோன்றுகிறது! காசி மாநகரில் ஒரு கனபாடி இருக்கிறார்; அவரது நாமோதயம் கங்குபட்டர். இந்த வேதங்களின் எல்லையைக் கண்டவர்; சகல கலா சம்பன்னர்; கல்விக்கடல்; கடவுளின் அவதாரமாகக் கருதப்படுகிறவராம். அவரை அழைத்து ஆலோசனை செய்வோம். அதுதான் சாலச் சிறந்த வழி"

"சரி, அப்படியே செய்யும். ஆனால் அவர் வருவாரா?"

"பணத்தை அள்ளி வீசுவோம்; அவரது மனம் மாறிவிடும்"

மகாராஷ்ட்ர தலைநகரிலிருந்து, படைகளும், அலங்கரிக்கப்பட்ட பல்லக்கும், கடுகிச் செல்கின்றன, காசிமாநகரை நோக்கி!

கடலலை போன்ற படைகளைக் கண்ட கங்கு பட்டர் திகைத்து, பிறகு தெளிவு பெறுகிறார்.

"படைத்தலைவா! என்ன வேண்டும் உங்களுக்கு? ஏதாவது விசேஷமுண்டா?"

"வேதஞானியே! மகாராஷ்ட்ரர் பூபதி சிவாஜி உங்களை உடனே அழைத்துவரச் சொன்னார்."

"யார்? சிவாஜியா? என்னையா? எதற்கு?"—கங்குபட்டர் கேள்விக்கணைகளை எய்கிறார்.

"ஆமாம், சிவாஜிக்கு சிம்மாதனம் ஏறவேண்டுமென்று விருப்பம்; ஆனால் அங்குள்ள மக்கள் அதை எதிர்க்கின்றனர்."

"ஏன்?"

"தங்களுக்குத் தெரியாததா? தாசர் பரம்பரை தரணி ஆளலாமா?"

"ஆமாம்! உண்மை! சிவாஜி சூத்திரன்! ஆட்சிப் பீடமேற அவனுக்கு உரிமை இல்லை! சாஸ்திரப்படி, பிராமணன் அல்லது க்ஷத்திரியன்தான் மகுடாபிஷேகம் செய்துகொள்ளலாம்!"

"ஆனால், சூத்திரரை க்ஷத்திரியராக்க தங்களால் முடியுமல்லவா? அதற்காகவே உங்களை அழைத்துப்போக வந்துள்ளேன்"

"பூனையை யானை யாக்குவதா? பொல்லாங்கு விளையுமே!"

"சகல கலா பண்டிதரான தங்களுக்கு இது ஒரு சாதாரண விஷயம்தானே! என் தாய் பூமியாகிய

மராட்டியத்தின் எதிர்கால வாழ்வே தங்கள் கையில்தான் இருக்கிறது; கருணை காட்டவேண்டும்; உங்கள் காலைப் பிடிக்கிறேன்''

''சரி! நாளை போவோம்; பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்.''

* * *

மராட்டிய நகரம் ராய்கோட் ரம்மியமாகக் காட்சியளிக்கிறது. எங்கு நோக்கினும் புன்னகையும், பூரிப்பும் பொங்கி வழிகின்றன. மகாராஷ்ட்ரமே, மகிழ்ச்சிச் சித்திரமாக மாறியிருக்கிறது. ஆம், அவ்வளவு களிப்பு! காரணம்? காசி மாநகர் கங்குபட்டர் ராய்கோட்டிற்கு எழுந்தருளியிருக்கிறார்.

பார்ப்பனப் பிரமுகர் கங்குபட்டர் சிவாஜியின் மாளிகைக்குச் செல்கிறார்; ''வேதாந்த விளக்கே! வரவேண்டும் வரவேண்டும்'' என வரவேற்கிறார் சிவாஜி! கங்குபட்டர் அவனை ஆசிர்வதிக்கிறார். சிவாஜியின் தலை சாய்கிறது. கோழைக்கு வீரன் கும்பிடு போடுகிறான்! புல்லுக்கு வாள் வணக்கம் செலுத்துகிறது! வீரன் சிவாஜி வைதீகத்தின் பிரதிநிதியான கங்குபட்டரின் காலடியில் வீழ்கிறான்.

கங்குபட்டர் கனைத்துக்கொண்டு பேசுகிறார்.

''மராட்டிய வீரா! உனது ஆவலை நாம் அறிவோம். அதற்கு வேண்டியவைகள்......''

''அத்தனையும் சித்தமாயுள்ளன. இந்த ஆசனத்தில் அமருங்கள்.''

கங்குபட்டர் அமர்கிறார். மயில் விசிறியினால் சிவாஜி அவருக்கு வீசுகிறான்.

* * *

ஔரங்கசீப்பின் அடிவயிற்றைக் கலக்கிய ஆண்மையாளன்—மராட்டிய சாம்ராஜ்யத்தின் பெருமையின் பிரதிபலிப்பு—வீரத்தின் கீதம்—வெற்றியின் சின்னம்—சிவாஜி. அவனது வியர்வை தந்த விளைவுதான், வீரம் தந்த பரிசுதான் மராட்டிய மண்டலம்! ஆனால் அதற்கு அரசனாவதற்கோ அவன் ஆரியப்பட்டரின் அடி பணிந்தாகவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது! அந்த அளவிற்குப் பார்ப்பனீயம் அவனைப் பம்பரமாகச் சுழற்றுகிறது, பரிதாபம்!

சிவாஜி மன்னனாக அங்கீகரிக்கப்படுகிறான் கங்குபட்டரால்! கங்குபட்டரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அவன் காலடியில் தஞ்சமடைந்த பொருட்கள் கொஞ்சமல்ல! பார்ப்பன பரம்பரையின்மேல் செல்வமழை சொரிகிறது! வெள்ளம் போல் விலைமதிப்பற்ற பொருள்களை வாரியிறைக்கிறான், சிவாஜி. அக்ரகாரமே ஆனந்தக் குளமாகி விடுகிறது. அவ்வளவு குதூகலம்!—கும்மாளம்!—கொக்கரிப்பு!

சிவாஜி பொறியில் அடைபட்ட புலியாகிறான். பொன் விலங்கை அவனது கரங்களில் பூட்டுகிறது ஆரியம். வீரன் சிவாஜி வேதியக் கூட்டத்தவரின் தாள்பணியும் நிலை ஏற்பட்டுவிடுகிறது. கல, கல, வென நகைக்கிறார் கங்குபட்டர். அந்த அனற் சிரிப்பிற்கு என்ன அர்த்தமோ, யார் கண்டார்கள்? மகாராஷ்ட்ர அழிவுப் படலத்தின் முதல் அத்தியாயம் ஆரம்பமானது சிவாஜியின் காலத்தில்தான்.

1680-ம் ஆண்டு! மராட்டியமணி—வெற்றிச் செல்வன்—சிவாஜியை மரணம் விழுங்கி விடுகிறது. சிவாஜியின் மைந்தனான சாம்பாஜி சத்ரபதியாகிறான்.

---

## ஏடு 5

''கலேஷா!

''சாம்ராத்''

''இன்று யாரைக் கொண்டு வரப்போகிறாய்?

''ஏன்? மல்லிகாவை''

''சே! வெறும் மண்பதுமை; மரக்கட்டை போல் கிடப்பாள்.''

''அம்பிகாதேவி!''

''அழகிதான்; ஆனால் அவளிடமிருந்த வாலிப ஊற்றுதான் வரண்டு விட்டதே!''

''ஊர்மிலா. உங்களுக்கு ஏற்றவள் தானே!''

''உணர்ச்சியற்ற உருவம்! ஊமை! பேசவே மாட்டாள்.''

''காமினி!''

''கற்கண்டாகத்தானிருந்தாள்; ஆனால் கசப்பாய் விட்டாளே!''—சாம்பாஜி சலித்துக் கொள்கிறான். கவலையோடு சிந்திக்கிறான். திடீரென்று அவனது முகத்தில் மகிழ்ச்சிக் கோடுகள் பரவுகின்றன. பேசுகிறான்.

''தேவிகாவைத் தெரியுமா, தங்களுக்கு?''

''பெயர் புதிதாய் இருக்கிறதே! யார் அது?

''மந்திரி பீஷ்வாவின் மகள். நேற்று சபா மண்டபத்திற்கு வந்திருந்தாளே! அவள் தான்!''

''ஆமாம், வண்ண ஓவியம் போன்றவள். அவள் கண்ணாடிக் கன்னங்கள் ஒன்றே போதுமே! அன்று அவள் என்னையே பார்த்தாள்; அந்தப் பார்வையில்தான் என்ன தித்திப்பு! இன்று இரவு......''

''இங்கேயே கொண்டு வந்து விடுகிறேன்... ஆனால்......''

"ஆனால் என்ன?"-ஆத்திரத்தோடு கேட்கிறான் சாம்பாஜி.

"அவளது தந்தை பிஷ்வா நெருப்பைப் போன்றவன்; அருகில் நெருங்கவே முடியாதாம்"

"கோழைக் கீதம் பாடுகிறீரே! சாம்பாஜியின் சந்தோஷப்பாதையில் குறுக்குச் சுவர் எழுப்புவதும் சாவோடு விளையாடுவதும் ஒன்றுதான்! வேண்டிய வீரர்களை அழைத்துச் செல்லும். ஒன்று சொல்ல மறந்து விட்டேனே! தேவிகா மலராத மொக்கு; மெதுவாக மஞ்சத்திற்குக் கொண்டு வாருங்கள். கசக்கி விடாதீர்கள்!"

பிறகென்ன? நிலவு வருகிறது. மேகக் கூட்டங்கள் கலைகின்றன. சாம்பாஜியின் உல்லாச அறை. அங்கே மதுக்கிண்ணங்கள் ஒன்றோடொன்று மோதும் ஓசை! ஆடைகள் நெகிழும் சலசலப்பு! முத்தங்களின் மோகன ஒலி! இவைகள் தாம்! பிறகு அமைதி ஆம், மயான அமைதி!

* * *

சிவாஜியின் மரணத்திற்குப்·பிறகு சாம்பாஜி சிம்மாசனமேறுகிறான். கவிகலேஷா என்ற வேதியன் வேந்தனுக்கு மந்திரியாகிறான்.

"சாம்பாஜியோ சிறுவன்...இளந்தளிர்...வாழ்வின் ருசியை எதிர்பார்க்கும் வாலிபன்; அவனை ஏமாற்றுவது சுலபந்தான்.....எப்படி ஏமாற்றுவது?...ஆம், அரசனை அலங்காரப் பொம்மையாக்கி நானே ஆட்சிபுரிய வேண்டும். அப்படிமட்டும் ஆய்விட்டால் பிராமணீயத்திற்கு எவ்வளவு பெருமை! நான், சொல்வதே சட்டம்; இட்டதே கட்டளையாகும் இந் நாட்டில்! சாம்பாஜியின் நினைவு சாம்ராஜியத்தைத் தொடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இளமை விருந்தின் வேட்கையை அவன் உடலில் ஏற்றிவிட்டால்!...சிருங்காரச் சுனைகளான பெண்களின் சுவையை அவன் உணரும்படி செய்துவிட்டால்......பெண்களுக்கா பஞ்சம்! மகாராஷ்ட்ரத்திலேதான் ஏராளமான பெண்கள் மலர்ந்து மணம் வீசுகிறார்களே! பசுங்கிளிகளைப் போலப் பாடித் திரிகிறார்களே. பார்ப்போம். ஒன்றில் வெற்றி அல்லது வீழ்ச்சி....அவ்வளவுதான்."—இந்தச் சூழ்ச்சிச் சொற்களுக்கு சொந்தக்காரன் கவிகலேஷா...! கனபாடி கலேஷா!

கலேஷா செய்த சதி அரங்கத்திலே சாம்பாஜி சிக்குகிறான். இளைஞனல்லவா? மங்கையர்கள் வந்தால் வேண்டாமென்று மறுத்தா விடுவான்? புது மலரை விரும்பாத பொன்வண்டுகளும் உண்டா என்ன? சாம்பாஜி 'மறு அவதாரம்' எடுக்கிறான். சக்ரவர்த்திசாம்பாஜி சரசப்பிரியனாகிறான்; சல்லாபத்திலே நாட்களை நகர்த்துகிறான். கலேஷாவின் கண்களோ கட்டழகிகளை வேட்டையாடுகின்றன. வனிதையர்கள், வரிசை வரிசையாக சாம்பாஜியின் காமக்களத்திலேகாவுகொடுக்கப்படுகின்றனர்! சாம்பாஜியோ சரசக்குளமாகி விடுகிறான்; மகராஷ்டரமோ அவனது மனதிலிருந்து விடைபெற்றுக் கொள்கிறது. போர்வீரர்களுக்கிடையே பூசல்கள் முளைக்கின்றன; மக்களோ கசப்பைக் கட்டிக்கொண்டு கதறுகின்றனர்!

பசித்த புலி பதுங்கித் தாக்குவதைப் போல ஔரங்கசீப் மகாராஷ்ட்ரத்தின்மேல் பாய்கிறான்.

* * * *

ஔரங்கசீப்பின் ஆலோசனை அறை. அவரது வலது கைவிரல்கள் ஏதோ திட்டமிட்டு அசைந்து கொண்டிருக்கின்றன.

"ஷேக்நிஜாம்! நீ சேனையுடன் போ. சுலபமாக வெற்றி பெறலாம். சாம்பாஜியோ பெண்களைப் பஞ்சணையாக்கிப் புரண்டுகொண்டிருக்கிறான். போருக்கு வேண்டியதைத் தயார் செய். தாமதம் வேண்டாம். உடனே போ!"

ஷேக்நிஜாமின் விழிகளிலே வீரம் கூத்தாடுகிறது. "முகலாய திலகமே! சாம்பாஜிக்கு சவக்குழி வெட்டிவிட்டதாக நினைத்துக்கொள்ளுங்கள். வெற்றி நம் வீரத்தில் இருக்கிறது. சாம்பாஜி, கலேஷாவை நம்பியிருக்கிறான்; கலேஷா கடவுளை நம்பியிருக்கிறான். புயலை எதிர்க்க அந்தப் புழுக்களால் முடியுமா? வெற்றிகீதத்தோடு திரும்பிவருகிறேன். விசாரம் வேண்டாம் உங்களுக்கு!"

* * *

சிருங்கார ரசத்தைச் சுவைத்துக்கொண்டிருந்த சாம்பாஜி விழித்துக்கொள்கிறான்; வெளியேபார்க்கிறான்; மூகலாய சேனையும், மராட்டியப் படைகளும் மோதிக்கொண்டிருக்கின்றன. சாம்பாஜியின் செவிகளிலே "மரண கீதம்" ஒலிக்கிறது. 'ஐயோ!' என அலறுகிறான். தனக்கு வாலிப விருந்தளித்த மங்கைகளைப் பார்க்கிறான்; அவர்கள் மான்களைப்போல மருண்டோடுகின்றனர்; மதுக் கிண்ணங்கள் மராட்டிய பூபதியைப் பார்த்துச் சிரிக்கின்றன! எங்கும் கல, கலவென்ற நகைப்பொலி! காதுகளைப் பொத்திக்கொள்கிறான்! அவனுக்கோ பருவ விருந்தைப் பருகிய போதை இன்னும் தெளியவில்லை; தடுமாறுகிறான்; தத்தளிக்கிறான்; எங்கும் சூறாவளி! வானம் குமுறுகிறது! ஆம், அந்த மாளிகையே அவனுக்குச் சுழல்வதைப் போலத் தோன்றுகிறது! விஸ்வாசமுள்ள ஒரு வீரன் வேகமாக ஓடி வருகிறான்! அவனது தேகத்திலே சிவப்பு ரத்தினங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன! ஆம்! போர்க்களம் அவனுக்கு அளித்த பரிசு!

"பிரபோ! நிலைமை நெருக்கடியாய் இருக்கிறது. வெளியே குதிரை காத்திருக்கிறது, உயிர்மேல் ஆசையிருந்தால் ஓடுங்கள்! ஓடுங்கள்!"

குதிரை சாம்பாஜியைத்தாங்கிக்கொண்டு விரைகிறது. அதன் குளம்புகள் சாலையிலுள்ள புழுதியை எழுப்புகின்றன; கிளம்பிய புழுதி, புரவியையும், சாம்பாஜியையும், மூடி மறைக்கிறது.

கரை புரண்டோடும் காட்டாற்றிற்குக் களிமண் ணால் அணைபோட முடியுமா? சாம்பாஜி அகப்பட் டுக்கொள்கிறான்; எதிரிகள் அவனைப் படாதபாடு படுத்துகின்றனர், சாம்பாஜி வெட்டி வீழ்த்தப் படுகிறான்; கலேஷாவிற்கும் அதேகதி! வீரமராட் டியம் வீழ்ந்தது! யாரால்? ஒரு வேதியனின் வகைகெட்ட விளையாட்டால்! கனபாடி கலேஷா வின் துரோக நாடகத்தால்! இதுவரலாறு! வேடிக் கைக் கதை அல்ல! உண்மை நிகழ்ச்சி! உருவாக் கப்பட்ட கற்பனை அல்ல!

---

## ஏடு 6

ஆங்கிலேயரை அலறச்செய்த ஆண்மையா ளன்—சாவின் கோர நாக்கு தன்னை ருசிக்கத் துடித்தபோதும் சரணடையாத போர்ப்பிரியன்—வீரவானிலே ஒளிவிடும் தனித்தாரகை-வீரனாகவே வாழ்ந்து, வீரனாகவே வீழ்ந்த மாணிக்கம்—வீர வரலாற்றிலே புது அத்தியாயம் சேர்த்த பெருந் தகை! யார்? திப்பு என்பது பள்ளிப் பசிலைக ளுக்குக்கூடத் தெரியும்! ஆம் அவன் அஞ்சாத நெஞ்சு படைத்த அடலேறுதான்! ஆனால் அந்த அடலேறுதான் சாகடிக்கப்பட்டான்! எப்படி? வீரத்தோடு மோதி வீழ்ந்தானா? ஆண் மையால் அழிக்கப்பட்டானா? இல்லை! இல்லை!! நச்ச எண்ணம் கொண்டோனால் நசுக்கப்பட் டான்! நசுக்கிய நச்சுப் பொறியை சிருஷ்டித்தது யார் தெரியுமா? சித்திரத்தைப் பாருங்கள் தெரியும்.

*   *   *

"மீர்சாதிக்! மீண்டும் போர்ப்புயல் வீச ஆரம் பித்துவிடும்போ லிருக்கிறது!"

"சண்டை வருமென்று சந்தோஷமடைகிறீரே! சென்ற போரில் ஈட்டிகளிலும், வாட்களிலும் படிந்த இரத்தக் கறை இன்னும் காயவில்லை, அதற்குள் மீண்டும் களம் சிருஷ்டிக்கிறீர்களா?"

"ஆமாம், மேல்நாட்டுப் பிரயாணத்தை முடித்து விட்டு திப்பு திரும்பிவந்தாரல்லவா?"

"ஆமாம்."

"வந்தவுடன் படையைப் பலப்படுத்திப் பயிற்சி யளித்தார்; அந்த செய்கை வெள்ளையரின் உள் ளத்திலே பயத்தை உலவ விட்டிருக்கிறது. முடிவு? முக்கூட்டு ஒப்பந்தம்; மைசூர் அரசு அவனுக்குள் போய்விடும்."

"முக்கூட்டு ஒப்பந்தமா? மைசூர் அரசின் அழிவில் உமக்கேன் இவ்வளவு மகிழ்ச்சி? பூர்ணய்யாவே! புதிர் போடுகிறீரே! விளக்கமா கச் சொல்லும்."

"கவனமாகக் கேள். ஆங்கிலேயர், நைஜா மர், மராட்டியர், மூவரும் மைசூரின்மேல் பாய திட்டமிட்டிருக்கின்றனர். தெரிந்ததா? திப்பு தொலைந்ததுபோல்தான்!"

"திப்பு தொலைவானென்று சந்தோஷ சங்க நாதம் முழக்குகிறீரே! திப்பு, அரசர்! நீர் அமைச் சர்! அவரது முடிவுதானே உமக்கும் கிடைக்கும்! இந் நிலையில் நீர் மகிழ்ச்சி அடைகிறீரே—அது ஏன்?

"ஏன்—கேள், சொல்கிறேன். ஆங்கிலேய ஜென ரல் ஹாரிஸைத் தெரியுமல்லவா? அவனை நேற்று சந்தித்தேன்; நீண்ட நேரம் பேசினோம். முடிவு...? அடுத்துக் கெடுப்பது. திப்புவைத் தீர்த்துக் கட்ட நானும் துணை நிற்பேன்."

"சதிபுரிவதா? சன்மார்க்கமே உருவாகிய நீங்களே இப்படி......" மீர்சாதிக் வார்த்தையை முடிக்கவில்லை. பூர்ணய்யா இடிமுழக்கம் புரி கிறார்.

"முட்டாளே! சர்வ லோக ரட்சகனை திரு மாலே சதிபுரிந்திருக்கிறார். அவரது சந்ததிதானே நான்? தவறென்ன அதிலே? நீயும் உடன்படு. இருவரும் சேர்ந்தே உழைப்போம்."

"பூர்ணய்யாவே! என் நெஞ்சில் நஞ்சைத் தெளிக்காதீர்! என்னை நன்றிகெட்டவனாக்காதீர்!"

"அரச போகம் உன்னை அழைக்கிறது. அலட் சியமாக எண்ணாதே!"

மீர்சாதிக்கின் மன அரங்கிலே ஒரு நிகழ்ச்சி மின்னலிடுகிறது. பணமழை பொழிகிறது!...... ...பகட்டான ஆடைகள்.......அலங்கார ஆசனங் கள்!.......ஆபரணங்கள்...அவனது மண் குடிசை மறைந்து மாளிகையாகிறது!...இவைகள் வரிசை, வரிசையாக அவனது இதய அரங்கிலே வந்து போகின்றன! அவனது உள்ளத்திலே ஒரு போர்! அநீதிக்கும், நியாயத்திற்கும் போர்! ஆசை உணர்ச்சிக்கும், அரச நன்றிக்கும் போர்!....... ...ஆசை வெறி வெற்றி பெறுகிறது! நியாய உணர்ச்சி மங்கி மறைகிறது!

"பூர்ணய்யாவே நீர் பெறுவதில் பாதி எனக்கு! உமது வெற்றி எனது வெற்றியல்லவா?" மீர் சாதிக் கூறுகிறான், வெட்கமில்லாமல்!

"ஆண்டவனின் சித்தம் அப்படியிருந்தால், ஆட் சேபனை யென்ன, அதற்கு? திப்புவின் சாவில் தான் நமது உல்லாச வாழ்வு ஊசலாடுகிறது. உற் சாகமாய் வேலைசெய். சென்றுவா."

*   *   *   *

ஆங்கிலேயரின் போர்ப் பாசறை! ஜெனரல் ஹாரிஸ்துரை அமர்ந்திருக்கிறார். எதிரே பூர்ண ணய்யா நிற்கிறார்.

"பூர்ணய்யா! நான் சொல்வது புரிந்ததா? திப்பு வின் கலத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பவ ரைப் போல நடிக்கவேண்டும். வெற்றி கிடைத் தால் ஒப்பந்தப்படி உமக்குச் சேரவேண்டிய தொகையைத் தருவோம். எங்கள்மீது நம்பிக்கை யுண்டா, உமக்கு?"

"நன்றாய்ச் சொன்னீர்கள்! உங்களது உடலும் வெள்ளை, உள்ளமும் வெள்ளை; கள்ளமிருக்குமா அதில்?"

"திப்புவின் படைபலத்தைக் குறைத்துவிடும். போர் வீரர்கள் குறைவாக இருந்தால் நாம் எளிதாக உள்ளே போய்விடலாம்."

"படைபலத்தைப் பற்றி என்னிடம் அபிப்பிராயம் கேட்டான், அந்த மடையன்! நான் புகழ்ச்சி உரைகளைச் சொரிந்தேன்; ஏமாந்து விட்டான் பயல்."

"நல்ல வேலைசெய்தீர்! உமது நன்றிக்கு இங்கிலாந்தே கடமைப் பட்டுள்ளது. கிருஸ்துவின் அருளால் உமது கீர்த்தி பெருகுமாக!"—ஹாரிஸ்துரையின் அகத்திலுள்ள களிப்பு முகத்திலே தெரிகிறது. பூர்ணய்யாவின் உள்ளமோ பூரிப்பால் பொங்குகிறது.

"கோட்டைக்குள் செல்லும் ரகசிய வழிகளைத் திறந்து வைக்கிறேன்; போர்வீரர்களின் ஒற்றுமையைச் சிதைத்து விடுகிறேன்; பிறகு வெற்றி நம் காலைப்பிடித்துக் கொண்டு கதறாதா?"

— "திப்புவிற்கு பிரெஞ்சுக்காரர்களின் உதவி கிடைக்காமற் செய்ய முடியுமா, உம்மால்?"

"அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் அஞ்சவேண்டாம். ஆனால்... பீரங்கிப்படை விஷயம்தான் பெரிய பிரச்னையாயிருக்கிறது."

"கவலைப்படாதீர்! நான் கூறிய திட்டப்படி செய்தால் போதும். போய்வாரும். வெற்றி வீரர்களாகச் சந்திப்போம்.

* * *

பூர்ணய்யா ஓர் ஆரியசிசு!...மைசூர் மந்திரி! ......நச்சரவுகள் நெளியும் ஒரு சூதுக் குளம்! நடமாடும் விஷக்கிண்ணம்! நன்றிமறந்த துரோகி! திப்புவின் பரம வைரிகளுடன் ஒத்துழைத்துத் திப்புவின் ஆட்சியையே அழிக்க சூதுபுரியும் ஒரு சோற்றுப் பிண்டம்! திப்பு இவனை நம்புகிறார்! தணல்மொழியும் பாலைவனத்தைத் தாகம்தீர்க்கும் தடாகமென்று நம்புகிறார்! கொதிக்கும் கனல் குகையைக் குளிர் அருவியென எண்ணுகிறார்! பாபம்! பரிதாபம்!

* * * *

திப்பு மந்திராலோசனை செய்கிறார்.

"பிரெஞ்சுகாரர்கள் உதவி புரிவதாகக் கூறுகிறார்கள். கோட்டையை அவர்கள் வசம் ஒப்புவிக்கவேண்டுமாம்; இதனால் ஏதாவது நன்மை விளையுமா? உமது அபிப்பிராய மென்ன?"— திப்பு கேட்கிறார் பூர்ணய்யாவிடம்! புலி, பூனையிடம் யோசனை கேட்பது போல!

பூர்ணய்யா சிரிக்கிறார்; அவர் உதட்டிலே தென்றல் தவழுகிறது; உள்ளத்திலோ புயல் குமுறுகிறது. அவர் பேசத் தொடங்குகிறார்.

"வேங்கைக்குப் பயந்து சிங்கத்திடம் கோட்டையை ஒப்புவிப்பதா? ஆங்கிலேயரின் தோலும் வெள்ளை; பிரெஞ்சியர்களின் தோலும் வெள்ளை, இருவரும் மிலேச்சர்கள்! அபாயத்தின் தூதுவர்கள்! அவர்களை நம்புவது அழிவை நாமே அழைப்பது போலாகும்! வேண்டாம், இந்த விபரீத ஏற்பாடு;! வீரம் நமது வாள் நுனியில் விளையாடுகிறது! வெற்றி நமது திறமைதரும் விளைவு! போர் புரிவோம்! வெற்றி அல்லது வீரசுவர்க்கம் பெறுவோம்!" கழுதை கற்பூர வாசனையைப் பற்றிப் பேசுவதைப் போல, வலா ஒடிந்த கோழை வீரத்தைப் பற்றி விளக்க உரையாற்றுவதைப் போல, புல்லேந்தி பூர்ணையா, போர்ப்பிரசங்கம் புரிகிறார்!

* * *

மறுநாள் துப்பாக்கிகள் வெடிக்க ஆரம்பிக்கின்றன; போர்க்களமெங்கும் புகைமண்டலங்கள் பரவுகின்றன; வெற்றிக் களிப்பு இருவர் பக்கமும் கண்ணாமூச்சி விளையாடுகிறது! ஆங்கிலேயரின் பீரங்கிகள் 'டுமீல்' 'டுமீல்' என ஆர்ப்பரிக்கின்றன! அதிலிருந்து வெளிவரும் கரும்புகைக் கூட்டங்கள் போர்க்களத்தையே இருள் கோட்டமாக்குகின்றன. திப்புவின் பீரங்கிகளும் வெடிக்கின்றன! அவைகளிலிருந்து வெளிப்படுவது அக்னியல்ல; வெறும் கல்லும் மணலும் தான்! மருந்தை மாற்றிவிட்டு மண்ணையும், கல்லையும் நிரப்பிவிட்டான் பூர்ண்ணயன்!

ஆம், பால் வார்த்து வளர்க்கப்பட்ட பாம்புக் குட்டிகள் படமெடுத்தாடுகின்றன!

வெற்றி யார்பக்கமென்று விளங்காத அந் நேரத்தில்—வீரர்கள் போர்புரிந்துகொண்டிருக்கும் நேரத்தில், "சம்பளம் தரப்படும், வீரர்களே வாருங்கள்!" என அறிவிக்கிறான் பூர்ணய்யன் திப்பு சொல்லவில்லை இந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று! களத்தில் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் திப்புவின் சேனைகள் போர்க் களத்தைவிட்டுப் போகின்றன, சம்பளம் வாங்குவதற்கு!

"கோட்டையைக் கைப்பற்றுங்கள்; அபாயமில்லை. உடனே வாருங்கள்!" என்பதற்கு அடையாளமாக வெண் கொடியைக் காட்டுகிறான் பூர்ணய்யன். வெள்ளையர், ஆளும் கோட்டைக்குள் நுழைகின்றனர்!

நண்பர்கள் நஞ்சாய் மாறிவிட்ட அந்த நெருக்கடியான நேரத்தில், திப்பு, களம்புக அஞ்சாக் கர் வீரன், என்ன எண்ணினானோ? அவனது வீ உள்ளம் எதை நினைத்து விம்மியதோ? யாருக்குத் தெரியும்? வெளியே சூழ்ந்திருக்கும் வெள்ளையரைத் தாக்குவதற்காக, தன் இரு குழல் துப்பாக்கியுடன் இரகசிய வழியாக வெளியே சென்றுகொண்டிருக்கிறான் திப்பு. இந்த சமயத்தில் வெள்ளையர்கள் கோட்டைக்குள் நுழைந்துவிட்டனர் என்பதை அறிந்த திப்பு வந்தவழியே திரும்பச் செல்கிறான். மீர்நதீம் என்ற துரோகி இரகசிய வழியை அடைத்துவிடுகிறான்! எங்கும்

சூது! சூழ்ச்சி! அடுத்துக் கெடுக்கும் தன்மை! இவை தாண்டவமாடுகின்றன! எதிரிகள், திப்பு இருந்த இடத்தைத் தெரிந்து, அவரைச் சூழ்ந்து தாக்குகின்றனர், சிங்கத்தைச் செந்நாய் கூட்டம் சூழ்ந்து தாக்குவதைப் போல! குண்டுகள் பறக்கின்றன! திப்புவின் குதிரை கீழே வீழ்ந்துவிடுகிறது. கடைசியாக ஒரு குண்டு! ஆம், இறுதிக் குண்டு! அது அவரது இதயத்தைத் துளைக்கிறது! வீரன் வீழ்கிறான்! எதிரிகளின் எக்காள ஒலி காற்றிலே கலக்கிறது!

"வெள்ளை ஏகாதிபத்தியம் என்ற சிங்கத்தை என் வீட்டு வாயிலிலே கட்டுவேன்"—என சூளுரைத்த சுத்த வீரன் வீழ்ந்தான்! ஒரு வீர விளக்கு அணைந்தது! அணைந்ததா? இல்லை! இல்லவே இல்லை!! அணைக்கப்பட்டது, அக்ரமக்காரர்களின் சூழ்ச்சியால்!

---

## ஏடு 7

"திருநாவுக்கரசரே! சைவம் செத்து விடும் போலிருக்கிறதே! நமது நெடுநாளைய கனவில் நெருப்பைக் கொட்டுகிறார்களே, இந்தச் சண்டாள சமணர்கள்!"—சம்பந்தர் சங்கடக் கடலில் மூழ்கித் தத்தளிக்கிறார்.

"சுவாமி! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. பாண்டியன் சமணமதப் பற்றுடையவன்: அவனது பட்டமகிஷி சைவமதத்தவள்; மந்திரி குலச்சிறையாரும் நம்மவரே! அவர்களைக் கலந்தாலோசித்தால் காரியம் ஒருவேளை கை கூடும்."

"அப்பரே! அருமையான திட்டம்: மட்டமல்ல உமது மூளை! மெச்சினேன் உம்மை! மதுரைக்கு வந்து விட்டோம். மங்கையர்க்கரசியையும் சந்தித்து விட்டால்......நம் வாழ்வே மகிழ்ச்சி மழையில் மூழ்கிவிடும்..."

சம்பந்தர் சொல்லி முடிக்கவில்லை. சைவ மத சிஷ்யன் ஒருவன் ஓடி வருகிறான். அவன் முகத்திலே பரபரப்பும், மகிழ்ச்சியும், மாறி, மாறித் தோன்றுகின்றன. சிஷ்யன் சொல்கிறான்:

"சுவாமி! மகாராணியும், மந்திரியாரும், தங்களைக் காணக் காத்திருக்கின்றனர்."

"தேனருவி நம்மைத் தேடி வரும்போது அணைபோட்டுத் தேக்கி நிறுத்திவிட்டாயே! அவர்களை அழைத்துவா; போ. ஓடு!"

சிஷ்யன் போகிறான். அப்பரின் உள்ளம் ஆனந்தத்தால் விம்முகிறது. வெற்றிப் புன்னகையுடன் அப்பரைப் பார்க்கிறார் சம்பந்தர். மங்கையர்க்கரசியும், குலச்சிறையாரும் வருகின்றனர். சம்பந்தர் வரவேற்கிறார்.

"சைவத்தின் திருச்செல்வியே! வரவேண்டும். சிவநெறிச்சுடரே! வரவேண்டும். உமது வரவு நல்வரவாகுக! அமருங்கள்."

மங்கையர்க்கரசி முகத்திலே மகிழ்ச்சி ஜொலிக்க அமர்கிறாள். குலச்சிறையார் நிற்கிறார்.

"அரசியாரே! உங்களது அரும்பணிகளால் தான் செத்துக் கொண்டிருக்கும் சைவம் செழித்தோங்க வேண்டும். செய்வீரா?"

"சுவாமி! கட்டளையிடுங்கள். காத்திருக்கிறேன். ஆனால் ஒரு வேண்டுகோள்: சமணர்களை வாதில் வெல்லலாமென்பது வீணாசை: வெறும் மனக்கோட்டை! அதைத்தவிர வேறு வழிகள்............"

"இருக்கின்றன. வெற்றி பெறமுடியும்... கடவுளைவிட கட்டழகிகள் அதிக சக்தியுடையவர்கள்...........அரசருக்கும் தங்களுக்கும் விவாகமாகி நாட்கள்கூட அதிகமாகவில்லை."

அரசியின் வதனத்திலே நாணம் சிவப்புவர்ணத்தை தீட்டுகிறது. சம்பந்தரின் குரலும் கரகரக்கிறது. சமாளித்துக் கொள்கிறார்.

"கண்களால் கணைகளை எய்யுங்கள். காரியம் கை கூடும்"—இது சம்பந்தர்.

"என்னையே அவர் தன் பக்கம் இழுக்கப் பார்க்கிறார்"—இள நங்கையின் குரலிலே ஏமாற்றம் தொனிக்கிறது.

"புன்னகை வலையை விரித்துப் போடுங்கள்... போதையில் சுருண்டு விடுவார்"


"சொன்னால் நம்பமாட்டீர்கள். என் முயற்சிகள் அனைத்தும் தோல்வியைத்தான் முத்தமிடுகின்றன. சூழ்ச்சியைத்தவிர வேறு வழியில்லை."

சம்பந்தர், கண்களை நாலாபக்கமும் சுழலவிட்டுத் தாழ்ந்த குரலில் பேசுகிறார். "அரசியே! ஒரு யுக்தி இருக்கிறது. நான் தரும் மருந்தை குலச்சிறையார் குறிப்பிடும் நாளில் விருந்து மன்னனுக்குக் கொடுத்து வாருங்கள், வேந்தனுக்கு வியாதி தோன்றும். வைத்தியம்புரிய சமணர்களை வரவழைப்பார். அவர்கள் மருத்துவம் புரிந்து கொண்டிருக்கும் போதே, தாங்கள், நான் தரும் மருந்தை


# மறைந்த நம் மாவீரர்கள்



சுயமரியாதைச் சூறாவளி
**செ. தெ. நாயகம்**



இந்திப் போரில் உயிர்நீத்த மொழிப்போர் வீரன்
**நடராசன்**



கொங்குநாட்டுத் தளபதி
**அர்ச்சுனன்**

வேந்தனுக்கு மேலும் மேலும் கொடுத்து வாருங்கள். வியாதி நீங்காது! மன்னனிடம் என்னைப் பற்றிப் புகழ்ந்து கூறுங்கள். நான் வந்து, மாற்று மருந்தை விபூதியில் கலந்து, மன்னனுக்குக் கொடுத்து, வியாதிபோக்கு கிறேன். இந்தத் திட்டம் வெற்றி பெற்றால் கொற்றவன் என் கைக்குள்! சமணர்களுக்குச் சாவு!........சைவத்திற்குச் சாகாவரம்...... சம்மதந்தானே!"

"சுவாமி, இந்த மருந்துகளின் போரினால் மன்னரது உயிருக்கு ஆபத்தில்லையே!"—அச்சம் கலந்த குரலில் கேட்கிறாள், அரசி.

"உயிர் போகாது உடல் நோவினால் வருந்துவார். அவ்வளவுதான். அதற்குள் நான் வந்துவிடுவேனே! மருந்தை குலச்சிறை யாரிடம் கொடுத்தனுப்புகிறேன். உலகம் உள்ளளவும் சைவ சரித்திரம் உம்மைப் போற்றும். போய்வாருங்கள்."

* * * *

"குலச்சிறையாரே! இன்று இரவில் மன்னன் மருந்தை அருந்தும்படி செய்யவேண்டும். பாலில் கலந்து கொடுக்கச் சொல்லுங்கள். பத்திரம்!"

சம்பந்தரிடம் விடைபெற்றுக் கொண்டு மந்திரி போகிறார். நடு இரவு! சம்பந்தர், தான் இருக்கும் மடத்தில் தானே தீ வைக்கிறார். அக்னி பரவுகிறது. சம்பந்தர் சீறுகிறார். "சமணர்கள் சைவக் கோட்டத்திற்கு நெருப்பு வைத்து விட்டனர்! அந்த அயோக்கியர்களை ஆதரிக்கும் அரசனே! உன்னைச் சார்ந்தோர் இட்ட தீ உன்னையே பற்றட்டும்."—இது சம்பந்தரின் சாபம்.

* * * *

மறுநாள் மங்கையர்க்கரசி கொடுத்த மருந்து வேலை செய்கிறது மன்னனுக்குப்பிணி பற்றுகிறது. சூழ்ச்சியை அறியாத மக்கள் சம்பந்தரின் சக்தியைப் போற்றுகின்றனர். சமணர்கள் வியாதியை வீழ்த்த மருந்து கொடுக்கின்றனர். அரசி நோயுண்டாகக் கொடுக்கிறாள்! நோய் மாறவில்லை! வியாதியால் வருந்தும் வேந்தனிடம், அரசியும், அமைச்சரும், சம்பந்தரைப் பற்றியும், அவரது சக்தியைப் பற்றியும், புகழ்கின்றனர். மன்னன் மனம் மாறி சம்பந்தரை அழைத்துவர ஆணையிடுகிறான். சம்பந்தர் விஜயம் செய்கிறார்... மாற்று மருந்து கலந்த விபூதி வேந்தனது நோயைப் போக்குகிறது.

"சம்பந்த சுவாமிகளே! சைவமே உண்மை மதம், சிவனே தெய்வம்! இதுவரை உண்மை அறியாது சமண சாக்கடையில் சிக்கியிருந்தேன். என்னை மன்னித்தருள வேண்டும்."

திருஞான சம்பந்தர் பாண்டியனை ஆசீர்வதிக்கிறார்.

"மன்னவனே! பிணிக்கும் பாமனுக்கும் தொடர்பு இல்லை; மருந்திற்கும், வியாதிக்குமே தொடர்பு! இது சைவர்களின் சூழ்ச்சி. ஆட்கொல்லியான ஆரியத்தை அணைக்காதீர்! எதிர்கால சந்ததிக்கு இழுக்கைத் தேடாதீர்! இவர்கள் தர்க்க வாதத்தில் எங்களை வெல்லட்டும், பிறகு தாங்கள் ஆரியமதத்தைத் தழுவுவது பற்றி எங்களுக்கு ஆட்சேபனையில்லை"—இது சமணர்களின் வேண்டுகோள்.

"காவலனே! களிமண் சுவர் கற்கோட்டையை எதிர்க்கிறது. தர்க்கவாதம் எனக்குத் தலைகீழ்ப் பாடம்! வாதம் புரிகிறேன்; இந்த வம்பர்களை வெல்லுகிறேன். வெற்றி பெற்றால் என் விருப்பப்படி செய்ய வேண்டும்! இந்த வீணர்களின் பரம்பரையை வேரோடு அழிக்க வேண்டும். சமண சிங்காரிகளின் கற்பு சிதைக்கப்பட வேண்டும். சமணப் பெண்கள், ஆண்கள், பிஞ்சு, பசுலைகள் அனைவரையும், கழுவிலேற்றிக் கதறக் கதறச் சாகடிக்க வேண்டும். ஒன்றில் சமணம் ஒழியட்டும் அல்லது சைவம் அழியட்டும்."—இது சம்பந்தரின் சங்கொலி! தீ கக்கும் வார்த்தைகளின் தொகுப்பு!

"தர்க்கவாதத்தின் பொருள் அறிஞர்களால்தான் அறியமுடியும். பாமரர்களால் உணர முடியாது. ஆகவே விழிகளுக்குப் புலனாகும் வாதம் புரிவதே விவேகமாகும். சைவத்தின் சாரமே இதுதான்! சமணர்களுக்குத் தாங்கள்தான் கற்றவர்கள் என்ற கர்வம்! அதனால்தான் இப்படிக் காட்டுக் கூச்சல் போடுகின்றனர்."—இது குலச்சிறையாரின் கூற்றல்! அவருக்குத் தெரியும் தர்க்க வாதத்தில் சமணர்களை வெல்லமுடியாதென்று!

"தர்க்கவாதத்தைத் தவிர வேறு எதற்கும் நாங்கள் தயாரில்லை, உங்களைப்போல மதத்தின் பெயரால் தந்திரங்களைச் செய்து மக்க

ளைக் கருத்துக் குருடர்களாக்க எங்களுக்கு மனமில்லை"—கூறுகின்றனர் சமணர்கள்.

* * * *

அவர்களது வார்த்தைகள் அலட்சியப் படுத்தப் படுகின்றன. தீ மூட்டப்படுகிறது. சைவமத ஏடும், சமணமத ஏடும், எரிதீயில் இடப்படுகின்றன. பச்சிலை பூசிய சைவ மத ஏடு அப்படியே இருக்கிறது. சமணமத ஏடு சாம்பலாகிறது. சம்பந்தா வெற்றிக்களிப் போடு சமணர்களைப் பார்க்கிறார்.

"சிவநெறி உணராத சண்டெலிகளே! விழிகளை விரித்து வைத்து நோக்குங்கள்! கற்ற கசடர்களே! சைவம் பெற்ற சம்பந்தனின் சக்தியை நோக்குங்கள்! காற்றை எதிர்த்த சருகுகளே! உங்களது கனவு கருவிலே சிதைவதைக் காணுங்கள்!"—சம்பந்தர் ஓய்கிறார்.

கலைக் குதவாத இந்தக் காட்சியையும், சம்பந்தரின் மட்டரகப் பேச்சையும் கேட்ட சமணர்கள் வெளியேறுகின்றனர்.

"மதுரை மன்னவனே! சைவத்தின் பெருமைக்கு இந்த சாம்பலாகாத சுவடிகளே சாட்சி! சம்பந்தனின் சக்தியில் இன்னுமா, சந்தேகம்? தாமதம் வேண்டாம். சிவத் துரோகிகளின் சித்திரவதைப் படலம் ஆரம்பமாகட்டும! ஆயிரம் கழுமரங்களில் அவர்களது ஆவிகள் போக்கப்படட்டும்! அருகமதத் தவர் அத்தனை பேருக்கும் இதுதான் கதி என்பதை உலகம் அறியட்டும்! உம்...ஆணையிடும்...." சம்பந்தர் சட, சட, வெனப் பேசி முடிக்கிறார்.

அரசியின் ஆசை வார்த்தைகள்! மந்திரியின் மயக்க மொழிகள்! சம்பந்தரின் சரசப் பேச்சு! இவற்றிடையே சிக்குண்ட மன்னன் மதவெறியின் பிரதிநிதியாக மாறுகிறான். சம்பந்தரின் ஆசையை நிறைவேற்ற தன் சேனைகளுக்கு ஆணையிடுகிறான்...... சம்பந்தர் தன் தந்தையை வரவழைக்கிறார். எதற்கு? சமணர்களின் சாவைக்கண்டு சந்தோஷப்பட.

இரண்டாயிரம் கழுமரங்களில் ஆண்களும், பெண்களுமான சமணமதத்தவர்கள் ஏற்றப்படுகின்றனர்! ஆம், அக்ரமம் ஆனந்தக் கூத்தாடும் காட்சி! வேந்தனின் விழிகளில் மதவெறி வழிந்தோடுகிறது! மங்கையர்க்கரசியின் முகம் மலர்கிறது! குலச்சிறையார் குதூகலிக்கிறார்! சம்பந்தரோ..........!

"பிதாவே! பாருங்கள்! பார்ப்பனீயத்தை எதிர்த்த பட்டுப்பூச்சிகளைப் பாருங்கள்! சைவத்திற்குச் சமாதி எழுப்ப எண்ணிய சமணர்களின் சாவுக் களத்தைப் பாருங்கள்! ஆடுகளை யாகத்தில் தள்ளுவது பொல்லாது என்று போதனை புரிந்துவந்த பிள்ளைப் பூச்சிகளைப் பாருங்கள்! கொலை வேள்விகள் கூடாது என விண்ணதிரக் கொக்கரித்த அவர்கள் நாக்குகள் வெளியே தொங்குவதைப் பாருங்கள்! நம்மேல் கேலிப் பார்வையை வீசிய அவர்களது விழிகள் பிதுங்குவதைப் பாருங்கள்! அதோ அந்த இளம் பெண்களைப் பாருங்கள்! நம்மைக் காட்டுமிராண்டிகள் என்ற அந்த கட்டழகிகள் கசங்கிய மலர்களாய்க் கழுவேற்றப்படுவதைப் பாருங்கள்! அவர்களது குடல் சரிவதைக் கண்டு குதூகலிப்போம்! அவர்களது இதயம் இரண்டாகக் கிழிக்கப்படுவதைப் பார்த்தக் களிப்போம்! அவர்கள் ரத்தம் கக்குவதைக் கண்டு ரசிப்போம்!......ரசனைக்கேற்ற நிகழ்ச்சி! சைவத்திற்கு நல்ல விருந்து!" சம்பந்தர் சதுராடுகிறார்; களிப்பால் கனல் சொற்களைச் சொரிகிறார்.

* * *

அருகமதம் அழிக்கப்பட்ட வரலாறு! ஆரியம் அரியாசன மேறிய நிகழ்ச்சி! இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட சமணர்களது இதயங்கள் கீறியெறியப்பட்ட கோர சம்பவம்! இது உண்மையிலேயே ஒரு சோக சித்திரம்! விம்முதலைத்தரும் வேதனை வரலாறு!

---

ஒரு நாட்டு ஆட்சியாளர்களின் உண்மைப் பலம், அவர்களுடைய சேனாவீரர்களின் எண்ணிக்கையிலேயோ அல்லது அவர்கள் நாட்டில் மூட்டிவிடும் உணர்ச்சி அலைகளிலேயோ அடங்கியில்லை; அந்த நாட்டு ஆட்சி நல்ல ஆட்சிதான் என்று மக்கள் எண்ணும் எண்ணத்தில்தான் அடங்கியிருக்கிறது. எந்த வினாடியில் இந்த எண்ணம் மக்கள் மன்றத்திலிருந்து மறைந்துவிடுகிறதோ அந்த வினாடி முதல் அந்த ஆட்சி ஆட்சி அல்ல—ஒரு கொள்ளைக் கூட்டம்தான் என்பதை நாம் தாராளமாகக் கூறலாம்.

—எச். ஜி. வெல்ஸ்

## இல்லாத பொங்கல்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேதனையின் பிம்பங்களாக, துயரத்தின் சின்னங்களாக, சோக சித்திரங்களாக, சஞ்சல உருவங்களாக, பாலைவன வாழ்வினராக வாழ்கிறார்கள் தமிழர்கள். வாழ்கிறார்களா —இல்லை—செத்து மறைகிறார்கள்.

ஆம்! பட்டினிச சாவுகள் ஒன்று—இரண்டு—மூன்று என்று பட்டியல் போடவேண்டிய அளவு நிலைமை மோசமாகிவிட்டது. உணவுப் பிரச்சினை, ஊர் நிலையை உணர்ந்துபார்க்கத் தெரிந்தவர்கள் அத்தனைபேர் உள்ளத்தையும் கண்ணீர்க் கடலாக்கிவிட்டது.

உணவுப் பிரச்சினையை உல்லாசப் பிரச்னையாக்கி, ஊர் மக்கட்கெல்லாம் உன்னதமான உணவைத் தந்து, ஊரெங்கும் இன்பநடனத்தை உருவாக்கிக் காட்டவேண்டிய பொறுப்பும் கடமையும் வசதியும் வாய்ப்பும் பெற்றுள்ள ஆளவந்த அன்பர்களோ இது பற்றி அணுவளவும் கவலையற்றிருக்கின்றனர்.

ஆறு அவுன்ஸ் அரிசி! அதுகூடக் கிடைக்க வில்லை பெரும்பாலான இடங்களில்! பட்டினிப் படலம் வீட்டுக்கு வீடு! இது, நாட்டு நிலை! இந் நிலையில் பொங்கல் விழா!

பொங்கல் புதுநாள்—உணவுப் பொங்கல் இல்லாக் காலத்தில்!

பொங்கல், நம்முடைய ஒப்பற்ற திருநாள்! தமிழகத்தின் விழா நாள்! உழவர்தம் உன்னதநாள்! ஆரிய வாடை வீசாத நாள்! மனமெனும் கழனியில் மகிழ்ச்சிப் பயிரைத் தூவிடவேண்டிய நாள்! ஆம்! பொங்கல் இவ்வளவு சீரும் சிறப்பும் தனிப்பெரும் புகழும் படைத்த விழாதான்! ஆனல் அந்த விழாவை வேதனையின்றிக் கொண்டாடுதற்கு வேண்டிய உணவுப் பொருள்கூட நமக்குக் கிடைக்கவில்லை!

இப்படி ஒரு நிலை! இந் நிலையிலே நாடு! இந்த நாட்டிலே நாம்! இனியும் இருக்கலாமா இந் நிலை?

கூடாது என்றுதான் எவரும் கூறுவர். ஆனல் இந்த வேதனைமிகு நிலையைப் போக்கி, உணவுப் பிரச்சினையைத் தீர்த்து, நாடெங்கும் பவனிவரும் பட்டினிப் பட்டாளங்களை மகிழ்ச்சிமிகு சேனைகளாக மாற்றி, நாட்டை, இன்பபுரியாக மாற்றுவதெப்படி?

அதைத்தான் சிந்திக்க வேண்டுகிறோம் உங்களை—சிந்தித்துச் செயல்புரிய வேண்டுகிறோம்.

அந்தச் சிந்தனையையும் செயல் திறத்தையும் உங்களிடம் தூண்டுவதற்காகவே, இப் பொங்கல மலர், உங்களை நாடி வந்திருக்கிறது.

இந்த ஆண்டில் வந்துள்ள பொங்கல் துன்பத்தின் தூதுவனாக இருந்தபோதிலும், அடுத்த ஆண்டுப் பொங்கலேனும் புன்னகையையும் பூரிப்பையும் நாட்டு மக்கட்கெல்லாம் நயந்தளிக்கும் நிலையினதாக அமையவேண்டும். ஆம்! அமைக்கவேண்டும் நீங்கள்.

அமைப்பீர்களா?

இந்தக் கேள்வியைத்தான் உங்களை நோக்கிக் கேட்கிறது எதிர்காலம்.

என்ன விடை தருகிறீர்கள் நீங்கள்?

---

இராதாமணாளன் இயற்றிய
புதிய நூல்!
★
இளவரசி!
★
எழிலும் சுவையும் ததும்பும்
இனியதோர் நாவல்!
★
விலை ரூ. 1 8 0
பகுத்தறிவுப் பாசறை
பவழக்காரத் தெரு, :: சென்னை 1.

தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு எங்கள்
பொங்கல் வாழ்த்து
★
மதுரையில்
கவியரசர் பாரதிதாசன், மு. வரதராசன், அண்ணாதுரை, சுத்தானந்தபாரதியார், வெ. சாமிநாத சர்மா, இராதாமணாளன், கருணாநிதி, ரகுநாதன், அகிலன், மற்றும் மாஸ்கோ P. P. H. வெளியீடுகளும்
கிடைக்குமிடம்:—
பாரதி புத்தக நிலையம்
வக்கீல் புதுத்தெரு, மதுரை.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons.)


விரைவில் வெளிவருகிறது!
ஜுபிடரின்
மர்மயோகி
டைரக்ஷன்· கே. ராம்நாத்
ஸ்டுடியோ· சென்டரல்.
JUPITER PICTURES CIRCUIT

